

மிழரசு
ஐப்பசி

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற் | |
| | பினங்கு, சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | |
| | ஜீவிய சந்தா | 20— |
| | தனிப் பிரதி விலை | 0—1 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0—2— |

**மாதிரி சஞ்சிகை இனும்.**

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

ஒவ்வொரு ஆங்கில மாதம் 15-ஆம் தேதியிலும் வெளிவரும்.

---

## விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| உட்பக்கம் | ஒன்றுக்கு | 1-மாதத்திற்கு | ரூ. 15—0—0 |
| ,, | அரைப் பக்கத்திற்கு | ,, | 8—0—0 |
| ,, | கால் பக்கத்திற்கு | ,, | 5—0—0 |
| கவர் | 3-வது பக்கத்திற்கு | ,, | 20—0—0 |
| ,, | 4 ,, | ,, | 25—0—0 |

இதர விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

'தமிழரசு' ஆபீஸ்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை

---


வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !

# தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அற பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் வி கும். இதன் முன் பாகத்தைச் சென்ற வருட 'தமிழரசு' இ களில் தொடர்ச்சியாகப் படித்த நேயர்கள் நாள்தோறும் இப் பு கத்திற்கு ஆடர் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந் நூலைச் பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கு படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்தி படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை

எட்டணா தான்

... அச்சிட்டிருப்பதால் முந்திக் கொள்ளுங்க

...மிழரசு' புத்தகாலயம்,

... லிவீதி சென்னை.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

# ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்து விட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட் டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அநேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அநுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட் டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

2439
ACL-TNAL 03392

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் எழுதிய

## அனுபவ வைத்திய நூல்

(இரண்டாம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாத தாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவே யிருப்பது போலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலை வைத்துக்கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்திய ராகலா மென்பது திண்ணம்.

முன் பதிப்பைவிட இப்பதிப்பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுள்ளது. சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. முந்துங்கள்.

இதன் விலை ரூபா 2.

பழய 2-ஆம் பாகம் விலை அணா 8. தபால் சார்ஜ் வேறு

---

உங்கள் கைரேகைப் பலன்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

## திரிகால ரேகை சாஸ்திரம்

(இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகம் தூய்மையான தமிழில் எளிய நடையில் படங்களுடன் விளக்கமாய் அனுபவ ஹஸ்த ரேகை சாஸ்திர ஆசிரியரான சக்தி தாஸரால் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்தும், இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும் கை ரேகைகளின் குணகுணங்களைப் பார்த்தும், ஒவ்வொருவரும் அவரவர்களின் ஆயுள், விவாகம், சந்தானம், பக்தி, அதிர்ஷ்டம், கண்டம், காரியசித்தி, இல்லற சுகம் முதலியவைகளை எல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் வேண்டுவோர் பன்னிரண்டு அணா ஸ்டாம்புகள் அனுப்பி அன்ரிஜிஸ்டர் பார்சலாகப் பெற்றுக் கொள்ளலாம். வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

'தமிழரசு' புக்டிபோ,

31, வைத்தியநாத முதலி தெரு, ஜி. டி. சென்னை.

# இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட்டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை அளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது அள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தியுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

மானிலமீது மாண்புமிக்க மாசிலா திலக, சென்னை 6-11-1935.

எனது மனமார்ந்த வந்தனம் தங்களுக்கு உரியதாகுக.

நிற்க, எனக்கு விவாகமாகி 9 வருட காலமாயும் இதுவரையில் என் மனைவிக்கு குழந்தை உற்பவித்தியாகாதபடியினால், ஆங்கில, யூனானி, தமிழ் வைத்தியர்களிடமெல்லாம் எவ்வளவோ மருந்துகள் வாங்கிக் கொடுத்தும் பார்த்தேன் ஒன்றும் பலனில்லை. கடைசியில் கவர்மெண்ட் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் காண்பித்ததில் வயிற்றை ஆப்ரேஷன் செய்து கெர்ப்பப் பையை சரிப்படுத்தினால் தான் குழந்தை பிறக்குமென்பதாக சொல்லி விட்டார்கள். அதன் பின்னர் வைத்திய ஆசிரியர்களென்று சொல்லிக் கொள்ளுகிறவர்களிடமெல்லாம் மருந்து வாங்கிக் கொடுத்தேன். அவைகளிலும் ஒன்றும் சுகமேயில்லை. என் மாமியார் வீட்டாரும் எவ்வளவோ மந்திர தந்திரங்களெல்லாம் செய்து பார்த்தார்கள். இவைகளிலெல்லாம் வீண் கஷ்ட நஷ்டங்களும் உண்டாயினவே ஒழிய பலன் ஒன்றையும் காணோம். முடிவாக தங்களிடம் என் மனைவியை நேரில் அழைத்துக்கொண்டு வந்து காண்பித்ததின் பேரில் தாங்கள் என் மனைவிக்குமட்டும், கொடுத்த பஸ்பத்தினாலும் மாத்திரைகளாலும் என் மனைவிக்கிருந்த கெர்ப்பப்பை கோளாறுகள் யாவும் நீங்கி இப்பொழுது ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது என்பதை அளவிலடங்கா ஆனந்தத்துடன் தங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

குறிப்பு:—இந்நற்சாக்ஷியை தங்களுடைய தமிழரசு, பத்திரிகையில் பிரசுரம் செய்து வந்தால், என் போன்ற எத்தனையோ சகோதரர்கள் புத்திரனில்லையே, புத்திரனில்லையே என்றாட்டும் ஏக்கத்தை

விடுத்து கற்புத்திரபேற்றை பெற்ருனந்திப்பார்களெனும் நோக்கத்துடன் இதை தங்களிடம் விண்ணப்பத்துக் கொள்ளுகின்றேன். நீடிய ஆயுளையும் நல்ல திடத்தையும் இறைவன் தங்களுக்கு அருள் புரிவானுகவும்.

இங்ஙனம் சென்னை மாகாண சீர்திருத்த தொண்டர்களில் ஒருவரும் சென்னை தாழ்த்தப்பட்டார் தொண்டர்படையின் பிரசாரகருமான தங்கள் பணிவுள்ள, காசிமேடு - அ. பாலகிருஷ்ணன்.

---

நல்லத்துரை, I7—12—33.

டாக்டர் M. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, வந்தனம்.

தங்களிடமிருந்து 2 புட்டி இன்பசார மாத்திரை வாங்கி கொடுத்ததில் எனது குமாரத்திக்கு பல பிரபல இங்கிலீஷ் டாக்டர்களால் கன்சம்ஷன் என்று சொல்லிய வியாதி தற்போது குணமடைந்து உடம்பில் திடமும் கொடுத்து வருகிறது. சரீரம் பெருத்தும் இருக்கிறது. இன்னும் மருந்து சாப்பிட்டு வருகிருள். மருந்து சாப்பிட ஆரம்பித்த பின் இன்னும் பிரவர்த்திக்கு கொடுக்கவில்லை. மாத்திரை சாப்பிடும்காலத்தில் பிரவர்த்தி கொடுப்பது உசிதமா? கொடுக்கலாமென்ருல் என்ன கொடுப்ப என்பதை தயவுசெய்து தெரிவிக்கவும். ஒரு புட்டி இன்பசார மாத்திரை அடியில் கண்ட விலாசத்திற்கு V. P. யில் அனுப்பவும். எம். கே. வீரராகவன்.

எலக்டிரிக் சிட்டி டிபார்ட்மெண்டு நெல்லிதுரை.

---

திருவாளர் மாசிலா திலக ! கொளும்பு, 7-2-1934.

தங்களின் அரிய தேசசேவையுடன் பிணியகற்றும் உண்மை திறனைக்கண்ட யாங்கள் தங்களின் விசேஷ கவனத்தின் மூலம் கீழ்க்கண்ட விபாத்தை யறிந்து தகுந்த ஔடதத்தின் மூலம் சொஸ்தப்படுத்தி புகழுடன் புகழடைந்து திகழவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

கீழே குறிப்பிட்ட ஊரிலிருக்கும் எனது நண்பரின் மனைவிக்கு வயது 24 விவாஹமாகி 3 வருஷம் சுமார் $1\frac{1}{2}$ வருஷத்திற்கு முன்னுல் கெர்ப்பம் தரித்திருந்த காலத்தில் உஷ்ண மிகுதியால் 7 வது மாதத்தில் சாயுங்காலம் 6 மணி கர்ப்பின்னுடல் கண்பார்வை குறைந்தும் சரீரக் கோளாறிஞல் 8 வது மாதமே குழந்தையை குறை வயதுடன் பிரசவிக்க குழந்தை தவறிப்போய் விட்டது. பினனுல் இது காலபரியந்தம் கெர்ப்பந்தரியாமலும் மாதவிடாய் காலத்தில் 3 நாளைக்கும் வயிற்றுவலியால் உபத்திரவப்படுவதுமாயிருக்கிறதுடன் தற்பொழுது மேலே காட்டியபடி சாயங்காலம் 6 மணிக்கு பின்னுலும் பகல் 12 மணியானுலும் கண்ணெறி மங்கி பார்வை குறைவதுமா யிருக்கிறது. ஆகவே தாங்கள் கிருபையுடன்

மேலே குறிப்பிட்ட வியாதியின் தன்மைகளை அறிந்து தகுந்த ஒளடதங்களை கீழ்க்காணும் விலாசதாருக்கே அனுப்பி அவர்களை மகிழ்வடைய செய்வீர்களென நம்புகிறேன்.

தங்களின் இன்பசார மாத்திரையை தங்களை நேர்முகமாய் பார்த்துவந்த நண்பர் S. நாகலிங்கம் மூலமாக வரவழைத்து சாப்பிட்டதில் எங்கள் தேகத்தில் கண்ட மேலான வீரத்தன்மைகளை யறிந்து தங்களுக்கு நன்றி செலுத்துவதுடன் தமிழுலகில் மங்கிப் போய் கிடந்த வைத்திய முறையை புத்துயிரளித்த பெருமை தங்களுக்கே உரியதாகும்.

மேலே காட்டிய வியாதிக்குத் தகுந்த மருந்துகளை அனுப்பி மருந்துடன் முறைகளையும் விபரமாக எழுதி அனுப்பவேணுமாய் கோருவதற்கு இத்துடன் ரூ. 5ம் அனுப்பி யிருக்கிறது. கிடைத்தவுடன் தங்கள் சித்தம்போல் அதற்கான மருந்துகளை அனுப்பி ரூபாய் 5-க்கு மேல் வரும் கிரையங்களுக்கு இவ்விடம் எழுதி யனுப்பினால் உடனே மணியார்டர் மூலம் பணத்தை அனுப்பி வைக்கிறேன் தயவுடன் கிருபை கூர்ந்து உடனே கவனிக்க வேணுமாய் கோருகிறேன்.

இ. மாணிக்கம் பிள்ளை.

மருந்து அனுப்பும் விலாசம்.—

டி. பி. ராயப்பன் பட்டங்கட்டியார்,

இடிந்தகரை போஸ்டு, திருநெல்வேலி ஜில்லா, தென் இந்தியா.

---

23—9—33.

திருவாளர் டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்கள் சமுகத்திற்கு சிவசுப்பிரமணியன் எழுதிக் கொண்டது: நான் இரங்கூனிலிருந்து (14–8–33) வந்து தங்களை நேரில் கண்டு எனக்கு என்ன சிக்கென்று சோதித்ததில் (க்ஷயரோகம்) மேக சுரமென்றும் ஒரு புட்டி இன்பசார மாத்திரை சாப்பிடும்படியும் கோழி முட்டை வெண்கருவும் உளுத்தமாவும் பக்குவம் செய்து சாப்பிடும்படியும் நாற்பதுமிழகு சூடாரின ஜலத்தில் ஊரவைத்து காலைமாலை சாப்பிடும்படியும் சொல்லியதுபோல் அவ்விடமிருந்து வந்ததும் நாள் தவறாது சாப்பிட்டு வருகிறேன். அவ்விதம் சாப்பிட்டு வந்ததில் இப்போது சுரம் வருவதில்லை. இருமல் சாந்தமாகி விட்டது. இலேசாய் இருமல் இருந்தாலும் கோழை வருவதில்லை. வரண்ட இருமலாக இருக்கிறது. அதுவும் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று முறையே அதற்கு மேலில்லை அதனால் சிரமம் ஒன்றும் தோன்றவில்லை தேகம் எந்த நேரமும் அதிக உஷ்ணமாக காய்ந்துக்கொண்டே இருக்கிறது.

தங்கள் நேரில் கையும் காலும் கடுப்பதாக சொன்னேன் ஞாபகமிருக்கலாம் இப்போது வலது கால்மட்டும் பதினைந்து நாளாய்

பெரும் உபத்திரவமாக கடுத்துக்கொண்டிருந்து உபசாந்திகள் யெவ்வளவு செய்தும் பயன்படவில்லை. இப்போது சொற்ப குணமாகத் தெரிகிறது.

இன்பசாரத்தால் எனக்கு ஏற்பட்டிருந்த மலபந்தம் நிவர்த்தியாயிற்று ஆனாலும் மாத்திரையை ஒருநாள் சாப்பிடாமல் நிறுத்தினால் மலபந்தம் உண்டாகி விடுகிறது.

மாத்திரையும் கைவசம் மூன்று நாளைக்குதானிருக்கிறது. முன்னமே ஒருபுட்டி மாத்திரை சாப்பிட்டால் போதுமென்றும் அப்பால் சகலமேக சித்தாதி எண்ணை ஆறு புட்டி வரை சாப்பிட வேணுமென்றும் சொன்னீர்கள். இப்போது எனக்கு இருக்கும் மேலேகண்ட குணங்களை தெரிந்து எந்த மருந்து மாத்திரையோ அல்லது எண்ணையோ சாப்பிட வேண்டிய மருந்தை எழுதியும் ஒரு புட்டி மருந்தும் V. P. யில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஏ. ஆர். எஸ். பி. சிவசுப்பிரமணியன் சர்வெய்.
எஸ். என். எம். எஸ். சோணமுத்து அம்பலம்,
வேப்பங்குளம் கல்லல் போஸ்டு.

---

ஆலம்பூண்டி போஸ்டு, 5—10—33.

திருவாளர் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

ராமச்சந்திர சாஸ்திரி மிகவும் வணக்கத்துடன் எழுதிக் கொண்டது. நான் சுமார் 2 மாதத்துக்கு முன் தங்களிடம் 7, 8 வயது பெண் குழந்தையை அழைத்துக்கொண்டு நடேச சாஸ்திரியுடன் தங்களிடம் வந்து பார்த்தேன். அந்த குழந்தையை கைபார்த்து கன்ஸெம்ஷன் வியாதியாக இருக்கிறதென்று சொன்னீர்கள் அதற்கு இன்பசாரம் என்னும் 30 மாத்திரைகள் அடங்கிய ஒரு பாட்டல் வாங்கி வந்து தாங்கள் சொல்லியபடி மாலையில் ஒரு வேளை அறை மாத்திரை வீதம் கொடுத்து வந்ததில் 60 நாள்கள் சாப்பிட்டு வந்ததில் சாப்பிட ஆரம்பித்தது முதலாக நாளடவில் பசியுடன் சாப்பிட்டு சரியான ஜீரணசக்தியும் தேக ஆரோக்கியமும் ரத்தவிருத்தியும் ஏற்பட்டு உங்களுடைய தயவினால் வியாதி குணமாக தெரிகிறது. தாங்கள் சொல்லியபடி மறுபடியும் சாப்பிடுவதற்கு ஒரு பாட்டல் இன்பசாரம் என்னும் மாத்திரை வி. பி. மூலமாய் அடியில்கண்ட விலாசத்திற்கு அனுப்பினால் மாத்திரை கிரயம் ரூபா 5—0—0 யும் வி. பி. சார்ஜும் கட்டி பெற்றுக்கொள்ளுகிறேன். தயவு செய்து தவறாமல் இந்த லெட்டர் கண்டவுடன் மறு தபாலுக்கே மாத்திரை அனுப்ப கேட்டுக் கொள்ளுகிறேன். 10—10—33 க்குள் மாத்திரையை எதிர்பார்க்கிறேன்.

எம். கே. வீரராகவய்யர்.
ஆலம்பூண்டி போஸ்டு, செஞ்சி தாலுக்கா.

கனம் டாக்டர் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணு அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

---

ஹகீம் டாக்டர் அவர்கள் நேரில் சொன்னதாவது:

இன்பசார மாத்திரையை சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜி கனம் மாதவன் நாயர் அவர்களின் மனைவிக்குக் கொடுத்து குணம் கண்டாராம். அவ்வம்மையாருக்கு மூளை சம்பந்தமான வியாதி இருந்ததாயும் இருட்டறையிலேயே சதா இருக்கவேண்டும் இல்லாவிடில் மயக்கம் வந்துகொண்டிருந்ததாம். இவ்வியாதிக்காக ஐரோப்பா நாடுகள் பூராவும் சுற்றி அவ்விடத்திய தேர்ந்த வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்தனர்களாம். இந்தியாவிலும் தேர்ந்த வைத்திய நிபுணர்களால் சிகிச்சை செய்தும் குணமாகாதிருந்ததாம். அத்தகைய வியாதியை தன்னிடம் காண்பித்ததாயும், அதற்கு என்ன செய்யலாம் என்று என்னைக்கேட்டபோது நான் இன்பசார மாத்திரையைக் கொடுத்தால் குணமாய்விடும் என்று சொன்னதின் பேரில் மேற்படி மாத்திரையைக் கொடுத்து நோய் பூராவும் குணப்பட்டு தனக்கு நல்ல பெயர் கிடைத்ததாய் சொன்னார். இதனை சூசகமாய் தமது மதிப்புத்தாளில் குறித்திருக்கின்றார். மே. மா.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலித் தெரு, சென்னை.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

## ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

**ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்**


| மலர் | யுவ௵ பங்குனி௴ | இதழ் |
|---|---|---|
| 7 | 1936௵ மார்ச்சு௴ 15௳ | 3 |


## பொருள் அடக்கம்


ஆசிரியர் குறிப்புகள் ... 162
வேலூர் சிவிக் போர்டின் மோசமான நியமனம் ... 169
வேலூர் சிவிக் போர்டு ... 173
காதலுங் காமமும் ... 177
வெளி விகடம் ... 180
'கமலநாதன் அல்லது நட்பின் பெருமை ... 183
கதையின் பயன் ... 193
கமலகாந்தா ... 198
கோமளசேகரன் ... 202
காதலரைப் பிரித்த காதகர் ... 211
'விஜயராம் அல்லது போலிச் சாமியார் ... 221
காவேரிப் புராணம் ... 228
புனர் ஜென்மம் அல்லது பைத்தியத்தின் மர்மம் ... 233
உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சலா ... 239



குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள்யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.




## காலஞ்சென்ற ஸ்ரீமதி கமலா

ஸ்ரீமதி கமலாநேரு காலஞ்சென்று விட்டதாய் 28—2—36ந் தேதி ஜனீவாவிலிருந்து வந்த செய்தி எல்லோரையும் கலங்கும்படிச் செய்துவிட்டது. அதற்கு முதல் நாள் தான் அவர் நிலைமை முன்னைவிட சிறிது குணமாய் இருப்பதாகவும், ஆகாரம் சிறிது செறிக்கிறதென்றும், அதனால் பண்டித ஜவஹர்லால் நேரு 29—2—36ல் இந்தியாவுக்குப் புறப்படுவார் என்றும் செய்தி வந்தது. இச்செய்தி வந்த மறுநாள் ஸ்ரீமதி நேருவின் நிலைமை சிறிது மோசமாய் இருப்பதாகவும், அதனால் அவரின் அன்புகனிந்த நாயகர் புறப்படுவது நின்றுவிட்டது என்றும் செய்தி வந்தது. அச்செய்திக்கு பின்னாலேயே அவர் மரித்துவிட்டார் என்று செய்தி வந்துவிட்டது. சிறிது குணமாயிருப்பதாய் செய்திவந்த மறுநாளே அவர் மாண்டுவிட்டார் என்று செய்தி வந்ததால் எல்லோரும் கலங்கிவிட்டனர். ஸ்ரீமதி கமலாநேரு முதிர்ந்த வயதுடையவரல்ல. அவரை யௌவன பருவ மங்கையென்றே கூறலாம். எனவே அவர் மரணம் அகாலமாணமேயாம். அவர் செல்வத்திற் பிறந்து செல்வப் பூமானுக்கு மாலையிட்டார். 'கொண்டான் குறிப்பறிந்து' நடக்கும் உத்தமியார். தேசப் பணியில் அவர் தனது நாயகனுக்கு ஆதாவளித்து அவருடன் ஒத்துழைத்து தனது நாயகன் விருப்பப்படியே எளிய வாழ்க்கையை கைக்கொண்டார். தேசப்பணி செய்வதில் அவர் வீரம் செறிந்தவர். சத்தியாக்கிரக காலத்தில் அவர் சிறைவாசமும் சென்றார். தான் நோய் வாய்ப்பட்டிருந்தும் அவர் தனது நாயகரை தனக்காக தேசப் பணி செய்வதை விட்டுவிடவேண்டாம் என்று சொல்லி காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்று இந்தியாவிற்கு போகும்படி வற்புறுத்திய அரிய தியாகஞ் செயலொன்றே அவருக்குள்ள வீரத்தையும் தேசாபிமானத்தையும் தேசப்பணியில் அவருக்குள்ள ஆர்வத்தையும் காட்டப் போதுமானது. அவர் இந்திய மாதர்கட்கு ஓர் திலகமாக விளங்கினார். அவர் மரணம் அவரின் குடும்பத்தாருக்கு பெரிய நஷ்டமாவதுடன் தேசத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பெரும் நஷ்டமாகும். அவருடைய மரணத்தால் இந்தியமாதா ஓர் அருந்தவப் புதல்வியை, தான் பெருமை படக்கூடிய ஓர் புதல்வியை, தனக்கு பணியாற்றுவதே தன் கடனாகக்கொண்ட புதல்வியை இழந்துவிட்டாள். அவரை பறிகொடுத்து தவிக்கும் அவரின் நாயகரான பண்டித

ஜவஹர்லால் நேருவுக்கும் அவருடைய குமாரி ஸ்ரீமதி இந்திராவுக்கும் மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கும் நமது அநுதாபம் உரியதாகுக. அவருடைய ஆன்மா சாந்தி பெறுக!

## சென்னை சர்க்கார் செல்வ நிலை

சென்ற மாதம் சென்னை சர்க்கார் ரெவின்யூ மெம்பர் 1936—37ம் வருஷத்திய வரவு செலவை ஆஜர் செய்தார். அதில் குடிமக்கள் மனமகிழ்ச்சியடையும் படியான தொன்றுமில்லை. ஆனால் புதிய வரி எதுவும் விதிக்காமல் விட்டிருப்பதுதான் அதில் 'அப்படா' என்று பெருமூச்சுவிடுவதற்கான ஒரு அம்சமாகும். அவ்வரவு செலவு திட்டத்தில் தேசமுன்னேற்றத்துக்கான காரியங்கள் செய்ய ஒரு வகையும் செய்யப்படவில்லை. எல்லாம் பழைய பல்லவியாகவே இருக்கிறது. மொத்தம் 16. 20 கோடி வருமானம் என்றும், அவ்வரவுக்குச் செலவும் சரியாய் விடும் என்றும் மதிப்பிட்டிருக்கிறார். இதை போற்ற முடியாது. ரெவினியூ மெம்பர் தற்போது விலைவாசிகள் சிறிது உயர்திருப்பதாகவும் அதனால் வருமானம் அதிகரிக்கும் என்றும் மதிப்பிட்டு இவ்விதம் வரவும் செலவும் சரிக்கட்டிவிடும் என்று கூறுகிறார். விலை வாசிகள் உயர்த்திருப்பதாக அவர் கூறுவது நிச்சயமான காரியமல்ல. விலைவாசிகள் இறங்குபடியான நிலைக்குப்போம் என்றுதான் நாம் நம்புகிறோம். மற்றும் கடன் சமரசச்சட்டம் ஒன்றும் ஏற்பட்டுவிட்டதால் கோர்ட்கள் மூலம் வரும்வருவாயும் குறையலாம். அவரே கூறுகிறபடி இன்னும் சில பொருள்களின் விலைவாசிகள் இறக்கமாகவே இருக்கின்றன. கலால் வருமானமும் இனி நாளாவிர்த்தியில் சுருங்கிக்கொண்டேதான் போகும். எனவே கனம் மெம்பர் மதிப்பிட்டிருக்கும் அளவுக்கு வருவாய் வருமா என்பது சந்தேகத்திற்கிடமானதே. அந்த வரவு செலவில் கொஞ்சம் மனச்சாந்தி அளிக்க கூடியது விவசாயிகளின் கடன் நிவர்த்தி சகாயத்திற்கு 20 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதே. இது ஒன்றுதான் அதில் புதிய அம்சமாகும். இம்மாகாணத்தில் விவசாயிகள் சுமார் இரண்டு கோடி கடனில் மூழ்கி இருப்பதாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு கோடிக்கு இந்த 20 லட்சம் ஒரு திவலையே யாகும். என்றாலும் இவ்வளாவது சர்க்கார் முதல் தடவையாக தங்கள் பொறுப்பையுணர்ந்து விவசாயிகட்கு உதவ முன்வந்தது போற்றற்குரியதாகும். இனிவரும் வருடங்களின் அவர்கள் அத்தொகையை இன்னும் அதிகமாக்கி விவசாயிகட்கு பேருதவி புரிவர் என்று எண்ணுகிறோம். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வரவு செலவு திட்டத்தில் ஒருவகையும் செய்யப்படவில்லை. ஒருசமயம் டாக்டர் சி. நடேச முதலியார் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்காக ஒருலட்சம் ரூபாய் ஒதுக்கி வேலையில்லாதவர்

கட்கு ஏதாவது செய்யவேண்டுமென்று சட்டசபையில் ஓர் தீர்மானம்கொண்டு வந்தார். அப்பொழுது கனம் உள்நாட்டு மெம்பர் அவரை ஏளனம் செய்தார். பம்பாய் சர்க்கார் வேலையில்லாதவர்கட்கு ஏதாவது தொழில்முறை கற்றுக்கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியுமாவென்று பரீட்சித்துப் பார்க்க ரூ 50000 ஒதுக்கி இருக்கின்றனர். ஐக்கியமாகாண சர்க்கார் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க சர். தேஜ் பகதூர் செய்துள்ள சிபார்சுகளை நிறைவேற்றும் முகத்தான் வரும் வருடத்தில் 4 லட்சம் அந்த வகை செலவுக்கு ஒதுக்கி யிருக்கின்றனர். சென்னை சர்க்காரும் ஏன் அவ்விதமான ஓர் பரீட்சார்த்தமான திட்டத்தை கைக்கொள்ள கூடாது? மொத்தத்தில் வரவு செலவுத்திட்டம் ஏழைகட்கு உதவியளிப்பதாயுமில்லை, திருப்தியானதாயுமில்லை என்றே கூறவேண்டும்.

## இந்திய சர்க்கார் செல்வ நிலை

இந்திய சர்க்கார் பொக்கிஷ மெம்பரும் 28—2—36 ல் இந்திய சட்டசபையில் வரவு செலவுதிட்டத்தை ஆஜர்செய்தார். அவர் 1936-37 ல் 87. 35 கோடி வருமானம் வரும் என்றும், 85. ::5 கோடி செலவாகும் என்றும் 2. 05 கோடி மீறும் என்றும் மதிப்பிட்டிருக்கிறார். இராணுவச் செலவு குறைக்கப்படவில்லை. இன்னும் வருவாயில் பாதிக்குமேல் இராவணுவத்திற்கே செலவிடப் படுகிறது. ஏழைகளுக்கு உபகாரமாயிருக்கக்கூடிய வழியில் வரி எதுவும் குறைக்கப்படவில்லை. தபால்கட்டணம் குறையவில்லை. பத்திரிகைகட்கு தந்திக்கட்டணம் குறைக்கப்படவில்லை. ஆனால் 2000 வருமான முடையவர்கட்கு வருமானவரி எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றைப்படி அத்திட்டத்திலும் புதிய போற்றத்தக்க அம்சங்களொன்றுமில்லை. இந்திய சர்க்கார் கையில்1934–35ல் எச்செலவும் போக 4. 95 கோடியும், 1935–36ல் எச்செலவும் போக 2. 42 கோடியும் மீந்திருக்கிறது. எனவே இந்திய சர்க்கார்ஏழைகளுக்குபரிகாரமாய்இருக்கக்கூடியவழியில் அத்தொகைகளை உபயோகித்திருக்கலாம். ஆனால்அவ்விதம் செய்யவில்லை. ஆனால்1934-35 ம் வருடத்தில் மீந்ததில் விவசாய ஆராய்ச்சி திட்டத்துக்கு 30 லட்சமும், கிராமச் சீர்திருத்த வேலைக்கு 108/½ லட்சமும் செலவிடப் போகிறார்களாம். கிராமச்சீர்திருத்த வேலைக்கு என சென்ற வருடமும் ஒருகோடி ரூபாய் ஒதுக்கி மாகாணங்கட்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. அத்தொகைகளை கொண்டு எவ்விதமான சீர்திருத்த வேலைகள் செய்யப்பட்டன என்பது பொதுமக்கட்கு தெரியவாது. அங்கிலையில் இவ்வருடமும் 108/½ லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே அதைப்பற்றி பொதுமக்கள் விவரம் அறிந்து கொள்ளுமாறு மாகாணசர்க்கார்களோ அல்லது இந்தியசர்க்காரோ ஓர் அறிக்கை வெளியிடுவது நன்மையாகும்.

1935-36 ல் மீறும் 2. 42 கோடியில் கட்டிடங்கள் கட்டுவதற்காக சிந்துமாகாணத்திற்கும் ஒரிசாமாகாணத்துக்கும் முறையே 17½, 27½ லட்சம் கொடுக்கப் போகிறார்களாம். மீதமுள்ள 197 லட்சங்களையும் புதிய சீர்திருத்த நிர்வாகத்தில் பணக்கஷ்டப்படும் மாகாணங்கட்கு உதவிசெய்ய உபயோகிக்கப் போகிறார்களாம். எனவே இந்தியசர்க்கார் வரவு செலவு திட்டத்திலும் போற்றற்குரிய தொன்றுமில்லை.

## ஜப்பான் கலகம்

ஜப்பானில் பொதுத்தேர்தல் நடந்ததின் பின்னே அங்கு பெரும் இராணுவக்கலகம் நடந்துள்ளது. அக்கலகத்தில் பிரதமமந்திரியான (அட்மிரல்) திரு. ஒகடாவும் பொக்கிஷ மந்திரி. திரு. டாக்காஹாஷியும் மற்றும் பலபெரிய உத்தியோகஸ்தர்களும் கொலை செய்யப்பட்டார்களாம். ஆனால் பின்னர் பிரதமமந்திரி கொலைசெய்யப்படவில்லையென்றும், அவருக்குப் பதில் அவரைப்போன்றேயிருக்கும் அவருடைய மைத்துனரை கலகக்காரர்கள் அவரெனக் கருதி கொலை செய்து விட்டார்கள் என்றும் செய்தி வந்துள்ளது. ஜப்பானில் சில காலமாக நடந்துள்ள கொலைகளையும் அட்டூழியங்களையும் பார்த்தால் ஜப்பானில் இராணுவத்தார் தாங்கள் அதிகாரத்தை கைப்பற்ற, இராணுவசர்வாதிகார ஆட்சி ஏற்படுத்த முயலுகிறார்கள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. 1921 ல் வாஷிங்டனில் செய்த கடற் படை உடன்படிக்கையில் கலந்து கொண்டதற்காக அப்பொழுது பிரதம மந்திரியாக இருந்த திரு. ஹாரா என்பவர் கொலை செய்யப்பட்டார். 1929 ல் லண்டனில் ஏற்பட்ட கடற்படை உடன்படிக்கையை ஒப்புக் கொண்டதற்காக அம்மகாநாட்டுக்குப் பிரதம பிரதிநிதியாய் சென்றிருந்த வாக்காட்சுக்கி பிரபுவும் அப்பொழுது பிரதமமந்திரியாயிருந்த திரு. ஹாமக்குச்சியும் 1930 ல் கொலை செய்யப்பட்டனர். மஞ்சூரியா தகாறு சம்பந்தமாய் அகிலதேச சபை ஜப்பானிடம் காட்டிய மனோபாவத்திற்காக அப்பொழுது பிரதமமந்திரியாயிருந்த திரு. இனுகாவும் பொக்கிஷ மந்திரியாயிருந்த திரு. இனோயியும் 1932 ல் கொலை செய்யப்பட்டனர். அரசியலில் அதிகசெல்வாக்குப் பெற்று வந்த செல்வந்தரான டாட்பிரபு கொலை செய்யப்பட்டார். 1935 ல் அரசியல் சார்பில் அநுதாபமுள்ள இராணுவ அதிகாரிகளிடம் சலுகைகாட்டியதற்காக இராணுவ விவகாரச் சபைத் தலைவர் மேஜர். ஜெனரல் நாகதா கொலை செய்யப்பட்டார்.

சமீபத்தில் நடந்த பொதுத்தேர்தலில் லிபரல்கட்சியினர் பெரும் பான்மையோராக வெற்றிபெற்றனர். அதில் முதலாளிகளும் லேவாதேவிக்காரர்களு மிருக்கின்றனராம். இப்பொழுது பொக்கிஷ மந்திரியாயிருந்த திரு. டாக்காஹாஷி இராணுவத்திற்கே பெரும்வாரியான

வரிப்பணத்தை செலவிடுவதை கண்டித்தார். மற்றும் புதியமந்திரி சபை மங்கோலியா பிரதேச எல்லைப்புறத் தகாறை சமாதானமாக தீர்த்துக் கொள்ளத் தீர்மானித்தது. இது இராணுவத்தினர்கட்குப் பிடிக்கவில்லை. அவர்கள் தாங்கள் அரசர் ஒருவருக்குத் தவிர மற்ற வர்கட்கு, நாட்டு குடிமக்களின் பிரதிநிதிகட்கு உத்திரவாதிகளாய், இருக்க விரும்பவில்லை. எனவே கலகஞ் செய்ய ஆரம்பித்தனர். மேலே கூறிய வற்றையெல்லாம் கவனிக்கும்போது இராணுவத்தார் இராணுவச் சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்தவே விரும்புகின்றனர் என்று கருதவேண்டி யிருக்கிறது. இராணுவத்தாரின் இந்த மோகம் பலிக்குமானல் ஜப்பான் விரைவில் ஒரு குடியாட்சி நாடாகமாறி விடக்கூடும். அதற்கு ஸ்பெயின் தேசத்தின் நிகழ்ச்சியே சான்ருகும். அங்கு இராணுவத்தை சேர்ந்த ஜெனரல் ரைவோ டிரிவிரா(?) சர்வாதிகாரம் செய்தார். அதனல் நாட்டில் அதிருப்தி பரவியது. அவருடைய கைதளர்ந்ததும் நாட்டில் குழப்பங்களுண் டாயின. அதனல் ஸ்பெயின் தேசத்து அரசர் ஆல்பென்ஸோ நாட்டைவிட்டு வெளியேறும்படி நேர்ந்தது. பின்னர் குடியாட்சி ஏற்பட்டது. குடியாட்சி ஏற்பட்டும் அங்கு குழப்பங்கள் நடப்பது நின்ற பாட்டை காணேம். எனவே ஜப்பானிலும் இராணுவச் சர் வாதிகாரம் ஏற்பட்டால், பின்னர் ஸ்பெயின் தேசத்தில் உண் டான நிலைமையே அங்கும் ஏற்படாதா என்று சந்தேகப்படுகிருேம். ஸ்பெயினில் இராணுவச் சர்வாதிகாரம் ஏற்பட்ட போதிலும் அவர் கள் வேறு நாடுகளை கைப்பற்ற, மற்றைய நாடுகளுடன் போரிட முன் வந்ததில்லை. ஆனல் ஜப்பான் இராணுவத்தின் மனேபாவமோ வேறு நாடுகளை கைப்பற்ற வேண்டுமென்பதாக, முக்கியமாய் சீனவை கைப்பற்ற வேண்டும் என்பதாக இருப்பதாய் தெரிகிறது. அவ்விதம் அவர்கள் செய்யப்புகின் பல நாடுகள் ஜப்பானுக்கு விரோ திகளாகும். அவ்விரோதங்களை யெல்லாம் சமாளித்து மீளுவது ஜப்பானுக்கு பெரும் கஷ்டமாய் முடியும். அதற்குள் நாட்டிலும் பணக்கஷ்டமும் வறுமைப்பிணியும் ஏற்பட்டு விடக்கூடும். அதனல் குடிமக்கட்கு அதிருப்தி ஏற்பட்டு உள்நாட்டுக் குழப்பமேற்பட லாம். ஏற்படின் ஜப்பான் இப்போதிருக்கும் உன்னத நிலைமையி லிருந்து கீழேவிழும். பழையபடி உன்ன நிலையையடைய பல்லாண்டு கள் பிடிக்கும். எனவே இராணுவத்தார் தாங்கள் காட்டிவரும் மனேபாவத்தை விட்டு ஜனப்பிரதிநிதிகளின் ஆட்சிக்கு உட்பட்டு நடத்தலே அவர்கள் நாட்டிற்கு நன்மை பயக்கும்.

## வித்தியாசம் என்ன ?

சென்ற மாதத் தமிழரசில் காரைக்குடியில் நடைபெற்ற தமிழ் நாடு காங்கிரஸ் சம்பந்தமாய் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார்

செய்த சூழ்ச்சிகளைப்பற்றி ஓர் கட்டுரை வெளிவந்ததை நேயர்கள் படித்திருக்கலாம். இப்பொழுது அதற்கு ஒருவர் பதில் எழுதியிருக்கிறார். அப்பதில் எல்லோராலும் வரவேற்கக் கூடியதாக இருக்கிறது. எனென்றால் ஒரே ஒரு விஷயத்தை தவிர மற்றைபடி தமிழரசில் வெளிவந்த கட்டுரையில் கூறப்பட்டவைகளை எல்லாம் அப்பதில் உறுதிப்படுத்துவதாய் இருக்கிறது. அப்பதிலை எழுதியவர் அக்கட்டுரையில் கூறியவைகளில் தினம் ஆறணாக் கூலிபெற்று பிரசாரம் செய்யும் தொண்டர்கள் தான் காங்கிரசுக்கு டெலிகேட்டுகளாக வரக்கூடிய மாதிரியில் காங்கிரஸ் விதி அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூறியதை மட்டுந்தான் ஆட்சேபிக்கிறார். தினம் ஆறணாக் கூலிபெறும் தொண்டர்கள்தான் காங்கிரசிற்கு தொண்டர்களாக வருகிறார்கள் என்பது உண்மையா அல்லவா என்பதை அவர் திரு. பக்தவச்சலம் முதலியார் பி. எ. பி. எல். அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். தினம் ஆறணாக்கூலி பெறுபவர்கள் டெலிகேட்டுகளாக வரக்கூடாது என்று கூறவில்லை. அவர்களிலும் யோக்கியர்கள் இருக்கலாம். இருந்தாலும் அன்றாடம் இந்த ஆறணாக் கூலி பெறுவதற்காக அவர்கள் அக்கூலி கொடுப்பவர்கள் சொற்படி தானே நடக்க முடியும். அவர்கட்கு விரோதமாய் அவர்கள் ஏதாவது காரியம் செய்யவோ அல்லது ஓட்டுச் செய்யவோ முடியாதே. அவ்விதம் செய்தால் தங்கட்குகூலி கிடைப்பது போய்விடுமே என்ற அஞ்சத்தால் அவர்கள் கூலிகொடுக்கும் முதலாளிகள் சார்பாகத்தானே எந்தக் காரியமும் செய்யமுடியும். எனவே இது சுதந்திரமாக ஓட்டுச் செய்வதாகுமா? சட்ட சபைகளில் நியமனம்பெற்ற மெம்பர்களை அவர்கள் சர்க்கார் தாசர்கள் சர்கார் தயவில் பதவி கௌரவம் பெற்றவர்கள், எனவே அவர்கள் ஜனப் பிரதிநிதிகளுக்கு விரோதமாகவே எப்பொழுதும் ஓட்டுச் செய்கிறார்கள் என்று ஏளனம் செய்கிறோம். அவர்கள் நிலைக்கும் தினம் ஆறணாக் கூலி பெறுபவர்களும் அல்லது ஜில்லாக்களில் கதர் ஸ்டோரில் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை பார்ப்பவர்களும் டெலிகேட்டுகளாகவரும் நிலைக்கும் எவ்விதமான வித்தியாசமாவது இருக்கிறதா? இவ்விதமான நிலைமையில்லாது, சுதந்திரமாக ஓட்டுச் செய்யக் கூடியவர்கள் டெலிகேட்டுகளாக வந்திருந்தால் காரைக்குடி மகாநாட்டின் நடவடிக்கை வேறுவிதமாக இருந்திருக்கும். இதை அவர் அறிந்து கொள்வாராக. இக்காரணத்தினாலேயே தினக்கூலி பெறுபவர்கள் டெலிகேட்டுகளாக வரக்கூடாது என்று கூறப்படுகிறது. இந்த உண்மையை உணராமல் பிராமண துவேஷங்கொண்டு இவ்விதம் கூறப்படுகிறது என்று கூறுவது நேர்மையான பதிலாகாது. பிராமண துவேஷங்கொண்டு எழுதுகிறார்கள், சொல்லுகிறார்கள் என்று கூறுவது ஒரு வழக்கமாக ஏற்பட்டுவிட்டது. இனி இந்த சுலோகத்துக்கு நாட்டில் மதிப்பு ஏற்படாதென்பதையும் அவர் அறிந்து கொள்வாராக.

## பிழை திருத்தம்

சென்ற மாதப் பத்திரிகையில் 'நாதனைத் திருத்திய நங்கை' என்ற கதையை திருப்புகழ் குழந்தைவேலன் எழுதியதாக வெளி வந்துள்ளது. அதை எழுதியவர் அவரல்ல. அதை எழுதியவர் திரு. எஸ். அர்த்தநாரி சாமி என்பவர். அகஸ்மாத்தாய் இப்பிழை நேர்ந்த மைக்கு வருந்துகிறோம்.

## மதிப்புரை

திரு. தர்மதீர சுவாமிகளால் எழுதப்பட்ட ஸ்ரீபகவத்கீதை ஆராய்ச்சி எனும் நூலின் பிரதியொன்று நமது பார்வைக்கு வந்தது. இந்துக்களின் புராண இதிகாச மேம்பாடனைத்தும் தன்னகத்தே யடக்கி விஞ்ஞானமிளிர்ந்து தத்துவம் ததும்பி அரசியல் நுட்பங் கள் அணி அணியாய் அள்ளிக்கொட்டப்பட்டு விளங்கும் நூலென்று வானமளாவப் புகழப்பட்ட பகவத்கீதையைத் துருவித்துருவி ஆராய்ந்து அதன் கண்ணுள்ள ஆபாசங்களை எடுத்துக் காட்டப்பட் டிருக்கிறது.

4—13 ம் சுலோகத்தில் குண கர்மங்களுக்கேற்ப பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரன் எனும் நான்கு வருணங்களும் என்னால் வகுக்கப்பட்டனவென்று' சொல்லி பிராமணர்களை உயர்த்தியும் நம் மக்களை தாழ்த்தியதுமன்றி அவர் தமைதாசி மகன் என்றும் அரக் கன் சண்டாளன் மிலேச்சன் பறையன் என்றெல்லாம் பழித்தும் எழுதி பின் சந்ததி நம்பும்படியும் செய்த மோசடியையும் 3—10 சுலோகத்தில் பிரஜைகள் என்னால் சிருஷ்டிக்கப்பட்டதென்று கூறி விட்டு அதற்கு முரண்பாடாக 3—14 ல் அன்னத்தினின்று பிராணி கள் உற்பத்தியாகின்றன என்று கூறியிருப்பது போன்ற அநேக முரண்பாடுகளையும் எடுத்து விளக்கிப் பகவத்கீதையின் யோக்கிய தையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கியிருக்கிறார். பாமரர் முதல் பண்டிதர் வரை படித்து பயன்பெறுமாறு எளிய நடையில் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் மிகவும் போற்றற்குரியது. விலை 8 அணாதான். கிடைக்குமிடம்:— 5, இராமலிங்க முதலி தெரு, ஜி. டி. சென்னை.

# வேலூர் சிவிக் போர்டின்
# மோசடியான நியமனம்

நடைபெறும் விஷயங்களை பாரபட்சமின்றி இரு கட்சியின் வியாசங்களையும் வெளியிடாமல் ஒருபட்சமாய் பொய்யான வகையில் பிரசுரிக்கும் நேர்மையற்ற ஒழுக்கமில்லாத 'தினமணி' என்னும் ஒரு பிணமணியில் ஒரு யோக்கியர் 6—3—36ல் 'காவேரிப்பாக்கம்' என்ற தலைப் பின்கீழ் வெளியிட்ட அறிக்கையின் போக்கைக்கண்ட எவரும் ஏளனம் செய்யாதிருக்க மாட்டார்கள்.

ஏதேதோ உளறிக்கொட்டும் இவர் மனதில் மகாத்மா காந்தியவர்கள் ஏன் காங்கிரசைவிட்டு விலகினார் என்று தோன்றவில்லை. என்றால், காந்தியின் தலைமேல் பாம்போட்டகூட்டத்தின் உறவினராகையால்இவருக்கு அது தோன்றவில்லை என்பதை இவர் மறுப்பதற்கில்லை. சிவிக்போர்டை தங்களிஷ்டம்போல் அமைத்துக்கொள்ள அதிகாரமில்லை. ஆனால்தேர்தல் காலத்தில் தலைவர் சத்தியமூர்த்திதான் சிவிக்போர்டை அமைத்தார் என்று உண்மையை கக்கிவிட்டார்.

இவர்கூற்று 'எங்களப்பன் குதிருக்குள் இல்லை' என்பதேயாகும் ஜில்லாக்களிலுள்ள கிராமங்கள்தோறும் அமைக்கப்பட்டுள்ள காங்கிரஸ் சபையார் கூட்டம்கூடி தேர்ந்தெடுப்பது முறையே தவிர தன்னிஷ்டம்போல் தலைவர் நியமித்தல் என்பது ஏதேச்சாதிகாரம் என்பதில் என்ன சந்தேகமிருக்கின்றது.

சிவிக்போர்டில் உள்ள அங்கத்தினர்கள் திருவாளர்கள் B. T. சேஷாத்திரிஆச்சாரி V.T.கண்ணப்பமுதலியார் ஆரணி W. சீனிவாசராவ் ஆற்காடு(ஜானகிராம முதலியார் லோகநாதமுதலியார்) வாலாஜா வெங்கட்ரங்கம் நாயுடு அரக்கோணம் சின்னசாமி நாயுடு ஆகிய இவர்களேசிவிக்போர்டு மெம்பர்களல்லவா? எனவே இவர்களை தேர்தலில் நிற்க வைத்த சிவிக்போர்டார் இவர்களே யல்லவா? இதை மோசடியான போர்டு என்று சொல்லாமல் வேறு என்னென்று கூறுவது? மேற்சொன்ன நபர்களை தேர்ந்தெடுத்தது யார். யாருக்கு இவர்கள் மனுபோட்டார்கள் என்பதை வெளியிட முடியுமா?

ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு ஆசைப்பட்ட இருவ ராகிய வெங்கட்ரங்கம் நாயுடுகாரும் B. T. சேஷாத்திரி ஐயங்காரும் பலரிடம் சென்று தங்களை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்ளவில்லையா? உங்கள் தினமணியில் வெங்கட்ரங்கம் நாயுடு வைப்பற்றி புகார்செய்து நீங்களே எழுதவில்லையா?

மாகாணக் கமிட்டியில் ஜில்லாக்கமிட்டி அங்கத்தினர்களாகிய B. T. சேஷாத்ரி ஐயங்காரும் வெங்கட்ரங்கம் நாயுடுவும் இல்லை என்று கூறுவீர்களா?

ஆடுதிருடி ஜெயிலுக்குப் போனவர்களும் காங்கிரசில் சேர்ந்து தேசத்துக்காக ஜெயிலுக்குப் போனேன் என்று சொல்லிக் கொள்ளும்வகையில் ஏற்பட்டுள்ள காங்கிரஸ்காரர்களின் யோக்கிய தையை மக்கள் உணர்தல் வேண்டாமா?

5—3—36 ல் உபயதுல்லா அவர்கள் காவேரிப்பாக்கத்தில் தொழிலாளத் தலைவரும் காங்கிரஸ் மாஜி தலைவரும் ஆகிய திரு வி. கலியாணசுந்திர முதலியாரை எனது குருநாதன் எனது தலைவர் எனவாதி புகழ்ந்து பேசிவிட்டு 7—3—36 தினமணியில் கலியாண சுந்திர முதலியார் ஒழுக்கமில்லாதவர், மதராசிலிருந்து வந்திருந்த தொண்டர்களை காலிகள் எனவும் பொய்யாக ஒரு ஊரில் எதிர்த்தார் கள் என்றும் எழுதியதைக் கண்டால் இவர் தலைக்கேறிய பித்தத்தை வெளிக்காட்டி யிருக்கின்றார் என்பதில் சந்தேகமில்லை.

எனவே இவர் எழுதிய பொய்க்கூற்றானது தொழிலாளிகளின் மனதை புண்படுத்தி யிருப்பதால் காங்கிரஸ் பொதுகூட்டம் கூட்ட சென்னையில் பயம் ஏற்பட்டு விட்டது. சூளை காந்தி மைதானத்தில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தை கலகத்தால் கலைக்கப்பட்டு விட்டது. சூளைபக்கங்களிலுள்ள கடைகளில் தினமணி பத்திரிக்கையை விற்க மறுக்கப்பட்டு விட்டதாய் தெரிகிறது.

தொழிலாளர் தலைவரை காங்கிரசின் ஆணிவேரான பெரியாரை கேவலமான வார்த்தைகளால் ஒரு காலியானவர் எழுதினால் பொது மக்கள் சும்மாயிருப்பார்களா?

இதன் பலனை கூடிய சீக்கிரத்தில் பொதுக்கூட்டங்களில் கனம் C. ராஜகோபலாச்சாரியாரோ S. சத்தியமூர்த்தியோ அனுப விப்பார் என்பதை நினைப்பூட்டுகிறேன்.

பக்தவத்ஸலம் முதலியார் திரு. சத்தியமூர்த்திக்கு தமது பதவியை ராஜினமா செய்து கடிதம் எழுதவில்லை என்று பக்தவத்சல முதலி யாரோ அல்லது சத்தியமூர்த்தியோ சொல்ல முன்வருவார்களா? சத்தியமூர்த்தியவர்கள பக்தவத்ஸலம் முதலியாருக்கு காவேரிப்

பாக்கம் விஷயத்தில் நேரில் போய் நியாயம் வழங்கும்படி தந்தி கொடுத்ததை இல்லை என்று சொல்லுவாரா?

பக்தவத்சலம் முதலியார் டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் சிவிக்போர்டு அநியாயம், செய்தது அதனால்தான் நான் ராஜிநாமா செய்தேன். கள்ளுக்கடை மறியலில் அடித்தவர்களையும் கள்ளுக்கடை சாஸ்வத குத்தகைக்காராய் இருப்பவர்களையும் தேர்ந்தெடுத்தது தவறு. நீங்கள் சிவிக்போர்டைக் கண்டித்து போராடுங்கள் என்று சொன்னது உண்மையல்லவென்று சொல்ல முன் வருவாரா?

நேற்றைய தினம் நேரில் சென்று டாக்டர் அவர்கள் என்னய்யா ஏதேதோ சொல்லிவிட்டு கடைசியில் சிவிக் போர்டுக்கு வக்காலத்து வாங்கினவர்போல் பத்திரிக்கையில் எழுதினீர்களே எனக் கேட்டதற்கு 'காவேரிப்பாக்கத்திற்கல்ல மற்ற இடங்களிலும் இந்த பிரசாரம் போவதால் என்னைக் கேட்டுக்கொண்டதற் கிணங்கி எழுதினேன். தவிர என் ராஜிநாமாவை இன்னும் அங்கீகரிக்கவில்லை ஆதலால் எழுதலானேன்' என்று சமாதானம் சொன்னது வாஸ்தவம் அல்ல என்று யாராவது கூற முன் வருவீர்களா?

பக்தவத்சல முதலியார் போலொத்த பாமயோக்கியமானவர்களால் நடத்தப்படும் சிவிக் போர்டை கண்டித்து மக்களுக்கு உண்மையை விளக்கவே ஏற்படுத்தப்பட்ட போராட்டம் காவேரிப்பாக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஜாதிமத வேறுபாடில்லாத சமஉரிமையாய் வாழக்கூடிய வகையில் வேலை செய்யும் திட்டத்தோடு தனிப்பட்ட தமிழ்நாடு காங்கிரஸ் சபை ஒன்றைக் கூட்ட ஏற்பாடுசெய்து வருவதில் என்ன குற்றம் என்று கேட்கின்றேன்.

எனவே காவேரிப்பாக்கத்தில் நிற்கும் காங்கிரஸ் வாதியான கனம் K. A. முனுசாமி முதலியார் உண்மையானவர், கள் குடிக்காதவர், மோசம் செய்யாதவர், கிராமவாசிகளால் போற்றப்படுபவர், தேர்தலில் கட்டாயம் வெற்றிபெறக் கூடியவர் ஆதலால் எத்தகைய பொய் பிரசாரங்களையும் காவேரிப்பாக்கம் கிராமவாசிகள் நம்பமாட்டார்கள் என்பதை இதன் மூலம் மற்ற ஜில்லா வாசிகளுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏப்ரல் மாதத்தில் கூடப்போகும் தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாட்டிற்கு ஆதரவு அளித்து பல பிரமுகர்களும் தலைவர்களும் கடிதம் எழுதி வருவதால் இவ்வியக்கத்திற்கு போதாவு இருப்பது தவிர 10000 தொழிலாளிகள் மெம்பர்களாய் சேர முன்வந்துள்ளதை மகிழ்ச்சியோடு தெரிவிப்பதோடு இதைக் கண்ணுறும் உங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன். மகாநாடு கூடும் தேதியை எதிர்பாருங்கள்.

கந்தசாமி ராஜா.

## வட ஆற்காடு ஜில்லா போர்டுத் தேர்தல்.

உண்மை காங்கிரஸ் வாதி

### ஸ்ரீமான் K. A. முனிசாமி முதலியார்

அவர்களுக்கு ஆதரவு.

### காவேரிப் பாக்கத் தொகுதி வாக்காளர்களுக்கு ஏழைத் தொழிலாளர்கள்

# வேண்டுகோள்.

(எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

காவேரிப் பாக்கத்து கண்யமுள்ள பெரியீர்!
கடமைதனை உரைக்கின்றோம், கவனமாய்க் கேண்மோ!
நீவீரெம் முனிசாமி நெறியாளர் தமக்கு,
நிச்சயமாய் 'ஓட்'டளித்து நிகரில்லா வெற்றி
ஈவீர்கள், என்றாலும் இழுக்குடைய மாக்கள்
இதம்பேசி ஓட்டதனை ஏமாற்ற வருவர்,
காவீர்கள்; எங்களது கலியாண சுந்தரர்
காட்டியதை மறவாதீர்; கபடருரைக் கேட்டே.

காங்கிரஸ் கட்டளையில் கையொப்ப மிட்டால்
கைவிடோம் என்றார்கள் காந்திருதல் பெரியோர்.
ஈங்கென்ன நடக்கின்ற தென்பதைப் பாரீர்!
எல்லாம் யோக்கியர்கள் இழிச்செய்கை யன்றோ?
தாங்களே 'சிவிக்ஸ்போர்டு'த் தரகராய் நின்று,
தங்களுக் கேற்றவரைத் தகுதியற்றத் தனமாய்;
தீங்கையே செய்வதற்குப் போட்டியிட வைத்தார்
தேசியவா திகளாமோ? சிந்திப்பீர் நன்கே.

உண்மையிலே பொறுப்புமிக உயர்குணமு மொழுக்கம்
உடையவரே தக்கவராம்; உணர்ந்தோட்டை அளிப்பீர்!
கண்முன்னே குடிகேடர், கண்டபடி யுளறும்
காங்கிரஸ் போலிகளைக் கண்ணிலுங்கா ணாதீர்!
வெண்ணெய்திய ருக்கபல வீடுதொறும் சென்று
வேணுநெய்க் கழுவதும் வீணன்றோ? உங்கை
வெண்ணெயைப்போல் விளங்கும் ஸ்ரீ. K. A. முனுசாமி
வெற்றிபெற வேண்டுமெங்கள், வேண்டுதலு மிதுவே.

ஆக்கியோன்

A. அரங்கநாதம்,

மாஜி சென்னை மாகாணத் தொழிற்கட்சி,

காரியதரிசி.

# வேலூர் சிவிக் போர்டு

வேலூர் சிவிக்போர்டு கமிட்டியார், காவேரிப்பாக்கம் அரக்கோணம், பாராஞ்சி, ஆற்காடு, சோளிங்கிபுரம், வாலாஜாபேட்டை முதலான இடங்களில் காங்கிரஸ்காரர்கள் தேர்தலுக்கு அபேட்சகராய் நின்று போட்டி போடுவதில், ஒரு சிலர்தான் சிவிக்போர்டார் அனுமதிபெற்றவர்கள் என்றும், ஆதலால் அவர்களையே ஆதரிக்கவேண்டும் என்றும், மற்றவர்களை சிவிக்போர்டு தேர்ந்தெடுக்கவில்லை என்றும் நோட்டீசுகள் விளம்பரம் செய்து வருகின்றனர். சிவிக்போர்டு செய்யும் நேர்மையற்ற காரியங்களை கண்டித்து அவர்களின் கட்டுப்பாடான எதேச்சாதிகார மோசடியை எதிர்த்து போராடவேண்டிய முறையில் காங்கிரஸின் தேர்தல் அநுஷ்டான முறையை ஏற்படுத்தியிருப்பதால், அம்முறையையும் அதன் தேர்தல் உடன் படிக்கையையும் மீறிநடப்பது (சட்ட மறுப்பு செய்வது) நியாயம் என்பதை எல்லாமக்களும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகும்.

சிவிக்போர்டின் உடன்படிக்கையில் கையெழுத்துப் போட்ட காங்கிரஸ்காரர்கள் சொல்லும் நியாயமான வாதங்களை ஏற்றுக் கொள்ளாத தலைவர்களையும் அவர்கள் திட்டங்களையும் மீறுவதைத் தவிர காங்கிரஸ் வாதிகட்கு வேறு வழியில்லை. இது காந்தியின் கட்டளை.

மகாத்மா காந்தியவர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டு அரசாங்கத்திற்கு எதிரிடையாய் சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பித்தனரோ அதேகாரணத்தை முன்னிட்டேதான் காங்கிரஸ்காரர்கள் இன்று சிவிக்போர்டின் சட்டத்தை மீறுகின்றனர் என்பதை உணர்த்த இதை வெளியிடுகிறேன்.

33 கோடிமக்களை பத்து பன்னிரண்டு பார்லிமெண்டு மெம்பர்களைக்கொண்ட அரசாங்கத்தினர்கள் கவர்னர்களையும் மெம்பர்களையும் கலக்டர்களையும் வைத்துக்கொண்டு நடத்தும் ஆட்சி ஜனநாயக ஆட்சியல்ல, ஆதலால் ஜனநாயக ஆட்சியை சட்டமறுப்பு மூலம் அடைய அகிம்சா தர்மத்தை போதித்த மகாத்மா காந்தியின் போல் இன்று காங்கிரஸ்காரர்களில் சிலர் சட்டம்செய்து பன்னிரண்டு பேர்கள் சேர்ந்து அவர்கள் இஷ்டம்போல் அங்கத்தினர்களை நியமித்து

அவர்கள் தான் தேர்தலில் நிற்கவேண்டும் என்ருல், (இது மோசமான ஆட்சிக்காக ஏற்படும் திட்டமல்லவா?) இதனை மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை காட்ட, இவர்கள் ஏற்படுத்தும் அனியாய ஆட்சியை ஒழிக்க அச்சட்டங்களை மீறுவதைத்தவிர வேறு மார்க்கமில்லை.

தலைவர் என்ற பெயரால் ஒருவர் மக்களை அடக்கியாள முயற்சிக்கும் இத்திட்டங்களை வெட்டிச்சாய்க்க வேண்டியது அவசியம் என்னும் உணர்ச்சி ஜனநாயக ஆட்சியை விரும்பும் ஒவ்வொருவருக்கும் இல்லாமல் இருக்க முடியாது.

## வேலூர் சிவிக்போர்டு அங்கத்தினர்

வேலூர் ஜில்லாவில் சிவிக்போர்டின் அமைப்பை கவனித்தால் எவரும் வெறுப்பர். தேர்தலுக்கு அபேட்சகராய் நிற்கும் அங்கத்தினர்களில் எட்டுபேர். (பிரதிபலனைக் கோருபவர்கள் இருவர்) தலைவர் பதவியை கோருபவர்கள் இருவர் ஆக பன்னிரண்டு பேர்கள் சேர்ந்த வேலூர் சிவிக் போர்டார் தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொண்டபிறகு தங்களுக்கு வேண்டியவர்களை ஒருவருக்கொருவர் சிபார்சு செய்துகொண்டு (தங்களுக்கு இஷ்டமானவர்களை போட்டுக் கொண்டால் தாமே ஜில்லாபோர்டு தலைவர் தேர்தலில் தலைவராய் வந்து விடலாம் என்ற ஆசையால்) தங்களுக்கு வேண்டியவர்களை நியமித்துக்கொண்டனர். அதன் பயனாக நிகழும் காரியங்களை நியாயம் என்று ஒப்புக்கொள்ள முடியுமா?

## ஒரு உதாரணம்

காவேரிப்பாக்கத்தில் K. A. முனுசாமி முதலியாரை முதலில் சிவிக்போர்டார் தேர்ந்தெடுத்து விட்டதாய் கடிதம் எழுதி அவரை 25 ரூபாய் கட்டும்படி உத்திரவிட்டனர். சிலநாள் கழித்து சிவிக் போர்டு தலைவர் வெங்கட்ராங்கம் நாயுடுகாரும் திரு. சீனிவாச ஐயரும் டை யாரிடம் சென்று 50 ரூபாய் வாங்கிக்கொண்டு போய் விட்டனர். இது நடந்த சிலநாளைக்குள் மீண்டும் சிவிக்போர்டு கூடி அதே வெங்கட்ராங்க நாயுடுவின் முயற்சியாலும் வேலூர் குப்புசாமி முதலியார் (சத்தியமூர்த்தி காரைக்குடி மகாநாட்டின் நடவடிக்கையால் தன் சொல்படி நடப்பதைக்கொண்டு) இவரை நீக்கி வேறொருவரை தேர்ந்தெடுத்துவிட்டு திரு. முதலியாரிடம் வாங்கின ரூபாயை அவருக்கு மணியார்டர் மூலம் அனுப்பி விட்டனர். இதன் காரணத்தை வாசிப்பவர்களையே தெரிந்துக் கொள்ளுமாறு விட்டு விடுகிறேன்.

முனுசாமி முதலியார் அவர்கள் மாகாணக்கட்டிக்கு அபீல் செய்தார். அக்கமிட்டியில் முன் தீர்மானம் செய்த வேலூர் சிவிக்போர்டு அங்கத்தினர்களே மகாணக் கமிட்டியிலும் இருந்து கொண்டு காரணம் கூருமல் தள்ளிவிட்டனர். பிறகு தலைவருக்கு அபீல்செய்துக் கொண்டார். அவர் புனராலோசனை செய்யும்படி டெல்லியிலிருந்து தந்திக்கொடுத்தர். அதனையும் மீறிவிட்டனர். இதைக்கண்ட காரியதரிசியான ஸ்ரீமான் பக்தவத்சலம் பி. எ. பி. ல். அவர்கள் தமது பதவியை ராஜிஞமா செய்துவிட்டார். இதனுல் இதை வாசிக்கும் நீங்கள் எப்படி சிவிக்போர்டின் அறிக்கையை மதிப்பீர்கள் என்பதை நான்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

தேர்தலில் நிற்கும் அபேட்சகர் கூடி தங்களையும் தங்கள் சகாக்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் முறை எந்த நாகரீகமுள்ள

## நமது ஆசிரியர்

நமது ஆசிரியர் டாக்டர். மே. மாசிலாமணி முதலியார் இம்மாதம் முதல் தேதி கொளும்புக்குச் செல்ல இருந்தது சில அசெளகரியங்களால் தடைப்பட்டுவிட்டது. அவர் 18—3—36 ல் கொளும்புக்குப் புறப்படுவார்.

நாட்டிலாவது நடக்குமா என்பதை யோசித்துப் பாருங்கள். தவிர அவர்களே அப்பீல்கமிட்டியிலும் இருப்பது எவ்வளவு மோசம் என்பதை நான் சொல்லவேண்டுமா? ஒரு சிட்டிங்மெம்பரை விட்டு விட்டு காரணம் சொல்லாமல் வேறொருவரை தேர்ந்தெடுத்தால் எவர் தான் பொறுப்பர்? இக்கொடுமையை நிவர்த்திக்கும் பொறுப்புவாக்காளர்களின் கையில் இருப்பதால் K. A. முனுசாமி முதலியார் அவர்கள் சிவிக்போர்டை உதறித் தள்ளி காங்கிரஸின் போரால் சத்தியத்தையும் வாக்காளர்களின் நம்பிக்கையையும் உறுதியாய்க்கொண்டு தான் கையெழுத்திட்ட ஒப்பந்தத்திற்கு மாறுதலின்றி (சொந்த ஒதாவில் நிற்காமலும் பிறகட்சியின் போரால் நிற்காமலும்) காங்கிரஸின் போராலும் காந்தியின் போராலும் அபேட்சகராய் நின்றுள்ளார்.

பனப்பாக்கம் பிர்க்காவில் நா. முனுசாமி முதலியாரிடம் சிவிக் போர்டு மெம்பர் பதினைந்து ரூபாய் வாங்கிக்கொண்டு செலவாய்

விட்டதாய் சொன்னதாக சொல்லப்படுகிறது. இதுபோலொத்த பல காரணங்களைக்கொண்டு மக்கள் இந்த அனியாய போர்டு முறையை (வேலூர் குப்புசாமி முதலியார் கூட்டத்தின் அரசாட்சியை) ஒழிக்க வாக்காளர்களாகிய நீங்கள் முன்வந்து உங்கள் உரிமையை நீங்கள் கவனித்து யோக்கியமானவர்களை (அதாவது குடிகாரரையும் கொள்ளைக்காரரையும், கடன்காரரையும் மோசக்காரரையும் பொய்யர்களையும் காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார்கள் என்ற காரணத்தால் தேர்ந்தெடுக்கும் உரிமையை ஒழிக்க) கட்டுப்பாடாய் முன் வாருங்கள் சிவிக்போர்டுக்கு புத்திபுகட்டுங்கள். சிவிக்போர்ட்டின் பொய்ப்பிரசாரங்களை நம்பாமல் வாக்காளர்களாகிய நீங்கள் கட்டுப்பாடாய் உங்கள் உரிமையை காப்பாற்றும் பொருட்டு சிவிக்போர்டின் கட்டுப்பாட்டை உடைத்தெறிய முன் வாருங்கள். காங்கிரசின் நற்பெயரை காப்பாற்ற முயற்சி செய்யுங்கள்.

சிவிக்போர்டின் பிற்போக்கான முறையை அறியாத உண்மை காங்கிரஸ்வாதிகள் சிவிக்போர்டை ஆதரித்து மேடைகளில் பேச பத்திரிக்கைகளின் மூலமும் நேரிலும் கேட்டுக் கொள்வதை முன்னிட்டு பிரசாரம் செய்ய முன் வருகின்றனர் அத்தகைய காங்கிரஸ் வாதிகள் பிரசாரம் செய்ய வருவதற்கு முன் காரியதரிசி ஸ்ரீமான் பக்தவத்சலம் முதலியாரிடம் உண்மையை விசாரித்துக்கொண்டு பிரசாரத்திற்கு வருவது உத்தமம்.

எனவே தேசத்தில் சத்தியத்தை நிலைநாட்ட அவாக்கொண்ட உத்தம காங்கிரஸ் வாதிகள் திரள்திரளாக காவேரிப்பாக்கம் வந்து பிரசார மூலம் சிவிக்போர்டின் அனியாய ஆட்சியை ஒழிக்க முன் வாருங்கள் வரப்பட்ட சகலருக்கும் எல்லா வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

விலாசம்:—

கந்தசாமி ராஜா,

காங்கிரஸ் எலக்ஷன் ஆபீசர்,

காவேரிப்பாக்கம்.

# காதலுங் காமமும்

திருவையாறு கே. வைத்தியநாதன்]



இல்லற வாழ்வில் ஈடுபடும் மனிதனுக்கு உணர்ச்சி மிக உண்டு. மகிழ்வது முதல் கோபிப்பது ஈறாக உள்ள மனோநிகழ்ச்சிகள் யாவும் அவனது உள்ள உணர்ச்சியின்பாற் பட்டதே. அத்தகைய உணர்ச்சி பாவத்தில் ஒன்றே அன்பு எனப்படுவதும். எனைய மனவெழுச்சிகளில் தலைசிறந்தது அன்பே. அன்புக்கு உயர்வாக—ஒப்பாகக்கூட உலகில் ஒன்றுமில்லை. ஏனெனில் அன்பு கொண்டு இவ்வுலகத்தையே மனிதன் பிடித்துவிடலாம். யாரையும் தனக்கு அடிமையாகக் கொண்டு எத்தகைய அரிய பெரிய காரியங் களையுஞ் சாதித்து விடலாம். எனவே அன்பின் வன்மையையும் பெருமையையும் யாரே அளவிட்டுரைக்க வல்லார்!

* *

தெய்வத்தன்மை பொருந்திய அவ்வன்பினின்று தோன்றிய ஒருகிளையே காதல் என்ற உணர்ச்சி பாவமும். குடும்பவாழ்க்கையில் பிரவேசித்துள்ள—பிரவேசிக்கின்ற நாயகன் நாயகிகளுக்குள் ஊடாடும் உறவே காதலாகும். இல்லறவாழ்வில் நுழைவதற்கு முன்பும் மக்கள் இத்தகைய உறவுகொள்வது மரபு. பழந்தமிழர் வாழ்வுகாதல் கனிந்த வாழ்வே. இதற்கு அகநானூறுபோன்ற சங்ககாலத்து நூல் களே போதிய சான்றும்.

* * *

மனிதனது ஆசைகளில் ஒரு பிரிவே காமமாகும். ஆனால் மனித வர்க்கத்தை அதிகமாகத் தன்சக்திகொண்டு ஆட்டவல்லது இந்தக் காமம் ஒன்றுதான். காமத்திற்கும் காதலுக்கும் வெகுதூரம். வேண்டுமானால் காதற்கடலின் ஒரு அணு காமம் என்னலாம். காமம் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததுதான். ஆனால் ஒரு வரையறைக்குள் அது கட்டுப்பட்டிருக்க வேண்டும். இன்றேல் அதுவே மனிதனுக்கு எமனாய் விடும்.

* * *

காதல் மனிதவாழ்வைப் புனிதமாக்கவல்லது. காமம் மனிதனை அடிமை கொள்ளவல்லது. காதல் தெய்வீகமாக உள்ளத்தே உதிக்கிறது. காமம் புலன்கள்மூலம் மனித உள்ளத்தைத் தன்பால் ஈர்க்

கிறது. உண்மைக்காதலால்—உத்தமக் காதல் வாழ்வால் மனித உடல் வளம்பெற்று தழைகிறது. காமத்தால் (வரம்புமீறிய நிலையில்) மனித உடல் நோயுற்று அழிகிறது. காதலின் வளர்ச்சி மிகமெது; ஆனாலும் அது தன் வன்மையில் குன்றுவதில்லை. காமம்மிக விரைவில்உயர்ந்து எழும்; ஆனால் ஒரே நொடியில் அது அழிந்து ஒழிந்துவிடும். காதல் சத்தியம் நிறைந்ததும், தூய்மையானதும், வாழ்க்கைக்குச் சாதகமானதுமாகும். காமம் பொய்மை மலிந்ததும், வஞ்சனை கொண்டதும், பாதகமானது மாகும். இவையாவும் காதல் காமங்களின் சில குணதிசயங்கள்.

* * *

காதல்கொண்டு வாழும் வாழ்க்கையில் துன்பம் உண்டாவதில்லை. இல்லறம் ஒழுங்காகவே நடைபெறும். 'கணவனுக்குத்துணைவி மனைவி; மனைவிக்குத் துணைவன் கணவன்' என்ற முறையில் தான் தம்பதிகள் வாழவேண்டும். 'ஒருவரின்றி மற்றவர் வாழமுடியாது' என்ற ஒற்றுமையின் அவசியத்தை வாழ்க்கையில் நிலைநிறுத்துவது காதல்தான். 'காதல் மனையாளும், காதலனும் மாறின்றித்தீதில் ஒரு கருமஞ்செய்பவே' எனச் சொல்லவந்த பெரியார் 'கண்ணிரண்டும் ஒன்றையே காண்' என்ற உவமையைக்காட்டிச் சென்றார். ஆக இருவிழிகளுக்குமுள்ள ஒற்றுமைப்பான்மை வாழ்க்கைத் தம்பதிகளுக்குள் இருக்கவேண்டுமானால், காதல் வளர்ச்சி அவசியமன்றோ!

* * *

'எல்லா மனோவிகாரங்களிலும் காமமே மிகவும் பலமும் குரூரமும், பிடிவாத முள்ளது' (Of all the passions, the strongest, cruellest and most stubborn is the sex passion—Tolstoy) என்பது 'டால்ஸ்டாய்' என்ற அறிஞர் துவாக்கு. மனிதனுக்குத் தீமையை விளைக்கும் பகைவர்களில் காமமும் ஒன்று என்னலாம். காமத்தால் அழிந்தார் அனேகர்; அறிஞர்கள்கூட ஒரோர் சமயங்களில் அதன் பழிக்கு இலக்காகின்றனர். காமம் மனிதனை மிருகமாகக் கூடச் செய்து விடுகிறது. புலனிச்சையில் புகுந்த ஒருவன் தன்னோடல்லாது, தன்னுடைனுறைவார்க்கும் இடுக்கண் விளைப்பவனாகிறான்.

* * *

குடும்பம் நடத்தும் எவனும் காம இச்சையில் பெரிதும் மூழ்கிக் கிடப்பானானால் அவனது—அவன் குடும்பத்தினது—பெருமைகளெல்லாம் பாழ்படும். புலனாசையில் மிகவும் ஆசைகொள்ளும் அவன் எதற்கும் தன் மனையாளின் தயவை எதிர்பார்ப்பவனாவான். 'அறமும் பொருளும் நாடாது பெண் இன்பத்தையே விரும்புவனது இல்வாழ்க்கை ஆண்மைக்கே கேடாய் முடியும்' இது தமிழ் வேதத்தி லுள்ளது.

* * *

ஆடவரும், பெண்டிரும் தம்மில் ஒத்த பண்புடையவர்களையே பெரும்பாலும் காதலிப்பர். அவ்வாறின்றேல் காதலின் கருத்து

பூர்த்திபெருது. இன்பவாழ்விலேயே பொழுது போக்க விரும்பும் ஒரு வாலிபன் அதேபோக்கில் தன் கருத்தைச் செலுத்தும் ஒரு யுவதியுடன் நட்புக்கொள்ளுவானுயின் அந்நட்பு காதலாகமாறி அவர்களுடைய விருப்பத்தைக்கூட்டி முடிக்கும். அதற்கு மாருக பொது ஜன சேவையையே லட்சியமாகக்கொண்டு வாழும் ஒருவன் அதில் ஒரு சிறிதும் பற்றில்லாத ஒரு நங்கைபால் நேசங் கொள்வானுயின் அது பயன்படாது.

* * *

காதல் இயக்கத்திற்குச் சாஸ்திரச் சட்டமோ, சாதிசமயச் சட்டமோ கிடையாது. அவனின்றித்தன் எதிர்காலவாழ்வு நாசமுறும் என்று கருதும் மங்கை யிடத்திலும், அவளின்றித்தான் தனித்துவாழ முடியாது என்று நினைக்கும் ஆடவனிடத்திலுமே உண்மைக்காதல் உதிக்கிறது. உத்தமகாதலர்கள் தங்களுடைய காதலுக்கும் அதன்பயனுகிய தங்களுடைய கூட்டுறவுக்கும் நேரும் இடையூறுகளைப் பொருட்படுத்துவதில்லை. அன்னுர் எத்தனையோ சமயசமூக பலிகளுக்கெல்லாம் ஆளாவதுமுண்டு.

* * *

தம்பதிகளாக விரும்பும் இருவர் தம்முள் ஒருவரை யொருவர் சரிவர அறிந்து கொள்ளாது, காதல் கொள்ளுவதும், கொண்டு விட்டதாக எண்ணுவதும் அறிவீனமாகும். நெடுநாட்பழகிய பின்பே—ஒருவரது குணங்களை மற்றவர் நன்கு தெரிந்துகொண்ட பின்பே—காதல் கொள்ளவேண்டும். அவ்வாறின்றிப் புகைவண்டியிலும், உணவு சாலைகளிலும், நாடகப்படக்காட்சிக் கொட்டகைகளிலும் ஒருவரை யொருவர் சந்தித்ததுமே தங்களுக்குள் காதல் ஏற்பட்டு விட்டதாக யுவர்கள் எண்ணிக்கலங்குவது பயனற்ற செய்கையாவதோடு பழிப்புக்கும் இடமாகும். ஒரு மங்கையின் உடல் அழகோ, நடையுடை பாவனையோ, அல்லது நவநாகரிக அலங்காரமோ ஒரு வாலிபனது கண்களைக் கவரக்கூடும். அதனுல் அவன் அவள்மீது காதல்கொண்டு விட்டதாக எண்ணிவிட முடியுமா? அசைக்க முடியாத அன்பாகிய காதலை ஒருகணப் பொழுதிலா மனிதன் பெற்று விட முடியும்?

* * *

'உடம்பொடு உயிரிடையென்ன மற்றன்ன, மடந்தையொடு எம்மிடை நட்பு' என்ற திருவள்ளுவரது திருவாக்கின்படி உடலோடு உயிர்பொருந்தியவாறு தம்பதிகளுக்குள் காதல் விரவியிருக்க வேண்டும். ஆழமான காதலில்தான் உண்மையான, ஆண்டவன் சொரூபமான அன்பைக்காண முடியும். அதில்தான் மனிதன் வாழ்வின் லட்சியத்தைப் பெறுகிருன். மனிதன் மனிதனுவது அவ்விதக்காதல் வளப்பத்தாலேயே! ஏன், மனிதனுக்குப் பேரின்பம் கிடைப்பது கூட அதில்தான்!

---




ஜுரத்தினால் பீடிக்கப்பட்ட செவிடு ஆசாமி வைத்தியரிடம் கையை நீட்டினார். வைத்தியர் பரீட்சித்து 6 மாத்திரைகளைக் கொடுத்து காலை, மாலை ஒரு மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு சுக்கு கஷாயம் அதிகமாக சாப்பிட வேண்டுமென்று கட்டளையிட்டார்.

நான்காம் நாள் காலை திரேக சௌகியத்துடன் வந்த ஆசாமியைப் பார்த்து; சந்தோஷப்பட்ட வைத்தியர் 'ஹ, ஹ, ஹா! பார்த்தீரா? கஷாயம் ஜுரத்தைப் பறக்கடித்தது. இன்னம் 2, 3 தினங்களுக்கு அதையே விடாமல் எதேஷ்டமாக சாப்பிடும்' என்று சற்று உரத்த குரலில் சொல்லவே ஆசாமி, திடுக்கிட்டு, கஷாயமா? ஐயோ! நான் 'சாராயம்' அல்லவா! வேளைக்கு நாலு திராம் சாப்பிட்டேன்' என்றார்.

—வி. ராஜரத்தினம்

(Guard):—வண்டி நகருகிறதே, நீ எப்படி ஏறுவே ?

பிரயாணி:—ஒங்க இடுப்பில் ஏறிக் கொள்றேன். நீங்கள் ஏறும் போது என்னையும் வண்டிக்குள் கொண்டுபோய் விடுவீர்களல்லவா !

—திருவை. கே. வைத்தியநாதன்

வீட்டுக்காரன் :—ஏனையா தச்சரே, நேற்றுதினம் மாட்டின அந்த ஜன்னல் கதவு இப்பொழுது விழுந்து விட்டதே.

தச்சன்:—சும்மா விழுங்களா? நீங்கள் கதவை சாத்தவாவது, திறக்கவாவது செய்திருப்பீர்கள். —எஸ் ரெங்கசாமி.

பழக்கடையில் வாங்க வந்தவர்:—ஐயா, இன்றைக்கு என் கை வைத்திருக்கிறேன் பாருங்கோ, அப்படியே பறந்துபோகும்.

கடைக்காரன்:—ஓ, அப்படி செய்து விடாதீர்கள்! விற்கிற பழம் பாருங்கோ. —ஜி. சுப்பிரமணியன்

யாசகன்:—ஐயா பழனியாண்டவர் தருமம்.

லோபி—ஏனையா! உமக்குத் துணை ஒருவருமில்லையோ ?

யா:—இல்லை ஐயா, இந்தக் காலத்தில் சத்காரியங்களுக்கு யார் துணை சேருகிறார்கள் ?

லோபி:—அடடா! நான் வருகிறேன். சாப்பாட்டுக்கு வழி செய்யும்போதும். லாபத்தில் பங்கு வேண்டாம்—எஸ். குருசாமி ஐயர்

ராமய்யன்:—நான் அணிந்திருக்கும் சேரியல் 50 ரூபாய்.

கருப்பய்யன்:—ஐம்பது ரூபாயா?

ராமய்யன்:—என்ன சந்தேகம், கோர்ட்டிலிருந்துவந்த சமனைக் காண்பிக்கிறேன். —எஸ். ரெங்கசாமி

நாட்டுப் புறத்தான்:— (மூக்குக் கண்ணாடி யணிந்த ஓர் பெண்ணைப் பார்த்து) அடடா ! கலிமுத்திப் போச்சின்னு பஞ்சாங் கார ஐயாசொன்னது சரியா போச்சி.



நகரவாசி:-ஒய் அது ஆணு, பொண்ணு, தெரியுதா ?

நாட்டுப்புறத்தான்:- ஏ, ஐயா தெரியாது. அவபொட்டச்சிதா.

நகரவாசி:-அதாண்டா கண்ணாடி போட்டுக்கிண்டிருக்கா.

—எஸ். குருசாமி ஐயர்

உபாத்தியாயர்:—ரங்கனைப் பார்த்து 'அடே ரங்கா உன் பையில் 10 கோலி இருந்ததென்று வைத்துக் கொள்வோம். எல்லாம் விழுந்து விட்டால் பையில் என்னடா இருக்கும்?

ரங்கன்:—என் பையில் ஒரு பொத்தல் இருக்கும் சார்.

—ஜி. சுப்பிரமணியன்

பத்திரிகை விற்பவர்:—இது என்ன விந்தை. கூப்பனைமட்டும் கிழித்துக்கொண்டு பத்திரிகையை என்னிடமே கொடுத்து விடுகிறீரே.

பத்திரிகை வாங்கியவர்:—நான் அதை விலை கொடுத்து வாங்குவது அதிலுள்ள பரிசு கூப்பனுக்காகவே யன்றி அப்பத்திரிகையிலுள்ள விஷயத்துக்காக அல்ல. —இளைஞன்

காபி கிளப்பில் சாப்பிட்ட பேர்வழி பணம் கொடுக்காமல் வெளிக் கிளம்பினர்.

புரொப்ரைட்டர்:—ஏனையா, சாப்பிட்டு பணம் கொடுக்காமல் போகிறீர்?

சாப்பிட்டவர்:—அதோ பாருங்காணும், அந்த போர்டை 'சாப்பிட்ட பிறகு தயவுசெய்து கடன் சொல்லாதீர்கள்'

ஆகையால்தான் கடன் சொல்லாமல் போகிறேன்.

—கே. எ. கலிகராஜுலு

பண்டிதர்:—என்னடா நேற்று கடற்கரையில் நின்று கடலை நோக்கி கூப்பிட்டுக் கொண்டிருந்தாய்?

பையன்:—நீங்க யாரோ ஒரு கவிராயர் குளத்தின் கரையிலிருந்து முதலையுண்ட பாலனை அழைத்ததாகச் சொன்னீர்களே, நான் கடற்கரையிலிருந்து ஒரு சிறு மீன் குஞ்சையாவது அழைக்க முடியுமா என்று முயன்றேன்.

—இளைஞன்



தாயார்:—என்டா சுப்பு உன்னை எத்தனைதரம் பச்சை பச்சையாக வைதாலும் புத்தி வரவில்லையே.

சுப்பன்:—ஆம் அம்மா பச்சையானதை உடம்பு ஒத்துக்கொள்வதில்லை. இனிமேல் சுடசுட திட்டினால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளும். நானும் சொன்னபடி கேட்பேன்.

—கே. எ. கலிகராஜுலு

நாவல் ஆசிரியர்:—எனது புதிய நாவலைப் பார்த்தீர்களா?

நண்பர்:—ஆம்

ஆசிரியர்:—அது எப்படியிருக்கிறது?

நண்பர்:—பார்வைக்கு மிக்க அழகாயிருக்கிறது.

—கொழும்பு - எஸ். முத்துராமன்

நாட்டுப்புறத்தான்:—புதிதாக வந்திருக்கும் ரெவின்யூ லேபிளைப் பார்த்து என்னய்யா இது ஒரே சுழியா இருக்குது?

நகரத்தான்:—கடன் வாங்குபவர் கொடுத்தவர்களுக்கு ஒரே சுழியாக சுழித்துவிடத்தான் இந்தச் சுழியை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

—டி. வி. எம். ராஜன்

# 'கமலநாதன் அல்லது நட்பின் பெருமை'

[பெல்லம் ம. பொன்னுசாமி]

மழையோ ஜோவென்று பெய்கிறது. இடிமின்னலின் ஆர்பாட்டமோ சொல்லி முடியாது. அதற்குத் தகுந்தாற்போல் காற்றும் விர்விர்ரென்று அடிக்கிறது. நேரமோ மாலை பத்து மணி இருக்கும். இச்சமயத்தில் ஒரு வாலிபன் குளிரைப் பொறுக்க முடியாது தள்ளாடித் தள்ளாடிக்கொண்டு திசை தெரியாமல் ஒரு பைத்தியக்காரனைப்போல் வருகிறான். ஆம்; அவன் பைத்தியக்காரன் போல்தான் காணப்பட்டான். ஏனெனில் அவன் மேனியில் இருந்தது ஒரு முழத்துண்டுதான். அதுவும் அவன் இடுப்பில்தான், தன் இரண்டு கைகளால் அவன் தன் மார்பை நன்றாகக் கட்டிக்கொண்டிருக்கிறான். உச்சிமுதல் உள்ளங்கால் வரை மழையால் நனைந்திருந்தான். இவ்வளவு அலங்கோலத்துடன் இருக்கும் அவன் யாரையோ நினைத்து வீதி வீதியாகவும் வீடு வீடாகவும் நின்று நின்று பார்த்துக் கொண்டே போனான். கடைசியாக ஒரு வீட்டின் வாசற்படியில் நின்று சற்று யோசித்து, ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவன்போல பாவனை செய்தான். பின்பு அவ்வீட்டின் கதவைத் தட்டினான். சிறிதுநேரம் பொறுத்து அவ்வீட்டிலிருந்த ஒரு வாலிபன் வந்த பைத்தியக்காரனைப் பார்த்து, 'ஆ! சத்தியநாதா! என்ன இந்த கோலத்துடன் வந்திருக்கிறாய்? உன்மேல் சட்டை எங்கே? இடையில் வேஷ்டி எங்கே? ஊரிலிருந்து வரும்வழியில் திருடர்களால் கொள்ளையிடப்பட்டாயோ? சாப்பிட்டாயா? தாய் தந்தையர் க்ஷேமமா?' என்று கேள்விக்குமேல் கேள்வி கேட்டார். அவர் சத்தியநாதனுக்கு ஆத்ம நண்பர். அவர் பெயர் குணசுந்திரன். சத்தியநாதன், குணசுந்திருடைய சப்தத்தைக் கேட்டானே ஒழிய பதில் சொல்லாமல் மழையால் நனைந்தது போதாதென்று கண்ணீராலும் தன்னை நனைத்துக் கொண்டே குளிரால் நடுங்கிய வண்ணமாகவே இருந்தான். ஏதோ விபரீதம் நடந்திருக்கும் என்று எண்ணிய குணசுந்திரர் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் அவனுக்கு வேண்டிய துணிமணிகளைக் கொடுத்து பசியார உணவும் கொடுத்தான். சாப்பிட்ட களைப்பினாலும் வெகுதூரம்வரை மழையில் கஷ்டப்பட்டு நடந்துவந்த களைப்பினாலும் உணர்வற்று உறங்கி விட்டான் சத்தியநாதன்.

இனி சத்தியநாதனும் குணசுந்திரரும் யார் என்று கவனிப்போம். மேட்டுப்பாளையத்தில் கிருஷ்ணசாமி செட்டியார் என்பவர் ஒருவர் வசித்து வந்தார். அவருக்கு சொல்பமாக கொஞ்ச நிலமுண்டு; கையில் ரொக்கமாக

மூவாயிரம் ரூபாயும் வைத்திருந்தார். அவர் அந்த ரொக்கத்தைக்கொண்டு உருளைக்கிழங்கு வியாபாரம் செய்து அதனால்வரும் வரும்படியில் தன்னுடைய மனைவியுடன் சந்தோஷமாக காலங்கழித்து வந்தார். இவ்வாறாக இருக்கும் பொழுது கிருஷ்ணசாமி செட்டியாருக்கு கடவுள் கிருபையால் ஒரு மகன் பிறந்தான். சத்தியநாதன் என்ற நாமத்தோடு வளர்பிறை சந்திரனைப்போல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக கிருஷ்ணசாமி செட்டியாரும் அவர் மனைவியும் அப்பாலகனை அன்புடன் வளர்த்து வந்தார்கள். பெற்றோர் வியக்கத்தக்க சத்தியசீலனும் தன் 16-வது வயதில் எட்டாவது வகுப்பில் முதல்தரமாக வாசித்துக்கொண்டு வந்தான். அந்த வகுப்பில் குணசுந்தரன் என்பவனும் வாசித்து வந்தான். இவ்விருவரும் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு போகும்போதும் பின்பு அங்கிருந்து வீட்டுக்கு வரும் போதும் இணைபிரியாமல் இருப்பார்கள். சுருங்கச் சொல்லில் சத்தியசீலனும் குணசுந்திரனும் ஆத்ம நண்பர்கள். குணசுந்திரன் எட்டாவது வகுப்பு முடிய படித்துவிட்டான். அதன்மேல் படிக்க அவன் தாய் தந்தையர் விரும்ப வில்லை. ஏனெனில், அவன் தகப்பனார் ஒரு ஜவுளிக் கடையில் மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தாவாக இருந்தார். அந்த சொற்ப சம்பாத்தியத்தைக்கொண்டு தான் தமது குடும்பத்தைச் சிக்கனமாக நடத்தி வந்தார். அதனால்தான் அவர் குணசுந்திரனை படிக்க வைக்க முடியவில்லை. குணசுந்திரனும், தன் தகப்பனாரைப் போலவே குமாஸ்தா வேலையில் அமர்ந் தான். இவ்விதமாக சில ஆண்டுகள் கழிந்தன. துரதிர்ஷ்டவசத்தால் தகப் பனாரும், மகனும் வேலையற்று சில மாதங்கள் சும்மா இருந்தார்கள். எத்தனை நாள்தான் சும்மா இருப்பார்கள்! உடனே தம் சொந்த ஊராகிய மேட்டுப் பாளையத்திலிருந்து கோயமுத்தூருக்கு வந்தார்கள். வந்த ஒருவாரத்தில் குணசுந்திரனின் தகப்பனார் மார்படைப்பினால் உயிர் துறந்தார். தகப்பனார் சென்றவழியே அவன் தாயும், சில மாதங்களில் சென்றாள். கையிலுள்ள சிறிது பொருளைக்கொண்டு, பின்னும் சில மாதங்கள் வரை வேலை கிடைக் காததால், தன் காலத்தை கடத்தினான். கடவுள் கிருபையால் ஒரு செட்டியார் ஜவுளிக்கடையில் 20 ரூபாய் சம்பளத்தில் சேர்ந்துகொண்டான். இரண்டு ரூபாய் வாடகையில் லிங்கப்ப செட்டி வீதியில் ஒரு சிறிய வீட்டில் குடி யிருந்து கொண்டான். மாதா மாதம் தவறாமல் தன் வீட்டு வாடகையை அவ்வீட்டின் சொந்தக்காரியாகிய ஒரு கிழவியிடம் கொடுத்து வருவான். அந்தக் கிழவியும் அதே மாதிரி மற்ற 6 வீடுகள் வாடகையாகிய 20 ரூபாயைக் கொண்டு, தாய் தந்தையற்ற அபலையாகிய 13 வயதுள்ள கமலவல்லி என்னும் தன் பேத்தியுடன் வாழ்ந்து வந்தாள். நாட்கள் வாரங்கள் ஆயின. வாரங்கள் மாதங்கள் ஆயின. மாதங்கள் வருஷங்கள் ஆயின. கிழவிக்கு நம் குணசுந்திர னுடைய நல்லொழுக்கங்கள் மனதுக்குப் பிடித்தன. மாதா மாதம் கிடைக்கும் வீட்டு வாடகையை கிழவி குணசுந்திரனிடம் கொடுத்துவிடுவாள். குணசுந்திரன் இப்பொழுது அங்கேயே சாப்பிடுகிறான். கிழவி குணசுந்திரனைக் காணும்போதெல்லாம் தன் எண்ணம் இனிமேல்தான் சந்தோஷமாக நிறை வேறும் என்று எண்ணிவந்தாள். அந்தக் கிழவினுடைய எண்ணம் யாதா யிருக்குமென்று வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம். கிழவினுடைய உள்ளக் குறிப்பை யறியாத குணசுந்திரன் தான் வேலைக்குப் போவதும், வீட்டிற்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வருவதுமாக இருப் பான். இடைவேளையில் தன் அறையில் ஏதாவது புஸ்தகத்தைப் படித்துக்

கொண்டும் வீட்டுக் கணக்குகளை சரி பார்த்துக்கொண்டும் இருப்பான். இவ்வாறு இருக்கும்பொழுதுதான் சத்தியநாதன் வந்தான்.

மறுநாள் காலை ஏழுமணி சுமாருக்கு குணசுந்திரன், சத்தியநாதன் துயில்கொண்டிருக்கும் இடத்துக்குப்போய் அவனை எழுப்பினன். சத்திய நாதனும் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வெந்நீரால் ஸ்நானம் பண்ணிக்கொண்டு குணசந்திரனுடனே காலை ஆகாரம் சாப்பிட்டான். பின்பு இருவரும் ஏகாந்தமாக ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டார்கள். சத்திய நாதன் குணசந்திரனைப் பார்த்து, 'நண்பா! போன இரவு நீ என்னைப் பைத் தியக்காரனென்றே எண்ணிருப்பாய் அல்லவா? ஆம், ஏனென்றால் நான் வந்த கோலம் அப்படியிருந்தது. காரணம் சொல்லுகிறேன் கேள். மேட்டுப்பாளை யத்தில் நான் உன்னைவிட என் தாய் தந்தையரால் அதிகமாகப் போஷிக்கப் பட்டேன். என் தகப்பனரிடத்தில் ஏதோ சிறிது கைப்பொருள் இருந்தது. அதைக்கொண்டு அவர் வியாபாரம் நடத்திவந்தார் என்பது உனக்குத் தெரிந்த விஷயமே. என் தகப்பனர் 3000 ரூபாய்கு ஒருவருக்காக ஒரு புரோநோட்டில் கூட்டுக் கையொப்பம் செய்திருந்தார். பணம் வாங்கிக் கொண்ட அந்த புண்ணியாத்மா கொட்டாவிவிட்டுவிட்டார். பணம் கொடுத்த வர், என் தகப்பனரை வாரண்டில் பிடித்து ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார். அவர், ஜெயிலுக்குப் போகும்போது என்தாய் 6 மாத கர்ப்பவதியாய் இருந்தாள். என் தகப்பனர் சிறை சென்றதைக் கேள்விப்பட்டது முதல் என் தாயார் அதே விசனத்துடன் ஒருமாதம் வரைக்கும் இருந்தாள். பின்பு மன நோய் அதிகரிக்க உடல்நோயும் அதிகமாகி விட்டது. அந்த இருநோய்களை யும் பொறுக்க மாட்டாமல் ஈஸ்வரன் பாதங்களைப் பார்ப்பதற்காகச் சென்று விட்டாள். இது இவ்வாறாக முடிந்தது. என் தகப்பனர் சிறை சென்றதும் அங்கு கிடைக்கும் சாப்பாட்டினால் வயிற்று வலியுண்டாகி அங்கேயே மாண மடைந்தார். பின்பு எனக்கு சாப்பாட்டிற்கே வழியில்லாமல் உன்னை நினைத் துக்கொண்டு வந்தேன்' என்று தன் கதையை சொல்லிவிட்டு விம்மி விம்மி அழுதான். முற்றும் கேட்டுக்கொண்டிருந்த குணசந்திரனின் மனம் அனலிடு மெழுகுபோல் உருகியது. விதியின் பயன் என்று சொல்லி, சத்தியநாதனுக்கு ஏதோ சில தைரிய வார்த்தைகளைச் சொல்லி சமாதானப் படுத்தினன்.

நாட்கள் முப்பது பறந்தன. சத்தியநாதனும் குணசந்திரனுடனேயே சாப்பாடு முதலிய காரியங்கள் முடித்துக் கொண்டு வந்தான். ஒருநாள் குணசுந்திரன், சத்தியநாதனைப் பார்த்து, 'நண்பா, நாளைமுதல் சாஸ்வதி பாங்க்' க்கு வேலைக்குப் போகவேண்டும். அங்கு உன்னை குமாஸ்தாவாகச் சேர்த்துக் கொள்ளும்படி சிபார்சு செய்திருக்கிறேன். மாதம் 15 ரூபாய் சம் பளம். சம்மதமா' என்று கேட்டான். சத்தியநாதனும் மிகுந்த சந்தோஷத் துடன் அவன் சொன்னதை ஒப்புக்கொண்டு மறுநாள் முதல் பாங்குக்குப் போய்விட்டான். இவ்வாறாக சத்தியநாதனும் குணசந்திரனும், அவ்வீட்டுக் குச் சொந்தக்காரியாகிய கிழவியும் அவள் பேத்தியாகிய கமலவல்லியும் தம் தம் காரியங்களைச் செவ்வையாகச் செய்துகொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந் தார்கள்.

உலகத்தில் பிறந்த ஒவ்வொரு பிராணிக்கும் சந்தோஷமும், விசனமும் வண்டிச்சக்கரத்தைப் போல் மாறி மாறி வந்துகொண்டே இருக்கும். அந்த நிலையே நம் குணசுந்திரனையும் பாதிக்க ஆரம்பித்தது. குணசுந்தி

ரன் ஒருநாள் அதிக விசனத்தோடு வீட்டுக்குத் திரும்பிவந்தான். சத்தியநாதனும் இவனது வரவை எப்பொழுதும்போல எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். குணசந்திரன் மிகவும் விசனமாக வருவதைப் பார்த்த சத்தியநாதன் அதிக ஆவலாக, 'நண்பா, ஏன் என்றுமில்லாத விசனம் உன் மனதில் இன்று இருக்கிறதுபோல் எனக்குத் தோன்றுகிறது, ஏதோ யோசனைபோல் காண்கிறது. விஷயம் என்னதென்று தெரிவித்தால், என்னால் கூடுமானவரையில் உதவி செய்யத்தயாராக இருக்கிறேன்' என்று கேட்டான். அதற்கு குணசந்திரன், 'இன்று, நான் இருந்த ஜவுளிக்கடை முதலாளி தன் கடையை தன் ஊராகிய பம்பாய்க்குக் கொண்டுபோகப் போகிறார். அவர் என்னையும் மற்ற இரு குமாஸ்தாக்களையும் கட்டாயமாய் தன்னுடனேயே வரும்படி சொல்லிவிட்டார். நான் நாளைக்கே புறப்படவேண்டுமாம். அப்படி நான் போய்விட்டால் என்னையே நம்பியிருக்கும் கமலவல்லியும் அவள் பாட்டியும் எவ்வாறு ஜீவிப்பார்கள் என்ற கவலையே என்மனதை மிகவும் பாதிக்கிறது. ஆனால் ஒன்று செய்யலாம், அதாவது, என் அன்புள்ள சத்தியநாதா! ஒரு யோசனை சொல்லுகிறேன். அதை மட்டும் நீ எனக்குச் செய்தால் போதுமானது. என்னவெனில் நான் பம்பாய்க்குப்போய் திரும்பிவரும்வரை நம் கமலவல்லியையும், அவள் பாட்டியையும் அவர்கள் மனம் கோணாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதைத்தான் நீ எனக்குச் செய்யவேண்டும்' என்றான்.

குணசந்திரனுடைய பரிதாபமான வரலாற்றைக்கேட்ட சத்தியநாதன் பதில் கூறலுற்றான். 'நேசா, குணசந்திரா! அன்று நான் உன் வீடாகிய இந்த வீட்டுக்கு வந்து சிலவாரங்கள் ஆனபோது ஒருநாள் நான் தனியாக உன் அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் சமயம், நம்வயது முதிர்ந்த பாட்டியினுடைய பேத்தியாகிய கமலவல்லி, என் விஷயங்களை யெல்லாம், நீ சொன்னதாகச் சொல்லி மிகவும் விசனப்பட்டாள். பாவம் அவளும் என்னைப்போல் ஒரு அனாதை. நீயும் அக்குணசுந்தரியை காதலித்து வந்திருக்கிறாய். அவள் பாட்டிக்கு தான் உயிருடன் இருக்கையிலேயே உங்கள் இருவருக்கும் மணம் செய்வித்து கண்குளிரப் பார்க்கவேண்டும் என்ற அவா அவள் மனதில் இருக்கிறது என்பதையும், கூடியசீக்கிரம் இச் சுபகாரியத்தை நிறைவேற்றும்படியும் என்னை கமலவல்லி கேட்டுக் கொண்டாள். நானும் சரி என்று ஒப்புக்கொண்டேன். நாளைக்கு நீ பம்பாய்க்குப்போய் விட்டால் எப்பொழுது வருவாயோ? அதுவரைக்கும் காத்துக்கொண்டிருக்க வேண்டுமே,' என்றான். குணசந்திரன், 'நண்பா! நானும் சீக்கிரத்தில் போய் விட்டு வந்துவிடுவேன். பின்பு நீ சொன்னவைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொள்ளலாம். அதுவரைக்கும் அவர்கள் இருவரையும் க்ஷேமமாகப் பார்த்துக் கொள்' என்று சொல்லிவிட்டு, இருவருமாகப் போஜனத்துக்குப் போனார்கள்.

கமலவல்லிக்குச் சுமார் 16 வயது. அழகிய யௌவனமங்கை. பெண்களுக்குரிய சகல நற்குணங்கள் எல்லாம் அமையப் பெற்றவள். பார்ப்போர் மனதைக் கவரக்கூடிய அவ்வளவு அழகுள்ளவள். அவள் தந்தை மறுவிவாகம் செய்து கொண்டார். மறுவிவாகம் செய்துகொண்ட அவள் தகப்பனார் சிறிது சிறிதாக இவளை புறக்கணித்தார். பெற்றதகப்பனாரே இவள்மேல் வெறுப்புற்றார் என்றால் இவள் சிற்றன்னைக்குச் சொல்லவேண்டுமோ? நாளாவிர்த்தியில், கமலவல்லி, தன் சிற்றன்னையின் கொடுமைகளை பொறுக்க மாட்டாமல் தன் தாயின் தாய், அதாவது பாட்டியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தது, அங்கேயே

தன் காலத்தைக் கழிக்கும்படி நேர்ந்தது. கமலவல்லிக்கு 13 வருடம் நடக்கும்பொழுது தான் நம் குணசுந்திரனும் அங்கு வந்து சேர்ந்தான்.

பிறக, மறுநாள் குணசுந்திரனின் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கமலவல்லியோ தன் இனிய காதலனை (குணசுந்திரனை) தூரப்பிரயாணத்துக்கு வழியனுப்ப மனமில்லாமல் மிகவும் வருத்தம் அடைந்தாள். அழுதாள். என் செய்வது விதி அவ்வாறு இருந்தது. கடைசியாக அவள் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு மறுநாள் குணசுந்திரனை பம்பாய்க்குப் போக விடைகொடுத் தனுப்பினள். பம்பாய்க்குச் சென்றதும் கடிதம் எழுதுகிறேன் என்று சொல்லிச்சென்ற குணசுந்திரன் சென்று 10 நாட்கள் ஆகியும் ஒரு கடிதமும் வரவில்லை. இதைப்பற்றி கமலவல்லிக்கு எவ்வாறு சமாதானம் சொல்லலாம் என்ற கவலை இப்பொழுது சத்தியநாதனுக்கு மிகவும் கடினமையாக இருந்தது. சத்தியநாதன் போஜனம் செய்யப் போகும் போதெல்லாம் கமலவல்லி அதிக ஆவலோடு தன் காதலன் கடிதத்தைப்பற்றி விசாரிப்பாள். சத்தியநாதனும் ஏதோ சாக்குப்போக்குகளைச் சொல்லி, அக்குணவதியைச் சமாதானப்படுத்தி வந்தான். மாதங்கள் இரண்டும் கடந்தன. தனக்கு உடம்புக்கு அசௌக்கியமோ, அல்லது பம்பாயை விட்டு வேறு எங்கேயாவது போய்விட்டாரே, அல்லது போனவிடத்தில் என்ன கதி ஆனதோ? ஏன் இன்னும் கடிதம் எழுதவில்லை என்று சத்தியநாதன் பலவாறாக நினைத்து அதேவிதமாக கமலவல்லிக்குஞ் சொல்லி தைரியப் படுத்தினன். கமலவல்லி முன்னிருந்ததைவிட அதிக மனச்சஞ்சலம் அடைந்து எப்பொழுது பார்த்தாலும் அழுதுகொண்டே இருந்தாள். சத்தியநாதன், கமலவல்லியின் துக்கத்தையகற்ற பலவிதமான சமாதானங்களைச் சொல்லி ஒவ்வொரு நாளையும் கழித்துக்கொண்டே வந்தான்.

ஒருநாள் இரவு சத்தியநாதன் தன்போஜனத்தை முடித்துக்கொண்டு தன் அறையில் உட்கார்ந்த வண்ணமாக, யோசித்தான். 'நான் கமலவல்லிக்கு எத்தனை நாள் இந்தப் பொய்ச்சமாதானங்கள் சொல்லிக்கொண்டு வருவது. இதற்கு ஒரு உபாயம் இருக்கிறதா? ஆம் இருக்கிறது' என்று ஒருவித முடிவுக்கு வந்தான். முன்னிருந்த ஜவுளிக்கடையில் உள்ள மற்றொரு குமாஸ்தாவைப் பார்த்து, அவன் மூலமாய் குணசுந்திரன் சேர்ந்த பம்பாய் ஜவுளிக் கடையின் விலாசத்தை அறிந்துகொண்டு வந்து பிறகு தன் நண்பன் சேமத்தை அறிந்து கொள்ளலாம் என்பதே அவன் கண்ட உபாயம். மறுநாள் காலையில் சத்தியநாதன் தன் ஆகாரத்தை முடித்துக்கொண்டு உடனே அந்த குமாஸ்தா இருக்குமிடம் சென்று குணசுந்திரன் சேர்ந்திருக்கும் பம்பாய் ஜவுளிக்கடையின் விலாசத்தைக் கேட்டான். அவன் தனக்கு அதுதெரியாதென்றும், ஆனல் பம்பாயில் உள்ள சில முக்கியமான ஜவுளிக்கடைகளின் விலாசங்கள் மட்டும் தெரியுமென்றும், அதை வேண்டுமென்றால் எழுதித்தருவதாகவும் சொன்னன். சத்தியநாதன் சற்றுயோசித்தான், அப்படியே ஆகட்டும் என்று சொல்லி 4,5 விலாசங்களை எழுதிக்கொண்டுவந்து அந்தந்த விலாசங்களுக்கு குணசுந்திரன் தகவலைப்பற்றி எழுதி கடிதங்களை தபாலாபீஸில் சேர்த்தான்.

நாட்கள் பத்தும் சென்றன. குணசுந்திரனிடமிருந்து ஒரு கடிதம்கூட வராததைக் கண்டு சத்தியநாதன் 'என்னே! என் உயிர்த்தோழன், குணசுந்திரன் இருந்தும் என்னை மறந்தானே அல்லது இறந்து என்னை மறந்தானே

என்று எண்ணினன். சிலசமயங்களில் கண்ணீர்விட்டு விம்மிவிம்மி யழு வான். போதாக்குறைக்கு கமலவல்லியும் நாளுக்கு இருமுறை தன் காதலனைப் பற்றி பதில் வந்ததாயென்றும் கேட்பாள். அவளுக்கும் ஏதோ, பதில் கடிதம் இன்றைக்கு அல்லது நாளைக்குவரும் என்று அவள் மனம் சஞ்சலப் படாமலிருக்கச் சமாதானம் சொல்லி வந்தான். தன் காதலனையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டும், சரியானபடி வேளைக்கு வேளை உணவு உட்கொள்ளாமலும் இருந்ததினல் கமலவல்லி நாளுக்குநாள் மேனிகுன்றி ஒரு துரும்புபோல் ஆவதைக்கண்ட சத்தியநாதன் ஒரு யுக்தி செய்தான். ஒருநாள் சத்தியநாதன், குணசுந்திரன் எழுதியதுபோல ஒரு கடிதம் எழுதி ஒரு உறையில்போட்டு, தான் மேல் பார்த்து கமலவல்லிக்குக் கொடுப்பது என்பதாக மேல் விலாசம் எழுதி, பம்பாயிலிருந்து வாபீஸ்வந்த கடிதத்தின் தபால் தலைகளை ஒட்டி குணசுந்திரனிடத்திலிருந்து வந்த கடிதம் என்பதாக கமலவல்லியிடம் அதைக் கொடுத்தான். கடிதத்தை பிரித்துப் பார்த்தாள். அதில் பின் வருமாறு இருந்தது.

ராஜன் அண், கம்பனி,
பம்பாய்
7—4—34.

என் பிரிய காதலி,

என் கடிதத்தைப்பற்றி நீ அதிக ஆவலாய் இருப்பாய் என்பதை நான் அறிவேன். நான் இங்கு வந்து பல மாதங்கள் ஆகியும் உனக்குக் கடிதம் எழுதாததற்கு என்னை மன்னிக்கவும். எங்கள் புது ஜவுளிக்கடையின் அலுவல் களினல் ஒன்றையும் கவனிக்க முடியாமற் போய்விட்டது. கண்ணே! அஞ்சாதே, இன்னும் ஒரு வாரத்தில் அங்குவந்து சேர்வேன். என் நண்பன் சத்தியநாதன் க்ஷேமத்தையும் உன்னுடைய க்ஷேமத்தையும் பதில் கடிதத்தில் எழுதவும்.

இப்படிக்கு,
உன் உண்மைக் காதலன்
குணசுந்திரன்.

இக்கடிதத்தைப் படித்துவிட்டு ஆச்சரியம் அடைந்தாள். அதன் கையெழுத்தைப் பார்த்தும் உண்மையாகவே கமலவல்லிக்கு நம்பிக்கையற்றுப் போய்விட்டது. இப்படி யோசித்தவண்ணம்மேல் உறையின் விலாசத்தையும் தபால் தலையின்மேல் இருந்த முத்திரையில் 6—10—30 என்ற தேதியையும் கண்டு திடுக்குற்று கவலையும் கலக்கமும் கொண்டாள். தன் காதலன் குணசுந்திரன் தன்னைக் கைவிட்டான் என்றும், இக்கடிதம் எழுதியது சத்தியநாதனே என்றும், தன் நிலைமையை உணர்ந்து தன்பால் கொண்டுள்ள அன்பின் மிகுதியால் தன்னைச் சாந்தப்படுத்தவே சத்தியநாதன் இக்கடிதம் எழுதியிருக்கிறன் என்றும் ஊகித்து சத்தியநாதனின் குணத்தைப் பாராட்டினள். கடைசி காலத்தில் தன்னைக் காப்பாற்றுபவரும் தன்னுடைய நலத்தைக் கோருபவரும், தன்னைப்பற்றி சிரத்தையுடையவரும், தன்னை அன்பாக பார்த்துக் கொள்பவரும் சத்தியநாதனே என்று நினைத்தாள். ஆகையால் தன் எண்ணத்தையும் தன் அன்பையும் தெரிவித்த மாதிரி, சத்தியநாதனின் குணத்தைப் பாராட்டி,

சத்தியநாதனுக்கு ஒரு கடிதம் எழுதி, மேல்விலாசம் 'ராஜன் அண் கம்பனி, பம்பாய் என்று எழுதி சத்தியநாதனிடத்தில் அக்கடிதத்தைக் கொடுத்து தபாலில் போட்டு விடும்படி கொடுத்தாள். சத்தியநாதன் கடிதத்தைத் தபாலில் போடுபவன்போல் பாசாங்கு செய்து அக்கடிதத்தை தன் மேஜையில் வைத்துவிட்டான். தன்னுடைய சூழ்ச்சி கமலவல்லிக்குத் தெரியாதென்றும், அவள் உண்மையாகவே குணசுந்திரனுக்கே கடிதம் எழுதி யிருக்கிறாள் என்றும் நினைத்துவிட்டான். சத்தியநாதன் தன் பெயருக்குத் தகுந்தவாறே நடந்து வந்தான். இதற்குப் பின் கமலவல்லியின் கடிதங்களைப் படிக்காது குணசுந்திரன் எழுதியதுபோல் பல கடிதங்களை எழுதி கமலவல்லிக்கு, கொடுத்து வந்தான். கமலவல்லியின் காதலை யறியாது சத்தியநாதன் எப்பொழும்போலவே நடந்து வந்தான்.

நாட்கள் செல்லச்செல்ல கமலவல்லி மனதில் துக்கம் அதிக மேற்பட்டு விட்டது. ஒருநாள் தான் தன் அறையில் கண்ணீர்விட்டுக்கொண்டு அழலானாள் 'ஆ! என்னே இவ்வுலகம், என் இளமையிலேயே என் பெற்றோர்கள் என்னைவிட்டுச் சென்றனர். பின்பு சிலகாலம் அந்த உத்தமர் குணசுந்திரரால் சந்தோஷமடைந்தேன். ஆனால் அவர் இப்பொழுது என்னைக் கைவிட்டார். இறுதியில் இவர், சத்தியநாதன்தான் என்னைக் காதலிப்பார் என்று எண்ணியிருக்கிறேன். எண்ணி பிரயோஜனந்தான் என்ன? எத்தனை கடிதங்கள் எழுதினேன், ஒரு கடிதத்திலும் எனக்குப் பிரியமான சங்கதி யில்லை. என் செய்வது!' என்று பலவாறு எண்ணி மனம்நொந்து கடைசியில் ஒரு கடிதத்தில் தன் காதலை விவரமாக எழுதி உறையை ஒட்டாமல் சத்திய நாதனிடம் கொடுத்து 'நான் எழுதியிருக்கும் கடிதம் சரிதானாவென்று பாருங்கள்' என்று சொல்லி கொடுத்தாள். அப்பொழுதும் சத்தியநாதன் கடிதத்தைப் பார்க்காமல் மற்றக் கடிதங்களோடு தன் மேஜையில் வைத்துவிட்டுத் தன் காரியத்தைக் கவனிக்கச் சென்றான்.

அன்றிரவு கமலவல்லிக்கு கொஞ்சம் உடம்பு அசௌகரியமாக இருந்தது. தன் பாட்டியைக் கூப்பிட்டு சத்தியநாதனை வரும்படி சொல்லி யனுப்பினாள். பாட்டியும் தாங்கள் இருந்த அறைக்கு இரண்டாவது அறையிலிருந்த சத்திய நாதனை தன் பேத்தி கூப்பிடுவதாகச் சொன்னாள். இருவருமாக கமலவல்லியிருக்கும் அறையை யடைந்தார்கள். சத்தியநாதனைக் கண்டவுடன் கமலவல்லி தன் அருகில் வரும்படி கண்ணினால் சமிக்கை செய்தாள். கள்ளங் கபடமறியாத, தன் நண்பன் காதலியாகிய கமலவல்லியின் மனச்சஞ்சலத்தை எவ்வாறு நீக்குவது, எப்படிச் செய்தால் முன்போல் சந்தோஷமாக இருப்பாள், என்று சதா எண்ணிக்கொண்டிருந்த சத்தியநாதன் அவள் உள்ளக் குறிப்பை அறியாமல் தன் உயிர்த் தோழனுக்கா அவள்பால் கொண்டுள்ள அன்பினால் உடனே அவள் அருகில் வந்தான். கமலவல்லி தனது பாட்டியைப் போய்விடும்படிச் சொன்னாள். கிழவியும் போய்விட்டாள். பின்பு கமலவல்லியும் சத்தியநாதனும் ஏகாந்தமாக உட்கார்ந்திருந்தார்கள். சில நிமிஷங்கள் சென்றன. சத்தியநாதன் கமலவல்லியை நோக்கி 'கமலவல்லி ஏன் என்னை அழைத்தாய்? உடம்புக்கு ஏதாவது அசௌக்கியமா'வென்று மிகவும் பயத்துடன் கேட்டான். கண்களில் நீர்ததும்ப காதல் ததும்பிய பார்வையில் கமலவல்லி சத்தியநாதனைப் பார்த்து தனது கரத்தால் சத்திய

நாதனின் தாடையைப் பற்றுவதுபோலும், ஏதோ சொல்வதுபோலும் கையை உயர்த்தி பின்னும் நாதழுதழுப்ப தன் மார்பின் மேலேயே உயர்த்தின காத்தை வைத்துக்கொண்டாள். ஆவலோடு சத்தியநாதன் என்னவேண்டும் என்று கேட்டான். அவள் மெதுவாக சத்தியநாதனின் காத்தைப்பற்றி, தன்னைத்தானே நொந்து சொல்வதுபோல், 'நான் தங்களுக்கு எழுதிய கடிதங்களில்......என்று சொல்லி, அவ்வளவோடு நிறுத்திவிட்டு பற்றின அவன் காத்துடன் அவள் தன் மிருதுவான அதரங்களில் வைத்துச் சேர்த்துக் கொண்டாள். இவ்வளவாவது தன் எண்ணம் பலித்ததே யென்று சிறிது சந்தோஷமடைந்து கடைசியாக சத்தியநாதனை ஒரு பார்வை பார்த்தாள். பின்பு கண்களை மூடினுள். அவ்வளவுதான் உயிர் துறந்தாள்.

கமலவல்லியின் கடைசி மொழிகளால் சத்தியநாதன் அப்படியே ஸ்தம்பித்து நின்ருன். அவள் இறந்ததை எண்ணி ஓவென்றுஅழுதான், புலம்பினுன். தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டான். வாய்க்கு வந்தவாறு ஏதோதோ சொன்னுன். சொல்லி பிரயோஜனம் என்ன, மாண்டவர் மீள்வரோ?

அச்சமயம் தபால்காரன் ஒருகடிதம் கொண்டு வந்து கொடுத்தான், அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்த சத்தியநாதன் அடங்காத ஆச்சரியம் கொண்டான். அக்கடிதமாவது'

பெல்லம் அண்டு கோ.

புனு 7—12—34

என் பிரிய சத்தியநாதா!

'நான் இதுவரை கடிதம் எழுதாததற்கு மன்னிக்கவும். நான் புறப்பட்ட ரயிலிலேயே என் பந்துக்களில் சிலர் இருந்தார்கள். அவர்கள் மூலமாய் சில சமாச்சாரங்கள் அறிந்தேன். அதாவது நான் காதலித்து வந்த கமலவல்லியானவள் நான் அவளை காதலிக்கத் தகுந்த முறை அல்லவென்றும், ஆகையால் நீதான் அவளை ஏற்றுக்கொள்ளத்தக்க உறவு என்பதாகவும் அறிந்தேன். அதற்காகவே நான் இவ்வளவு காலம் கடிதம் எழுதாமல் இருந்துவிட்டேன். தவிர நான் என் சுற்றத்தாருடன் புனுவில் ஒரு ஜவுளிக்கடையில் வேலையில் இருக்கிறேன். எனக்கு விவாகமும் ஆய்விட்டது மன்னிக்கவும்.

இப்படிக்கு,

குணசுந்திரன்.

என்றிருந்தது.

இக்கடிதம் சத்தியநாதனுக்கு அடங்கா ஆச்சரியத்தையும் திகிலையும் பரிதாபத்தையும் அளித்தது. பின்பு கமலவல்லியை ஒருவாறு அடக்கம்செய்துவிட்டு அன்றே எல்லா விஷயங்களைப்பற்றியும் குணசுந்திரனுக்கும் ஒருகடிதம் எழுதிவிட்டு தன் மேஜையைத் திறந்தான். ஒட்டப்படாத கவர் ஒன்றை எடுத்து தனக்குத் தெரியாமலே அதைப் பிரித்தான், படித்தான். அக்கடிதத்தின் விஷயமாவது:—ஹா! எனது ஆசைக்காதலா, சத்தியநாதரே,

ஆம் உங்களைத்தான் இப்படி அழைக்கிறேன். இக்கடிதத்தையாவது சற்று கருணைகொண்டு பார்ப்பீர்கள் என்று நம்புகிறேன். இதுவரையும் எனக்குத் தாங்கள் குணசுந்திரர் எழுதியதுபோல் கடிதம் எழுதி ஏமாற்றி வந்தீர்கள். நான் இவ்விஷயத்தை முதல் கடிதத்தில் விவரமாக எழுதி இருக்கிறேன். நீங்கள் பெயருக் குகந்தமாதிரியாக சத்தியசீலராகவே நடந்து

கொண்டீர்கள். நான் என் மனப்பூர்வமாய் தங்களை காதலிக்கிறேன். இது வரை என் கடிதங்களைப் பார்த்திருக்க மாட்டீர்கள் என்று நானறிந்தே இக்கடிதத்தைப் படிக்கும்படி கேட்டுக் கொண்டேன். தவிர நான் எழுதிய கடிதங்களைப் பார்த்தால் நான் உங்களை உண்மையாக நேசிக்கிறேன், ஏன், உள்ளன்புடன் காதலிக்கிறேன் என்பது தெரியவரும் ஆனால், உங்கள் நண்பர் குணசுந்திரரைவிட்டு தங்களை நேசிப்பது நியாயமா என்று தாங்கள் கேட்பீர்களேயானால் அவரைப்பற்றி நீங்களே அறிவீர்கள். என் செய்வது? என் விதி அப்படியிருக்கிறது. மன்னிக்கவும்.

இப்படிக்கு,

தங்களை நம்பியிருக்கும்

கமலவல்லி.

இதைப் படித்துவிட்டு கமலவல்லி புஸ்தகத்தில் வைத்திருந்த ஒரு கடிதத்தைப் பார்க்கையில் கமலவல்லியே தன்னைப் பலமாக காதலிப்பதாகவும், ஏனெனில் குணசுந்திரன் தன்னை அடியோடு மறந்து விட்டதாகவும் எழுதியிருந்தது. சத்தியநாதன் பெருமூச்சுவிட்டு அக்கடிதத்தையே உற்று நோக்கினான். அதில் கமலவல்லியின் பிம்பம் தெரிவதுபோலும், அவள் கடைசியாகச் செய்தமாதிரி தன் கரத்தை அவள் மார்பகத்தில் அணைப்பது போலும் காணப்பட்டது. அப்படியே அக்கடிதத்துக்கு கணக்கில்லாத முத்தங்கள் கொடுத்தான். இரண்டு மூன்று கண்ணீர்த் துளிகளும் அக்கடிதத்தின்மேல் விழுந்தன. அப்படியே மெய்மறந்து உறங்கிவிட்டான்.

மறுநாள் தன் காலையாகாரத்தை ஒருவாறு முடித்துக்கொண்டு கமலவல்லியின் பாட்டியிடம்போய், தான் குணசுந்திரனை அழைத்து வருவதற்காக புனாவுக்குப் போவதாகவும், அப்படி போய்வருவதற்கு 10, 15 நாட்கள் செல்லும் என்றும், அதுவரைக்கும் வீட்டை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கும் சொல்லிவிட்டு, கிழவியின் உத்தரவைப் பெற்றுக்கொண்டு அன்று சாயந்திரமே புனாவுக்கு ரயிலில் ஏறினான்.

வண்டி வேகமாகத்தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால் சத்தியநாதன் மனம் மட்டும் குணசுந்திரனைக் காணுவதற்காக அதைவிட வேகமாகச் சென்றதினால் ரயில் மிகவும் தாமதமாகப் போவது மாதிரி இருந்தது. வண்டியில் ஜனநெருக்கம் அதிகமாக இருந்ததினால் காற்றுவாட்டம் சரியாக இல்லை. சத்தியநாதன் உடனே எழுந்து தன் எதிரில் அதாவது தன் பக்கத்தில் உள்ள கதவின் ஜன்னலைத் திறந்துவிடலாம் என்று எண்ணி கதவின் பக்கத்தில் சென்றான். ஜன்னலைத் திறக்கச் சென்றவன் ஏதோ மாதிரியாய், தான் நின்றபடியே ஜன்னலைத் திறந்துவிட்டு அதன்வழியாக தன் கையினால் கதவின் தாழ்ப்பாளையும் திறந்து விட்டான். ஐயோ! அவ்வளவுதான் தாமதம் வண்டி ஓடும் வேகத்தில் கதவு திறந்துகொண்டது. கைகள் இரண்டினாலும், கதவைப் பிடித்துக்கொண் டிருந்தானாகையால் கதவு திறந்ததும் நிற்பதற்கு முடியாமல் அப்படியே நிலத்தில் விழுந்தான். ரயிலும் நின்றது. பிரயாணிகள் எல்லோரும் சத்தியநாதனைப்பார்த்து மிகவும் பரிதாபப் பட்டார்கள். மண்டையில் பலமான அடிபட்டிருந்ததினால் உணர்வற்றுக்கிடந்தான். பின்பு ரயில் கார்ட்டு (Guard) அவனுக்குச் சில சிகிச்சைகள் செய்து பக்கத்து ஊரிலுள்ள ஆஸ்பத்திரிக்கு அவனை அனுப்பிவைத்தார்.

ஆஸ்பத்திரியை அடைந்த சத்தியநாதன் ஒருவாரம் வரை கண்களைத் திறக்கவேயில்லை. டாக்டர்கள் மிகவும் சிரத்தையுடன்தான் அவனைக் கவனித்தார்கள். கவனித்தும் பிரயோசனப்படவில்லை. மண்டையில் ஆன காயம் மூளைக்கும் சம்பந்தப்பட்டு விட்டதாகத் தெரியவந்தது. வலி பொறுக்கமாட்டாமல் நெருப்பில் விழுந்த புழு மாதிரி துடிப்பான். இவ்வாருக சில தினங்கள் சென்றன.

ஒரு நாள் ஒரு வாலிபனும் ஒரு யௌவன மங்கையும் அதே ஆஸ்பத்திரிக்கு ஏதோ சிகிச்சைக்காக வந்தார்கள். அவர்கள் இருவரும் டாக்டர் சொன்னபிரகாரம் தங்கள் நோயை சொஸ்தப்படுத்திக் கொள்வதற்காக ஒரு தனி அறைக்காக நோயாளிகள் படுத்திருந்த அறைகள் பக்கமாகய் வந்தார்கள். அங்ஙனம் வந்தவர்கள் சத்தியநாதன் படுத்திருந்த அறையைக் கடந்துபோகும் போழுது சத்தியநாதன் தன் காயத்தின் வலியால் 'ஐயோ'வென் றலறினன். திடீரென்று அவ்வாலிபன் அக்குரலைக்கேட்டு அவ்வறையினுள் நுழைந்தான்.

பார்த்தான். தன் நண்பன் சத்தியநாதன் என்று கண்டான். அருகில் சென்ருன். படுத்த படுக்கையிலேயே அவனை மார்புறத்தழுவினுன். 'ஹா! சத்தியநாதா! சத்தியநாதா' வென்று அலறினுன். பக்கென்று கண்களைத் திறந்தான் சத்தியநாதன். உற்று நோக்கினன். யாரை? குணசுந்திரனை. நித்திய தரித்திரனுக்கு புதையல் கிடைத்தமாதிரி தனக்கு கிடைத்த புதையலாகிய குணசுந்திரன் தன் பக்கத்தில் நிற்பதைக் கண்டான். தன் வலியையும் பொருட்படுத்தாமல் தன்னை மீறிய சந்தோஷத்தினுல் குணசுந்திரனை உட்காரும்படி சொல்லி, குணசுந்திரன் பிரிந்தது முதல் தான் ஆஸ்பத்திரிக்கு வந்தவரை நடந்த வரலாற்றை சொல்லிக்கொண்டே வந்தான். பின்பு குணசுந்திரனை கொஞ்சம் ஜலம் கொண்டுவந்து தன் வாயில் ஊற்றும்படி சொன்னுன். அப்படியே ஜலம் கொண்டுவந்து குணசுந்திரன் சத்தியநாதன் வாயில் கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றினன். பாதி ஜலந்தான் வயிற்றுக்கொள் சென்றது- மற்றப் பாதி அப்படியே வாயில் நின்றுவிட்டது. ஜலம் வாயில் இருந்ததைக் கண்ட குணசுந்திரன் 'சத்தியநாதா, சத்தியநாதா, ஜலத்தை விழுங்கிக் கொள்' என்ருன். பதில் இல்லை. தான்செய்ய வேண்டியதும், சொல்ல வேண்டியதும் முடியவே சத்தியநாதன், தன்மேல் உள்ளூர காதல்கொண்ட கமலவல்லியைக் காணச்சென்றுவிட்டான். தன்னுடைய நண்பன் சத்தியநாதன் இறந்துவிட்டான் என்று தெரியவே குணசுந்திரன், 'நண்பா! சத்திய நண்பா, எனக்காகவன்ருே இவ்வளவு கஷ்டம் நீ அனுபவித்தாய். நான் காதலித்த கமலவல்லியை நீ உன் சொந்த தங்கையைப் போலல்லவா காப்பாற்றினுய். உன் குணந்தான் என்னே! அவள் உயிர்துறந்த பின் அவள் கடிதங்களைப் படித்தவுடன் எவ்வாறு நீ அலறினுயோ. இந்தப் பழிக்கு நானல்லவோ காரணம். என் செய்வேன். என் விதி அப்படி யிருந்தது' என்று பலவாறு ஏதோதோ சொல்லிக்கொண்டு புலம்பினுன். பின்பு தகுந்த கிரிகைகளுடன் சத்தியநாதன் உடலை அப்புறப்படுத்தினுன். சில மாதங்கள் கழிந்த பினனர், குணசுந்திரன் தன் சொந்தத்திலேயே ஒரு ஜவுளிக்கடையை புனவில் வைத்து அதற்கு 'கமலநாதன் அண்ட் கம்பெனி' என்று பெயரிட்டான். வருஷா வருஷம் அவர்கள் ஞாபகார்த்தமாக தானதருமங்கள் செய்துகொண்டு தன் மனைவியுடன் இனிது வாழ்ந்து வந்தான்.

# கதையின் பயன்

—:o:—

[தூயோன்]



துக்கமும் கோபமும் கலந்த முகத்துடன் ஓர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் காந்தா. முன்னால் சிறிய மேஜை ஒன்று இருக்கிறது. ஓர் காகிதத்தில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருக்கிறாள். ஆனால் மனம் ஏதோவொன்றை நினைத்துக் கொண்டிருக்கிறது. கண்ணீர் 'இதோ வருகிறேன்' என பயமுறுத்துகிறது. கோபம் அதை சாந்தப்படுத்திக் கொண்டிருக்கிறது.

'கண்ணாட்டி காந்தா!' என கூவிக்கொண்டே உள் நுழைந்தான் நாராயணன், காந்தாவின் கணவன்.

அப்பொழுதுதான் காந்தாவின் முகத்தில் கோபக்குறிகள் மிகவும் அதிகமாயின.

நாராயணன் உள் நுழைந்தான். நிலைமையைக் கண்டதும் அவனே பிரமித்து விட்டான். 'தினம் தான் உள் நுழையும் சப்தத்தைக் கேட்டதும் ஓடிவந்து எதிர் கொண்டழைக்கக் கூடியவளுக்கு இன்று உண்டான விசனம் என்ன?' என அவன் மூளை வேலைசெய்து ஆரம்பித்தது.

'காந்தா! என் உனக்கு இவ்வளவு விசனம், காரணம் என்ன?' எனக்கேட்டுக் கொண்டே அவள் முதுகின் பக்கம்போய் நின்று கொண்டு கொஞ்ச ஆரம்பித்தான்.

'போங்கள் அப்படி, இந்த பசப்பு வார்த்தைகளுக் கெல்லாம் மயங்கிவிடுகிறவளல்ல' என பிடித்துத் தள்ளினாள்.

நாராயணன் நடுங்கி விட்டான்.

'அடேயப்பா! விசனத்துடன் கோபமும் உறவாடுகிறது போலிருக்கிறது. சரி, கொஞ்சம் உன் கோபமூட்டையைக் கட்டி ஓர் மூலையில் வைத்துவிட்டு எனக்கு சாதம் பரிமாறு.'

'என்னை ஏன் கூப்பிடுகிறீர்கள்? உங்களுக்குப் பிரியமானவர்களைக் கூப்பிட்டு பரிமாறச்சொல்லி ஆனந்தத்துடன் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்.'

'எனக்கு உன்னிடத்தில் பிரியமில்லையென்று யார் சொன்னது? எல்லாம் நீயே நினைத்துக்கொண்டு நீயே முடிவு கட்டுகினதாக்கும் எழுந்து வா.'

'வா முடியாது'

நாராயணன் உடம்பு துடித்தது. அப்போது அவன் கை மீசையின் பேரில் சென்றது. தான் ஒரு ஆடவன் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டான் போலும்.

'இதோ பார், எனக்கு மீசையில்லை? நான் ஓர் ஆடவன் அல்ல? ஓர் பெண் ஐயையோ—பெண்—உனக்கு இவ்வளவிருந்தால் மீசை முளைத்த ஓர் ஆடவன் எனக்கு எவ்வளவு கோபம் இருக்கு'மென்று மனதில் நினைத்துக்கொண்டு 'பேசாமல் எழுந்து வா' என்றான்.

'அவ்வளவு கோபமும், வீராப்பும் உள்ள நீர் இந்தப் பெண்ணிடம் வந்து ஏன் கெஞ்சிக் கூத்தாடுகிறீர்? நீங்களே பரிமாறிக் கொண்டு சாப்பிட்டுக் கொள்கிறதுதானே?'

'ஏது, உனக்கு இன்று இவ்வளவு டிகிரி ஏறிப்போயிருக்கிறது. ஒரு நிமிஷத்தில் டிகிரியை இறக்கிவிடுவேன். அழுகின்ற தன்மையுடைய பெண்ணுச்சே, ஒரு அடி கொடுத்ததும் கண்ணீர் கரைபுரண்டோடி வருமே. பாவம், என்று விட்டால் உனக்கு அவ்வளவு கர்வமா ஏறிவிட்டது ? வா இப்படி'

'முடியாது'

'வாமுடியாதா?'

'நான் எழுந்து எங்காவது தொலைந்து போய்விடுகிறேன். நீங்களே நன்றாக வாழுங்கள்.'

'இந்தா போகவேண்டாம். அப்படியே உட்கார். உன் கர்வத்தை அடக்குகிறேனா இல்லையோ பார்' என நாற்காலிக்குப் பின்னால் நின்றுகொண்டு மேஜையின் இரண்டு ஓரங்களையும் இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டான்.

காந்தாவும் அப்படியே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். ஓர் நாவலை எடுத்து வாசிக்கத் தொடங்கினாள். நாராயணன் அப்படியே நின்றவன் தான்.

அவ்வப்பொழுது காந்தா 'சரியாக டேடியைப்பாரும். அப்படி இப்படி திரும்பிப் பார்க்கப் போகின்றீர்.' என அவனையே அதிகாரம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

மணி 12 நடு இரவு. பேய்கள் வெளியேவந்து உல்லாசமாக உலாவும் நேரம். காரிருள். சந்திரன் பயப்பட்டு ஒளிந்து கொண்டான்.

காந்தா கண் மூடாமல் படித்துக்கொண்டே யிருந்தாள். திடீரென பின்னால் சப்தம் கேட்டது. காந்தா திரும்பி பார்த்தாள்.

எவ்வளவு நேரம்தான் நாராயணன் நிற்பான்? கால்வலியாலும் பசியின் கொடுமையாலும், நித்திரையினாலும் கீழேவிழுந்து குறட்டை விடுவதைக் கண்டாள்.

காந்தா நாற்காலியை விட்டு எழுந்தாள். வீட்டைவிட்டு வெளியேறினாள். தான் ஓர் பெண் என்பதையும் மறந்து தைரியம் எனும் உருக்கொண்டு அக்காரிருளில் அக்காரிகை புகுந்து கடிது சென்று மறைந்தனள்.

'டாங்,' 'டாங்' எனமணி 8 அடித்தது. நாராயணன் கண்ணைத் திறந்து பார்த்து மறுபடியும் மூடிக்கொண்டு சுற்றிலும் ஏதோ தேடினான். கைக்கு ஒன்றும் அகப்படவில்லை.

'காந்தா! எங்கு காபி காணம்? மணி 8 ஆகியும் இன்னம் ஏன் காபி போடவில்லை?'

பதிலில்லை. வீடா பதில் சொல்லும்?

படுக்கையை விட்டு எழுந்தான். அன்றைய ராத்திரி நடந்த சம்பவங்கள் யாவும் ஒரு க்ஷணத்தில் அவன் மனக்கண்முன் தோன்றி மறைந்தன. வீடெல்லாம் சோதித்தான். வீதிக்கதவு திறந்திருந்தது. அப்பொழுதுதான் அவனுக்கு சமாச்சாரம் விளங்கியது.

பாவம்! நாராயணன் நான்கு நாட்கள் ஓட்டலில் சாப்பிட்டான். ஐந்தாவது நாள் அவனையும் வீட்டில் காணவில்லை. எங்கு சென்றானோ!

நான்கு மாதங்கள் நகர்ந்தன. ஓர்நாள் எல்லாத் தினசரிகளிலும் கீழ்கண்ட சமாச்சாரம் காணப்பட்டது.

'உப்புச் சத்தியாக்கிரகத்தில் தடியடிப் பிரயோகத்தால் நாராயணனுக்கு பலமான அடிவிழுந்து விட்டது. ஆஸ்பத்திரிக்கு உடனே எடுத்துச் செல்லப்பட்டார். கவலைக்கிடமான நிலைமையிலிருக்கிறார்'

ஆனால் தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக சௌக்கியமடைந்து வருவதாக பத்திரிகைகள் மூலமாகத் தெரியவந்தது.

* * *

1 வருடத்திற்குப்பின் ஓர்நாள் பம்பாயிலுள்ள ஓர் பெரிய மைதானத்தில் 3 மணி முதலே ஜனங்கள் திரள்திரளாக வந்து கூட ஆரம்பித்தார்கள். 5 மணிக்கு ஆரம்பமாகப் போகும் தலைவர்களின் பிரசங்கங்களைக் கேட்கவே அப்படி வந்து கூடிக் கொண்டிருந்தார்கள். முக்கியமாக நாராயணனுடைய பேச்சுக்களைக் கேட்க மிகவும் ஆவலுள்ளவர்களா யிருந்தார்கள்.

5 மணிக்கு நாராயணன் வந்துவிட்டான். வந்த சமாச்சாரம் கூட்டத்தில் ஓர் மூலைக்குத் தெரிந்தது. அது ஓர் நிமிடத்தில் கூட்டம் பூராவும் பரவிவிட்டது. உடனே எங்கும் 'நாராயணனுக்கு ஜே!' என்னும் கோஷம் கிளம்பியது.

நாராயணன் காரை விட்டிறங்கினான். எல்லாத் தலைவர்களும் காரண்டை வரவேற்க வந்தார்கள். அத்தலைவர்களுள் ஓர் பெண்ணைக் கண்டதும் நாராயணன் பிரமித்து விட்டான். ஆனால் அதை மேலுக்குக் காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டான். அப்பெண்ணும் நாராயணனைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனாள். ஆனால் அவளும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை.

ஏன் பிரமித்தார்கள்?

நாராயணன் வெகுநாள் பிரிந்த தன் மனைவி, தேசியத் தலைவி காந்தாமணியைக் கண்டான். காந்தாமணி தன் சொந்த புருஷனைக் கண்டாள். இதுதான் அவர்கள் திடுக்கிட்டதற்குக் காரணம்.

பிரசங்கம் வெகு நேரம் நடந்தது. நாராயணன் உணர்ச்சி ததும்பும் ஓர் அருமையான பிரசங்கம் செய்தான். காந்தாமணிக்குச் சொல்லொணு ஆனந்தம். அவள் கூட அன்று ஓர் சிறிய பிரசங்கம் செய்தாள்.

* * *

'என்னை இப்படியும் மோசம் செய்யலாமா?' என நாராயணன் தன்பக்கம் அமர்ந்திருக்கும் காந்தாவைக் கொஞ்சலுடன் கேட்டான்.

'யார், நானு மோசம் செய்தேன்?' என்று சிறிது ஆச்சரியத்துடன் திருப்பிக் கேட்டாள் காந்தா.

'ஆம், நீ தான்'

'நான் செய்யவில்லை. நீங்கள் தான் என்னை மோசம் செய்தீர்கள். வேறு பெண்ணுடன் நேசங் கொண்டீர்களே, அது என்னை மோசம் செய்தமாதிரி யல்லவா?'

'யார் வேறு பெண்ணுடன் நேசங்கொண்டது?'

ஏன் உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் தான்'

'நானு?'

'ஆம்'

'எப்படித் தெரியும்' எனச்சிறிது கோபத்துடன் ஆவலுடனும் கேட்டான்.

'அன்று, நாம் இருவரும் பிரியும் தினம் மாலை, நீங்கள் பக்கத்து வீட்டில் 'கண்ணே! வா இப்படி. என் கட்டிக்கரும்பே வந்து என்

மடியின்பேரில் அமர்ந்தவண்ணம் எனக்கு ஓர் முத்தம் கொடு' எனப் பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்கவில்லை என்று நினைத்துக் கொண்டீர்களாக்கும்'

இதைக் கேட்டதும் நாராயணன் விழுந்து விழுந்து சிரிக்கலூரம்பித்தான். அவன் சிரிக்கச் சிரிக்க காந்தாமணியின் முகத்தில் கோபக் குறிகள் விரைவாக அதிகமாகிக் கொண்டிருந்தன.

'அதற்காகவா அன்று அவ்வளவு கோபத்தோடு பேசினுய்? ஐயோ பேதைப் பெண்ணே, நான் ஓர் கதை எழுதினேன். அக் கதையைப் பற்றிய மதிப்புரை தெரிவதற்காக பககத்து வீட்டு நண்பரிடம் படித்துக் காட்டிக் கொண்டிருந்தேன். அக்கதையில் ஓர் காதல் கட்டத்தில் வரும் கதாநாயகனுடைய பேச்சுக்களைப் படித்தேன். அதைக் கேட்டு இப்படி..........'

இச்சமயத்தில் ஓர் போட்டோ எடுக்கும் கேமரா இருந்திருந்தால் காந்திமணிபாயின் முகத்தைபோட்டோ எடுத்து அனுப்பியிருப்பேன்.

ஓர் கதையினுல் அக்காதலர் தேசிய வீரர்களானதைப் பாருங்களேன்!

---

ஏனய்யா உம்மிடம் வாங்கிய மாடு வண்டியில் அரை நிமிஷங்கூட நில்லாமல் படுத்துக் கொள்கிறது?

மாட்டுக்காரர்—நான்தான் அன்று தினமே அரை நிமிஷங் கூட வண்டியில் பூட்டினுல் நில்லாது என்றேனே. இப்பவும் அதைத் தான் சொல்லுகிறேன். —டி. வி. எம். ராஜன்



# கமலகாந்தா

[தேவகோட்டை வி. இராமநாதன்.]

## அத்தியாயம் 1.

### விதியால் மூண்ட விசாரம்

கன்னியா குமரிக்கருகில் அழகாபுரியையும் அமராவதியையும் தோற்கடிக்கவல்ல எழிலுடன் ஓர் நகரம் விளங்கியது. அந்நகரின் வனப்பை கம்பரும் காளிதாசனும் சேர்ந்து விஸ்தரித்தெழுதவ தெனினும் முடியாதெனின், அதனைப் பற்றி நாம் விவரிக்கப்புகின் மிகையாகுமெனக் கருதி விடுத்தனம். 'ஊரைக் கூறினும் பெயரைக் கூறலாகாது' என்ற நம் புண்ணிய பூமியின் சம்பிரதாயத்தை யொட்டி, அந்நகரின் உண்மைப் பெயரை மறைத்து, 'மங்களபுரி' என்ற புனைப்பெயர் கொண்டழைப்போம்.

எழில்பல மலிந்த இந்நாட்டின் தென்பகுதியில் ஒருசிறிய மலைச்சாரலும் அதன் வழிப்பாய்ந்த ஒரு நதியும் காண்போர்க்கு இனிமையளிக்கும் வண்ணமிருந்தன. இம்மலைச்சாரலின் நாற்புறமும் மா, பலா, கதலி ஏனைய விருக்ஷங்கள் படர்ந்து கனிகள் நிறைந்து ஓங்கி வளர்ந்திருந்தன. பழுத்த பழங்களின் வாசனையும், பலவகை மலர்களின் மணமும், பச்சை வெல்வெட்டு விரித்தாற்போன்ற பசும்புற்றரையின் தோற்றமும், தேனீக்களின் ரீங்கார நாதமும், குயிலினங்களின் கூவலும், மயிலினங்களின் ஆடலும், கிள்ளைகளின் பாடலும், காண்போர் கேட்போரை இன்பசாகரத்திலாழ்த்து மென்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இவ்வித மாண்புள்ள மலைச்சருக்கில் ஒருநாள் ஆதவன் அஸ்தமிக்கும் வேளையில் இரு ஆடவர்கள் சச்சரவிட்டுக் கொண்டிருந்தனர். இவர்களில் ஒருவர், 'அடே! அதிகமாய் பேசாதே! தனபாலா! இனி உன்னைப் பொருட்படுத்த மாட்டேன்! உன்குட்டை வெளிப்படுத்தி விடுவேன். நாவைக்காத்துப்பேசு! ஜாக்கிரதை!' என்றார். இதனைக் கேட்ட தனபால முதலியார், 'அடே! அயோக்கியா! நான் என்ன தகாதவற்றைச் செய்துவிட்டேன்' உன்னைப்போலென்று என்னையும் நினைத்தாய். வடிவேலா! வீணில் வம்புசெய்யாதே. விபரீதமாய் முடியும்' என்றார்.

'அடே! உன் மனைவி, ஒரு பரதேசிப்பயலை சோரநாயகனாக வைத்துக்கொண்டு விபசாரம் செய்துவருவதை நானறியேனே? அதிலும் விபரீதமென்ன விருக்கிறது? வாயைமூடு. வெளியில் சொன்னால் வெட்கம்! உனக்கு ஏன் இவ்வளவு மமதையோ?' என்றார் வடிவேல் முதலியார்.

முதலியார்களிருவர்களுக்குள் ஏற்பட்ட வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறியது. அவ்வழி நடந்த ஒரு கிழவர், இவர்களுக்கு நல்வார்த்தைகள்கூறி அவரவர் வீடேகச் செய்தார்.

அதிர்ஷ்ட வசத்தால், விடுபட்டு வழிநடந்த தனபால முதலியார், 'ஐயோ! இச்சண்டாளன் கொஞ்சமும் சிந்தியாமல் என் செவியில் நாராசம் வார்த்தாற்போல், எனது தர்ம பத்தினியை, பெண்களுக்கு உவமைகாட்டவல்ல உத்தமியை, கற்புக்கரசியை, அருங்குண நாயகியை விபசாரி என்றானே! என்ன சிந்தையோ அறிகிலேன்! ஏன்?...இருக்கலாம்! பெண்களின் கற்பை நம்மால் காவல்செய்ய வியலுமோ! எத்தனை பெண்மணிகள் தங்கள் புருஷர்களிடம், உதட்டில் தேனும் உள்ளத்தில் விஷமும்போல், பசப்பி பாசாங்கு செய்தலைகின்றனர்! இல்லாதது பிறக்காதன்றோ! ஐயோ! நான் மதியிழந்தேன்! பாபியானேன்! சிவசிவா! எனது ஆருயிர்நாயகி அவ்வாறு செய்திருப்பாளோ? ஒருக்காலு மிராது! வீண்பாபம், பெண் பாபம் பெரும்பாவம். அறியாமல் நினைத்தேன்' என்று சிந்தித்தவாறு சென்றார்.

நிறத்தில் கருப்பனை வெள்ளையனென்றும், குருட்டுக் கண்ணனை நல்ல கண்ணனென்றும், ஓர் அடிகூடத் தாண்ட முடியாதவனை தாண்டவராய னென்றும், நச்சுப்பாம்பை நல்ல பாம்பென்றும் கூறுவதுபோன்று அஷ்ட தரித்திராகிய நம்முதலியாரை தனபால முதலியாரென் றழைத்ததில் மிகையொன்று மில்லை! தரித்திரத்திலேயே வளர்ந்த தனபால முதலியார், தன்னைஒத்த குடியில் பிறந்து வளர்ந்த அபயாம்பிகை என்னும் அம்மணியை மனைவியாகக்கொண்டு இல்லறம் நடாத்திவரும் நாளில் ஓர் ஆண்மகவிற்குப் பெற்றோராகினர். அப்பாலன் நமது கதை தொடங்குகையில் பத்தாண்டு நிரம்பப் பெற்றான்.

விபசாரப்பழி சுமத்தப்பட்ட அபயாம்பிகையம்மை ஏழ்குடிப் பிறந்து ஏழ்குடியில் வாழ்க்கைப் பட்டிருப்பினும் பிறர்பொருளை நெருப்பென எண்ணும் சிந்தையாள். கணவனே தெய்வமெனக் கொண்டவள். கற்பில் கண்ணகியை யொத்தவள். ஏழைகளையும் அதிதிகளையும் அன்புடன் ஆதரிக்கும் மனத்தாள். வெளுத்ததெல்லாம் பாலெனக்கருதும் கள்ளங்கபடற்ற வெள்ளை மனத்தாள். கணவனின் காரியத்தில் மெய்வருத்தம் பாராள்; கண்துஞ்சாள்; பசிநோக்

காள். எறும்பு முதல் எல்லா உயிர்களும் வாழுந்தெய்வங்களென எண்ணி அவை இம்மியளவும் துன்புறச்சகியாள்.

இன்னோனைய ஏனைய நற்குணங்களும் நிறைந்த பதிவிரதா சிரோன்மணியின்பேரில், மலைச்சாரலில் பொறாமையின் போக்கால் ஆத்திரத்தின் கொடுமையால், வடிவேல் முதலியார் சுமத்திய வீண் பழியை, ஒருவேளை உண்மையாமோ வென்றெண்ணி ஐயங்கொண்ட மனத்தினராய் வீட்டை அணுகினர் தனபாலமுதலியார். கதவு என்று மில்லாத விதமாய்த் தாழிடப்பட்டிருந்தது. கதவை ஓங்கி அறைந்தார். அவரின் அருந்தவப் புதல்வன் கதவைத் திறந்தான்.

உள்ளே சென்றார். அத்தருணத்தில் அபயாம்பிகை ஒரு பரதேசிக்கு அன்னமிட்டு உபசரித்துக் கொண்டிருந்தாள். இப்பொழுது முதலியாரின் ஐயம்பலப்பட்டது. கண்களில் கோபப்பொறி விட்டெழுந்தது. பல்லை நறநற வென்று கடித்தார். நெஞ்சம் படபட வென்று துடித்தது சற்று மரம்போல் நின்றார். ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டன்றோ! திடீரென அம்மாதரசியின்மேல் புலிபோல் பாய்ந்து அவளின் சிகையை கரத்தில் பிடித்து நையப்புடைத்து, 'அடி! கள்ளி! பாதகி! என்மானத்தைக் கெடுத்த காதகி! என்ன துணிவு? நான் இல்லாத சமயம் பார்த்து, உனது ஆசைநாயகனை, கபடசந்நியாசியை, உன்கற்பைக் களவிட்ட கள்ளனை அழைத்து சரசலீலைகள் புரிந்ததுமின்றி, அன்னமும் படைத்தாய்! துரோகி! கணவனை வஞ்சித்தகாமி! நன்று!...நன்று! உணர்ந்தேன் உன் செய்கையை! கொண்ட கணவனுக்கு இரண்டகம்செய்த கிராதகி! உனக்கு நரகம் நிச்சயம் சித்திக்கும்! எப்பொழுது உன் கற்பைகளவு கொடுத்தனையோ, அப்பொழுதே நீ சண்டாளியாகினை! உனதுமுகத்தில் விழிப்பதும் தகாது! உன் கள்ளப்புருஷனைக் கட்டியழு 'என்று கர்ணகொடூரமாக மொழிந்து, அவ்விடத்தில் அரைக்ஷணமும் தாமதியாமல், 'அப்பா!...அப்பா!!' என்று அரற்றிய பாலனையும், 'வேசிமகனே!' என்று உதாசினப்படுத்தி உதைத்துத் தள்ளிவிட்டு ஏகிவிட்டார்.

வாசகநேயர்காள்! அப்பொழுது தவவேடம் தரித்து அபயாம்பிகையால் அன்னம்படைக்க ஆனந்தமாக உண்டுகொண்டிருந்த சந்நியாசியை யாரென எண்ணுகிறீர்கள்? அவன்தான் மலைச்சாரலில், தனபாலமுதலியாருடன் கைகலந்த கசடன் வேலாயுத முதலியார்.

என்னே அநியாயம்! இவ்வுண்மை பரிபாலஉலகில், ஒரு சிறு துரும்பிற்கும் உதவாத அற்பக்காரியங்களிலிருந்து ஆத்திரம் உண்டாகி, இறுதியில் வீண்பழியில் வந்துமுடிகின்றது. காரணம், மக்கள் உண்ணும் பொழுதோ, உலாவும் பொழுதோ, உறங்கும் பொழுதோ மடியும் மக்கள், லக்ஷாதிபதிமுதல் பிக்ஷாதிபதிவரை இறுதியில் ஒரு பிடி சாம்பலாவது நிச்சயமென்பதை உணராமல், பிறந்தபொழுது

கொண்டு வந்தோமில்லை, அன்றி இறக்கும் பொழுது கொடுபோவதில்லை என்பதை யறியாமல், இத்துன்ப உலகில் இன்பமாய் வாழவெண்ணி தம்மின் மிக்காரையும் ஒப்பாரையும் தாழ்த்த முயற்சிப்பதாலன்றோ! என்னே அறியாமை! என்னே மடமை! என்னே கொடுமை! வல்லவனுக்கும் வல்ல ஒருசக்தி, பரம்பொருள் ஒன்று இருப்பதை அறிந்தால் வீண்பழி சுமத்தி தாழ்த்த முயல்வரோ!

நிற்க, தனித்து நின்ற தையல், கண்ணீரைக் கரைபுரளவிட்டு, 'என்ன உலகமிது! பேதை என்னை, ஒன்றுமறியாத ஏந்திழை என்னை, நிரபராதி என்னை 'விபசாரி' என்றார்! எனக்கொன்றுமே விளங்கவில்லையே! குற்றமற்றவர்களைக் குற்றமுள்ளோராகக் காட்டுவதும், கொடும்பாவிகளை பரிசுத்தமுடையோராகக் காட்டுவதும் இம்மாய உலகின் மாயைபோலும்! களங்கமற்ற என்னை கற்பிழந்தவளெனக் கற்பனைசெய்த உலகம்! நான் ஏன் இவ்வுலகில் இனிவாழ வேண்டும்? மானங்கெடவரின் வாழாமை முன்னினிதன்றோ! இப்பத்தாண்டுப் பாலனில்லா விட்டால் அக்கொடுஞ் சொற்களைக்கேட்ட மாத்திரத்திலேயே உயிர்விட்டிருப் பேனன்றோ! ஏ ஜகன்மாதா! நீயே கதி. சிக்ஷிப்பதும் ரக்ஷிப்பதும் உனது கடமை. நீயன்றி ஓர் அணுவும் அசையாது' என்று வாய்விட்டழுது மண்ணில் வீழ்ந்தாள். தாய் வீழ்ந்ததைக்கண்ட தனயன் விம்மினான். சற்று நேரத்தில் தெளிந்தெழுந்த அபாயம்பிகை யம்மாள் மண்டியிட்டு, கரங்குவித்து, 'ஏலோக மாதா! என்னை எனது நாதர் தூஷித்ததைக்கேட்ட மெய்யடியாரின் மனம் எப்பாடு பட்டதோ! பெரிய தவசிரேஷ்டர்களின் மனத்தாங்கல் பொல்லாத தன்றோ! எனது நிலை குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டது போலாகி விட்டதே! அந்தோ! என் செய்வேன்! எனது பர்த்தா அறியாமற் செய்த பிழையை உனது கிருபாகடாக்ஷத்தால் மன்னித்து இந்த அபலையை ஆதரித்து காப்பாற்றி யருள்வாயாக. என்னைப் பிரிந்த எனது நாயகன் எங்கு வாழ்கினும் நன்கேவாழ கடாக்ஷிப்பாயாக,' என்று கபடற்றகாரிகை உண்மை உணராத உத்தமி விண்ணை நோக்கிப் பிரார்த்தித்தவண்ணம் கண்ணயர்ந்தாள். (தொடரும்)



# கோமளசேகரன்

[S. A. சிதம்பரம்]

(சென்றமாதத் தொடர்ச்சி)

தர்மபுரி கோர்ட்டில் நடந்த அவ்வற்புத செயல் செயல்கள் யாவற்றையும் கேள்வியுற்ற தனபாலன் தான் பறிகொடுத்த மாதும் நண்பனும் உயிர்பெற்று வந்ததற்காக அதிக ஆனந்தங்கொண்டு தானே அங்கு சென்று அன்னவர்களைக்கண்டு தனது நண்பனை மார்புறத் தழுவி 'நண்பரே உம்மை பிரிந்தது முதல் இந்நாள்வரை யான் அடைந்த மனோவேதனையை என்னென்று உரைப்பேன். கோமளா! உன்னைப் பிரிந்து நான்பட்ட துன்பங்கள் கணக்கிலடங்கா. என் முன்னோர்கள் செய்த புண்ணியத்தின் பயனே நான் உங்கள் இருவரையும் மீண்டும் காணப்பெற்றது' என்று பலவாறு சொல்லினன். இதுவரை பெண்ணாக நடித்த நமது சந்திரசேகரர் 'தலைவா எல்லாம் ஆண்டவன் அருளினால் நன்மையாகவே முடிந்தன. நான் தங்களை விட்டுப் பிரியாமலிருந்தால் தாங்கள் அழைத்து வந்த இம்மாதை ஒருநாளும் காணப்போவதில்லை. இம்மாது வெளிவந்தது அன்னவளின் முன்னோர்கள் செய்த தவப்பலனே என்பதற்கு சிறிதும் ஐயமில்லை. அது இருக்கட்டும்.

நான் தங்களை பிரியும்போது தங்களிடம் கொடுத்துச் சென்ற கடிதத்திற்கு யாது முடிவு செய்தீர்கள்' என்று வினயமாய் கேட்டார். தனபாலன் 'சேகரா அதைப்பற்றி கவலையுறுதீர். நான் உம்மை பிரிந்து மிக்க மனவாடி ஒரு மாத்தடியில் சயனித்திருந்தேன். அச்சமயம் உமது கடிதம் நினைவுக்குவர அக்கடிதத்தை எடுத்து வாசித்து அது மிகவும் முக்கியமானதென நினைத்து அதிவேகமாக இங்கு வந்து எனது தந்தையிடம் அளித்து யுத்தம் நடவாதபடி காரியத்தை முடித்து உம் அரசருக்கும் பதிலனுப்பியுள்ளேன். ஆதலால் நாம் நமது இருப்பிடம் செல்வோம்' என்று சொல்ல மூவரும் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு மன்னர் மாளிகை யடைந்தனர்.

## அத்தியாயம் 5.

ஓர்நாள் காலை சுமார் 7-மணிக்கு நமது சந்திரசேகரர் தனது உயிர்த்தோழனான தனபாலனை யணுகி 'அரசே நான் எனது அரசனை விட்டுப்பிரிந்து பல மாதங்களாயின. நான் இங்கு வந்தோ சில வாரங்

ளாயின. இனி இங்கு தாமதிப்பதுஅழகல்ல. ஆதலால் தயவுசெய்து எனக்கு போக உத்திரவு கொடுங்கள்' என்று வேண்டினர்.

இக்கடுஞ் சொற்களைக் கேட்ட தனபாலன் 'சேகரா, இனி நீர் உமது அரசரிடம் செல்லத் தேவையில்லை. நானும் உம்மை அனுப்புவதாய் யோசனையில்லை. ஆதலால் அந்த கவலையை விடுத்து, இதுவே உம் இருப்பிடமாக வாசம் செய்யும்' என்றனன்.

சந்திரசேகார்:—அரசே 'நான் சொல்வதை சற்று கவனிக்க வேண்டுகிறேன். நானே தங்களுக்கு லிகிதம் கொண்டுவந்தவன். இந் நிலைமையில் இங்கேயே இருப்பது உசிதமில்லை. யாதலால் நான்சென்று அம்மன்னரின் அனுமதி பெற்று இந்நகர் மீள்கிறேன். தயவுசெய்து நான்போக அனுமதியுங்கள்'

இவ்வார்த்தைகளை கேட்ட தனபாலன் ஒரு நிமிஷம் கூட அன்னவனை பிரிந்து இருக்க முடியாத நிலைமையிலிருந்தும் ஒருவாறு தானே சமாதானம் செய்துகொண்டு 'சேகரா, இனி அதிக தாமதம் செய்யாது சீக்கிரம்போய் திரும்பிவிடும்' என்று அனுமதியளிக்க இருவரும் கோமளவல்லியை அணுகினர்கள்.

தனபாலன்:—கோமளா. உனது உயிரை காத்த எனது உயிர் தோழர் தனது ஊருக்கு செல்ல அனுமதி பெற்றுப்போக வந்துள்ளார்.

கோமளவல்லி:—என்ன அவருக்கு இனியும்போக அனுமதி யளிப்போமா! அவர் அங்குள்ளவர்களை மறந்து இங்கேயே இருக்கும் படி சொல்லி விடுங்கள்.

சந்திரசேகார்:— கோமளா! அதிக காலதாமதம் செய்யாதே. போக அனுமதி கொடு. கூடிய சீக்கிரத்தில் திரும்பி விடுகிறேன்.

கோமளவல்லி—அன்பரே, தங்களை பிரிந்து எங்களால் இங்கே வாசம் செய்ய இயலாது. ஆதலால் உங்களை போக அனுமதிக்க முடியாது.

சேகார்:—வல்லியே, நான் சென்று அதிக தாமதம் செய்யாது திரும்பி விடுகிறேன். தயவுசெய்து உத்திரவு கொடு. உன்னை நான் மிக மன்றாடி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தனபாலன்:—கோமளம், நமது நண்பர்தான் போய் சீக்கிரம் திரும்புவதாக சொல்லி ரொம்பவும் பிடிவாதம் செய்கிறார். நீ இனி அதிகம் தாமதம் செய்வது நமக்கழகல்ல வாதலால் அவர் சென்று வரட்டும்.

கோமளவல்லி:—அண்ணா! நமது சேகார் சீக்கிரம் திரும்புவது உண்மையானல் போய் வரட்டும்.

சந்திரசேகரர்:—நான் இவ்வளவு சொல்லியும் இன்னும் நம்பிக்கையில்லையா? உண்மையாக நான் கூடிய சீக்கிரம் திரும்பி விடுகிறேன்.

கோமலவல்லி:—அன்பரே தாங்கள் வருவது உண்மையாயின் என் ஞாபகத்திற்கு எனது மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள் தங்கள் ஞாபகார்த்தமாக தங்கள் சாமான் ஒன்றை தாருங்கள். வரும்வரை பார்த்து ஒருவாறு சமாதானத்துடனிருக்கிறேன்.

சேகரர்:—நீங்கள் எனது சாமானைக் கண்டு திருப்தி அடைவதைவிட எனது புகைப்படத்தை கண்டு ஆனந்தங்கொண்டு நிம்மதியடையுங்கள்' என்று தன்னுடைய சட்டைக்குள்ளிருந்து அதை எடுத்து கொடுத்தனன்.

கோமளவல்லியும் அதிபோாவாக்கொண்டு அப்புகைப்படத்தைக் கண்டு 'ஹே என் ஆசைநேசா. அருமை காதலா' என்று சொல்லி தன்னை யறியாமலே கீழே விழுந்தனள். அவ்வார்த்தைகளை கேட்ட சந்திரசேகரர் இனி தாமதித்தால் தனது பயணம் தடைப்படுமென்று உறுதிகொண்டு மறுகிமிடமே பிரயாணமாயினர்.

விஜயபுரியில் ஓர் உன்னத மாளிகையின் வெளி ஹாலில் போடப்பட்டிருந்த ஓர் பிரம்பு நாற்காலியில் ஓர் ஆடவர் வீற்றிருந்து ஏதோ பலவாறு யோசனைசெய்து கொண்டிருந்தனர். சிறு நேரத்திற்கெல்லாம் சேவகன் ஒருவன் சில கார்டுகளையும், கவர்களையும், மற்றும் சில பேப்பர்களையும் எடுத்துவந்து அவ்வாடவர் வீற்றிருக்கும் பிரம்பு நாற்காலிக்கு எதிரில் போடப்பட்டிருந்த மேஜையின் மேல் வைத்து உறையை பிரித்து உள்ளிருந்த கடிதங்களை வெளியில் எடுத்து வைத்து அதன்மேல் பேப்பர் வெயிட்டை வைத்துவிட்டு ஒதுங்கி நின்றனன். யோசனையில் ஆழ்ந்திருந்த ஆடவர் ஒவ்வொரு கடிதங்களையும் வாசித்து பார்த்து தனியாக எடுத்து போட்டுவிட்டு அன்றைய தினசரிப் பேப்பரை எடுத்து பிரித்தனர். முன் பக்கத்தில் பெரிய எழுத்தில்,

'10000 ரூபாய் பெறுமானமுள்ள தங்க பதக்கம் பரிசு ஓர் பெண்மணி பெற்றாள்.

கொள்ளை கூட்டத்தார் பிடிபட்டனர்'

என வரையப்பட்டிருப்பதைக் கண்டு அதன் விஷயத்தை புணா அவாக்கொண்டு கவனித்தார். அதில் 'தருமபுரிக்கப்பாலுள்ள ஓர் இருண்ட காட்டில் ஓர்பெரும் கொள்ளை கூட்டத்தார்கள் பல ஆண்டுகளாக வாசம்செய்து வந்தார்கள். அவர்கள் புரிந்த கொலைகளும் கொள்ளைகளும் கணக்கிலடங்கா. அக்கொடியவர்களை கண்டு பிடிப்பதாக செல்லும் எந்த வீராதி வீரர்களும் மறுநாள் காணமாட்டார்கள்.

அப்பெருங் கூட்டத்தார்களை ஓர் பெண் ஆணுடை அணிந்து அவர்களுடன் சிலநாள் இருந்து அறிய செயல்பல புரிந்து அவர்களை வெளியாக்கி யாவரையும் பிடிபடச் செய்து தீரமாக வெளிவந்தாள். அப்பாவையை கோமளவல்லி என்று சொல்லுவதாக தெரிகிறது—என்று படித்தார். படித்தவர் அவ்வரிய செயல்புரிந்த அப்பாவை தன் மகளாக இருக்கலாமோ என யோசனை செய்துகொண்டிருந்தார். அச்சமயம் ஓர் மாது வெற்றிலை தாம்பாளத்துடன் உள்ளிருந்து வெளிவந்து அங்கு வீற்றிருக்கும் ஆடவரை அணுகி 'நாதா, இன்று தங்கள் முகம் மாறுபட்டிருக்க காரணமென்ன? நமது கோமளத்தைப்பற்றி ஏதேனும் தகவல் தெரிந்ததா' என்று கேட்டனள். அப்பிசபு—நாற்காலியில் வீற்றிருந்த ஆடவர் குமாரஜி என்பது நேயர்களுக்கு நன்கு விளங்குமாதலால் அதிகம் சொல்லாது விடுத்தோம். தனது பத்தினி கேட்டவைகளை செவிமடுத்த குமாரஜி கமலா 'நமது பெண்மணியினின் தகவல் ஒன்றும் தெரியவில்லையானுலும் இதோ பார்' என்று அப்பேப்பரை காண்பித்தார். குமாரஜியின் பத்தினியான கமலவல்லி அதை வாசித்து 'நாதா, ஒருவேளை இதில் எழுதி இருக்கும் கோமளம் நம்மகளாக இருக்கலாமோ! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவளாகவே இருந்தாலும் அவளுடன் சென்ற சிலன் எங்கே சென்றிருப்பான்' என்று வினவினள்.

குமாரஜி:—கமலா, நீ சொன்ன யாவற்றையும் நான் முதலிலேயே யோசித்து விட்டேன். உலகம் அறியாத அப்பெண்பாவை எங்கு சென்றுளோ, எக்கஷ்டங்களை அனுபவிக்கிறுளோ. இனி நாம் என்ன செய்யப் போகிறோம்?

கமலவல்லி—நாதா, நீங்கள் நமது அரசரிடம் அனுமதிபெற்று தருமபுரி அடைந்து விஷயத்தை தெரிந்து வாருங்கள்.

குமாரஜி:—நமது பெண் வெளிச் செல்ல காரணம் நீயே. அவள் ஆசை கொண்ட சிலனுக்கே நாம் அவளை கலியாணம் செய்திருந்தால் அவளுக்கு இக்கஷ்டங்கள் ஒன்றுமே வந்திருக்காது.

அவளும் நிம்மதியாக காலம் கழிப்பாள் நமக்கும் சந்தோஷமாக இருக்கும். நடந்ததைப்பற்றி வீணில் வருந்துவதில் யாது பயன்? இனி நடக்க வேண்டியதை யோசிப்போம்.

கமலவல்லி:—நாதா, நான் என் செய்வேன்? நம்மகள் இவ்விதம் வெளிச் செல்வாள் என்று தெரிந்திருந்தால் அவளிஷ்டப்படியே முடித்திருக்கலாம். அவளின் வாழ்வைக் கெடுக்க நான் எமனுக வந்தேன். பாபம்! அப்பாவை எங்கு எக்கஷ்டங்களை அனுபவிக்கிறுளோ? ஈசன்தான் துணைபுரிய வேண்டும். நம்மால் ஆவது யாதொன்றுமில்லை' என்று கண்ணீர் வடிய மிக தாழ்ந்த குரலில் மொழிந்தாள்.

குமாரஜி:—கமலா, முன் யோசனையில்லாமல், நீ சொன்ன வார்த்தைகளை கேட்டு நானும் புத்திகெட்டேன். இனி நீ வருந்துவதில் யாது பயன்? அந்நாளில் பிரமன் எழுதியது பொய்த்துப் போகுமா. நான் என் செய்வது, எப்பாடுபட்டும் பயனில்லையே. ஒருவராகிலும் கண்டதாகக் கூற முன்வரவில்லையே. இன்னும் நடப்பதை கவனிப்போம். எனக்கும் நேரமாகிறது' என்று சொல்லிக்கொண்டு தாம்பூலம் தரித்துக்கொண்டு 'கமலா வீணில் வருந்தி மனதை புண் செய்து கொள்ளாதே. கோமளம் உயிரினுடனிருந்தால் எப்படியாவது தேடி அழைத்துவர ஏற்பாடு செய்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே வெளிக்கிளம்பினர். மறுபடியும் 'நாதா! தாங்கள் சென்று மன்னர் அனுமதிபெற்று தாமதம் செய்யாது தருமபுரி யடைந்து புலன்விசாரித்து தெரிந்து வாருங்கள்' என்று மிகவும் தாழ்ந்த குரலில் தெரிவித்தாள். இருவரும் சம்பாஷத்துக் கொண்டிருக்கையில் ஒருவன் ஓர் உறையிலிட்ட கடிதத்தைகொண்டு வந்து குமாரஜி கையில் கொடுத்து வணங்கி நின்றான். அவரும் கடிதத்தை பிரித்து பார்த்துவிட்டு 'கமலா, என்னை கருணாகரர் வரவேண்டுமென எழுதி இருக்கிறார். ஏதோ ஓர் முக்கியமான காரியத்தைப்பற்றி பேசவேண்டுமாம். ஆதலால் இனி தாமதியாது நான் சென்று வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே வெளிவந்து தமக்கென தயாராக நின்றிருந்த குதிரை வண்டியில் ஏறி அமர்ந்தார். வண்டியும் அதிவேகமாக கருணாகரர் இல்லம் அடைந்து நின்றது. வாயில்காப்போன் உடனே எதிர்சென்று குமாரஜியை வரவேற்று உள்ளே அழைத்துச்சென்று முன் ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவில் அமரச் சொல்லினன்.

குமாரஜி:—மருதா, ஐயா எங்கே? உள்ளே இருக்கிறாரா அல்லது வெளியில் சென்றிருக்கிறாரா?

மருதன்:—எஜமான், உள்ளேதான் இருக்காருங்க. நான் சென்று அழைத்துவரேங்கே.

கு-ஜி:—மருதா, அவசரமில்லை, ஐயா மெதுவாக வரட்டும்.

மருதன்—நீங்க வந்த உடனே என்னை வந்து எஜமான் உள்ளே சொல்லச் சொன்னாருங்க.

கு-ஜி:—அப்படியானல் நீ தெரிவித்து வா.

மருதன் சென்று உள்ளே ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு மிக ஆழ்ந்த யோசனையிலிருக்கும் கருணாகரரை அணுகி வணங்கி நின்றான். உடனே கருணாகரர் 'மருதா, குமாரஜி வந்துவிட்டாரா? இல்லையேல் சென்று பார்த்துவா, நேரமாகிறது. வீண்காலம் கடத்தாதே' என்றனர். அம்மொழியைக்கேட்ட மருதன் 'அந்த எஜமான் வந்து விட்டாருங்க. அதைச் சொல்லவே நான் வந்தேனுங்க' என்

ஞன். அவ்வார்த்தையைக் கேட்டதும் கருணாகரன் மறு பேச்சில்லாமல் வெளிவந்து அங்கு வீற்றிருக்கும் குமாரஜியைக் கண்டு 'வாருங்கள், வாருங்கள். தங்கள் வரவைத்தான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்று உபசரித்தார்.

குமாரஜி:—கருணாகரரே, நான் தங்களிடம் வருவதாக யோசனை செய்துகொண்டிருந்தேன். அச்சமயம் தாங்கள் அனுப்பிய கடிதமும் வந்தது. உடனே புறப்பட்டு வந்தேன். காரணம் யாது?

கருணாகரர்:—குமாரஜி, நான் தங்களை அழைத்ததைப்பற்றி பிறகு பேசிக்கொள்வோம். தாங்கள் இன்றைய பேப்பரை பார்த்தீர்களா? அப்பெண்மணி யாராக இருக்கலாம்? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

குமாரஜி:—நண்பரே, நானும் அதைப் பார்த்து யோசித்து பின்னர் தங்களுடன் யோசிப்பதென முடிவு செய்தேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கருணாகரர்:—அன்பரே, நமது கோமளமாக இருக்குமோவென ஐயங்கொண்டேன்.

நான் அவ்விதம் நினைக்க வேறு காரணமும் உண்டு. அதாவது நேற்று தருமபுரியிலிருந்து பெரியவர் ஒருவர் வந்திருந்தார். அவர் அதைப்பற்றி என்னிடம் தெரிவித்தார். அப்பெண்ணிற்கு 15, 16, வயதிற்கு மேலிருக்காது என்றும் அதிக உயரம் பருமன் இல்லை என்றும் சொன்னார். அவ்வடையாளங்க ளிருந்தும் அப்பெண்ணுடன் ஒருவன் இருக்கிறானாம். அவனுக்குசந்திரசேகரர் என்றுபெயராம். அவர் சொல்லும் சிலவிவரங்களிலிருந்து எனக்கு கொஞ்சம் சந்தேகம் உண்டாயின. ஆதலால் தாங்கள் நாளைய மெயிலுக்கு புறப்பட்டு தர்மபுரி அடைந்து சகல விஷயமும் உணர்ந்து திரும்புங்கள்' என மொழிந்தனர். குமாரஜியும் அவ்வார்த்தைகளை பொறுமையாக கேட்டிருந்து 'நண்பரே, நான் அவ்விதமே சென்று திரும்புகிறேன்' என சொல்லி அனுமதிபெற்று வெளிப் புறப்பட்டார்.

## அத்தியாயம் 6.

மூர்ச்சைபடைந்த கோமளவல்லியை கோகில குமரியும் மற்றுமுள்ளவர்களும் சிகிச்சைசெய்து வேண்டிய உபசாரம் செய்தபின்னர் அம்மாதும் களைநீங்கி எழுந்தனள். யாவரும் பூங்காவிற்கு சென்று பொழுது போக்கான சம்பாஷணைகள் பலபுரிந்து ஓர் இடத்தில் அமர்ந்தனர்கள்.

கோமளவல்லி:—கோகிலா, ஏதேனுமோர் கதையாவது சொல். அவ்விதத்திலாவது நாழிகையைக் கழிக்கலாம்.

கோகிலகுமாரியும் 'சகோதரி நானும் உனது மனக்கவலையைப் போக்க ஓர் கதை சொல்லலாமென நினைத்தேன். நீயும் ஆவலோடு இருப்பதால் சொல்கிறேன், கவனி' என்று கதை சொல்லத் தொடங்கினள்.

மல்லிகார்ச்சுனபுரம் என்னும் நகரத்தின் கீழ்கோடியில் ஓர் உத்தியானவனம் ஒன்றுண்டு. அவ்வனத்தின் வனப்பைப்பற்றி கூற வேண்டுவேண்டுமாயின் நமது வாழ்நாளே போதாது. அத்தகைய வனத்தில் பல இடங்களிலும் பல சாயுமான பெஞ்சுகளும் சாதா பெஞ்சுகளும் போடப்பட்டிருந்தன.

அதோடு பளிங்கு கற்களாலும் சலவை கற்களாலும் சிமிண்டாலும் அநேக விநோத வேலைப்பாடுகளுடன் அநேக மேடைகள் கட்டப்பட்டிருந்தன. அதன் அமைப்பை நோக்குங்கால் அது தனவந்தர்களுக்கென்று உண்டானது என்று சொல்லாமலே விளங்கும். அதைச்சுற்றி அநேக மின்சார விளக்குகளும் ஜொலித்துக் கொண்டிருக்கும். அத்தகைய தோட்டத்திற்கு பாலர்களும், பெண்களும் மாணவர்களும் மாணவிகளும் மாதர்களும் ஆடவர்களும் காதலர்களும் வந்து குழுமி தம்மிஷ்டமான நேரம் வரையில் அங்கு பொழுது போக்குவார்கள்.

ஓர்நாள் மாலை 5மணி சுமாருக்கு ஓர் கட்டழகி மந்தகாசமான முகத்துடன் காண்போர் காமுறத்தக்க கட்டுமஸ்தான தேகக்கட்டுகளுடன் வெகு ஒய்யாரமாக தனவந்தர்களுக்கென்று அமைக்கப்பட்டிருந்த ஓர் மேடையில் அமர்ந்து அதிஉற்சாகத்துடன் தன்கையிலிருந்த தமிழரசு மலர் ஒன்றை படித்துக் கொண்டிருந்தனள். அவளுக்கெதிரில் பசும்புல் தரையில் துக்கமே உருவாய்க்கொண்ட அவளது உயிர்த்தோழி விலாசவதி தன் விதியின் பயனை நொந்து ஏதோ யோஜனை செய்தவாறு உட்கார்ந்திருந்தனள்.

மாது:-(தன் தோழியைநோக்கி) விலாசவதி, நீ ஏதோ யோசனை செய்வதாக தோன்றுகிறதே. ஒருநாளாவது நீ இவ்விதமிருந்ததில்லையே. காரணமென்ன தெரிவிப்பாயா?

விலாசவதி:—அக்கா நீ என்ன புதிதாக கேட்கிறாய் எல்லாம் உனக்கு தெரிந்ததுதானே.

மாது:—'பொம்மை விவாகம்' ஆண்பெண்களை விற்குதல்.

இத்தகைய கஷ்டங்கள் உள்ளளவும் நமக்கேது சுயேச்சை. எல்லாம் தெரிந்த நீயே வீணில் வருந்தி வாடுவதில் யாதுபயன்?

நம்நாட்டில் பொருத்தமற்ற விவாகங்கள் ஒழிந்து காதலர்கள் தங்கள் மனதிற்கு ஒத்த, பிடித்தவர்களை கலியாணம் செய்யவும்

விதவா விவாகங்கள் நடைபெறவும் என்று நாம் கைக்கொள்வோமோ அதுவரை நம்மக்கள் கதி அலங்கோலமே. விலாசு, எத்தனை மங்கையர்கள் தனக்குரித்தான ஆடவர் அமையப்பெறுமல், வேசித்தனத்தை கைக்கொள்ளுகிரார்கள். சில கிராதகர்களினிடையே அகப்பட்ட மாதுகள் மனமுருகி செய்வகை அறியாது தற்கொலைகளும் புரிந்து கொள்ளுகிரூர்கள். அதற்கு காரணம் மூட நம்பிக்கை கொண்ட பெற்ரோர்களின் பொருளாசையும் ஜாதிபேதமுமே இதை பறக்கடிக்க என்று எம்பெருமான் கருணை கூறுவாரோ?

விவதி:—'பெண்களுக்கு கைநிறைந்த பொன்னினும் கண்ணிறைந்த கல்விக்குகந்த கட்டழகனே மேல்' என்று சொல்லுவார்கள். என் பெற்ரோர்களே என் எண்ணத்திற்கு மாருகச் செய்யும்போது நான் என் செய்வது? நான் காதலித்த நடராஜனையே நான் மணம்புரிவேன் என்று எவ்வளவு சொல்லியும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல் பயனற்றது. அவர்களும் தாங்கள் நினைத்த ஓர் வயோதிகனுக்கே கொடுப்பதென முடிவுசெய்து விட்டார்களாம். இனி எது செய்தும் பயனில்லை.

மாது:—விலாசு, நீ காதலித்த நடராஜனுக்கு ஏன் கொடுக்க மறுத்துவிட்டு அவ்வயோதிகனை தேடினுர்கள்?

விலாசவதி:—அக்கா, நடராஜர் ஓர் ஏழையின் புதல்வராம். அவரின் குலம் தங்களுக்கு பிடிக்கவில்லையாம். இவ்வயோதிகருக்கு சுமார் 60 வயதிற்கு மேலிருக்கும். அக்கிழத்திற்கு நான் மாலை யிட்டால் நான் நாலாவது மனைவி என எல்லோரும் சொல்லிக் கொள்ளுகிருர்கள். அவருக்கு பலர் பெண்கொடுக்க காரணம் பாழாய்ப் போகும் பொருளாசையே.

மாது:—நிலையற்ற பொருளின்மேல் மோகங்கொண்ட அறிவில்லா பெற்ரோர்கள் தம்மகளின் வாழ்நாளை பாழாக்க துணிந்தனர் போலும். பாபம், நாம் முன் ஜென்மத்தில் செய்த பாபத்தின் பலனே இப்பிறப்பில் பெண்ணுகப் பிறந்து அவதிப்படுகிரும்.

விலாசவதி:—அக்கா, தங்கள் காதலரிடமிருந்து 2, 3 தினங்களுக்கு முன் கடிதம் வந்ததாமே, என்ன விசேஷம்?

மாது:—நேற்றைக்கு முந்தினநாள் என் காதலரிடமிருந்து கடிதம் வந்தது. அதில் அவர் B. A. பாஸ் செய்துவிட்டு தற்சமயம் ஓர் கம்பெனியில் 150 ரூபாய் சம்பளத்திற்கு வேலையிலமர்ந்திருப்பதாகவும், இம்மாதம் 23ந் தேதி என்னை அழைத்துச் சொல்ல மதாசிலிருந்து வருவதாயும் எழுதியுள்ளார். கூடியசீக்கிரம் உன்னை பிரிய நேரிடுகிறதை நினைக்க என்மனம் கவலையுறுகிறது.

என்று இருவரும் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது ஒருவன் காற்றினும் கடியவேகத்துடன் ஓடி அங்குவந்து அம்மங்கையர்களை அணுகி மிக வணக்கத்துடன் 'அம்மணி தங்களை தந்தை அழைத்து வரச்சொன்னார்' என்றனன். ஒரு நாளுமில்லாமல் இன்று ஆள்வந்ததும் திகில்கொண்டு விஷயம் உணர ஆவல்மிக அடைந்து அதிபரபரப்புடன் வெளிவந்து தங்களுக்கென தயாராக ஸ்டார்ட் செய்யப்பட்டிருந்த காரில் அமர்ந்தனர்கள். காரும் மனோவேகத்தினும் அதிவேகமாக சென்று அவ்வழகியின் இல்லம் சேர்ந்தது.

ஒரே குழப்பம், அழுகுரல், அமக்களம். இத்தகைய அலங்கோலங்களை கண்ணுற்றமாது விஷயம் தெரியாது மனச்சஞ்சல மடைந்து காரணம் வினவ அழுதகண்ணும் சிந்தியமூக்குமாக ஓர் மூலையில் நின்றிருந்த வேலைக்காரி பூர்த்திசெய்யப்பட்ட ஓர் தந்திபாரத்தை கொடுத்தனள். அதுகண்டு உடல் நடுங்க நாகுழா அப்பாரத்தை பார்த்தனள்.

'குணபாலன் அரவம் தீண்டி

மாண்டான்'

ஜெயராம்.

என வரைந்திருப்பதைக் கண்டு அடங்காத் துயரங்கொண்டு ஓவென அலறி 'ஹே பரமதயாளா ஐயோ இனி என்செய்வேன். என் காதலருடன்கூடி சுகவாழ்வு வாழலாமென மனக்கோட்டை கட்டினேனே. கோட்டை இடிந்து பாழாயிற்றே. எங்குகாண்பேன்' என்று பலவாறு புலம்பி தவிக்கும் மாதை பலர் கண்டு சகிக்காவண்ணம் பலபெண்கள் கூடி கட்டி அழுது கலங்கிடச் செய்தனர்கள். ஊரார்கள் தன்னை செய்யும் துன்பங்களை தாங்காது வருந்தியும் தன் காதலனை பிரிந்த தன் ஊழ்வினையின் பயனை நினைத்தும் தாங்கொண்ணாத துக்கத்தால் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கி தன்னை யறியாமலே நித்திராதேவி வசமாயினள்.



# காதலரைப் பிரித்த காதகர்

[காரமடை. S. குழந்தைசாமி]



‘ஐயையோ! புலி வருகிறது! புலி வருகிறது! அப்பா! அப்பா! வாருங்கள், வாருங்கள்! புலி புலி!’ என்று கதறியவண்ணம் ஒரு நடுக்காட்டுக்குள் ஓடுகிறாள் ஒரு யௌவன மாது. யாரையும் உதவிக்குக் காணாது மிகவும் பயப்படுகிறாள். புலியும் நெருங்கிவந்து விட்டது. தன்னுயிருக்கு ஆபத்துவந்து விட்டதை யுணர்ந்த மாதின் மனம் படபடவென துடிக்கிறது. கால்கள் வெலவெலெனத் தளர்ந்து பின்னிக்கொள்கிறது. புத்தி தடுமாறிக் கீழேவிழுகின்றாள். புலியும் அவள் மேல் பாயும்சமயம். ஒரு புதரிலிருந்து துப்பாக்கிச் சத்தம் கேட்டது. புலிமாண்டு கீழேவிழுந்தது. அப்புதரினின்றும் ஒரு வாலிபன் துப்பாக்கியுடன் வெளியில் வந்தான். மங்கையிடம் ஓடினான். அவள் மூர்ச்சையாய்க் கிடப்பதையறிந்து தன் செவ்விய கரங்களால் அவளைத் தூக்கிக்கொண்டு சமீபத்திருந்த ஓடையை அடைந்து அவளுடைய முகத்தில் கொஞ்சம் தண்ணீர் தெளித்து இளங்காற்று அவளது வதனத்தில் படும் வண்ணம் தன்னிடத்திருந்த கைக்குட்டையால் மெதுவாக வீசினான். சிறிது நேரம் சென்றது. அம்மாது ஒரு பெருமூச்சுடன் அசைந்து கண்ணைத் திறந்து பார்த்து ‘விர்’ என்று ஒரு சப்தம் செய்தாள்.

‘பெண்ணே! பயப்பட வேண்டாம், சுட்டுக்கொன்று விட்டேன். செத்து விட்டது அப்புலி. ஆதலால் பயப்பட வேண்டாம்’ என்ற அவ்வாலிபன் சொல் காதில்விழவே, அம்மங்கையர்க்கரசி ஒருவாறு தைரியமுற்று கண்ணைத் திறந்தாள். தான் யாரோ ஒரு வாலிபனது இரு தொடைகளின்மீது சயனித்திருப்பதை யுணர்ந்தாள். திடீரென எழுந்து அவ்வாலிபனைச் சிறிது உற்றுநோக்கி நாணத்தால் தலை குனிந்தாள்.

‘பெண்ணே! பயப்பட வேண்டாம். புலியைக் கொன்று விட்டேன். ஆனால் ஒரு தனவந்தருடைய புதல்வியாகக் காணப்படும் நீ, இங்கு தனித்துவரக் காரணமென்ன?’ என்று கேட்டான் வாலிபன்.

‘ஐயா! நான் தனித்து வரவில்லை. நானும் என் தந்தையுமாக இங்கு வந்தோம். என் தந்தை இவ்வூர் ஜமீன்தாராகிய சந்திரசேகர முதலியார். அவர் வேட்டைக்குப் புறப்பட்டார். எனக்கு ஒரு மான்

குட்டி வேண்டுமென நானும் அவருடன் வந்தேன். என்னை இவ்விடத்தில் விட்டு விட்டு அவர் காட்டுக்குள் சென்ருர். பிறகு இப்போதைய நிகழ்ச்சி ஏற்பட்டது. ஆனல், எனக்கு உயிர் பிச்சைதந்த உத்தமாகிய தாங்கள் யாரென நான் அறியலாமோ!' என்று அக்கிளிமொழியால் கேட்டாள்.

இதுகாறும் இமை கொட்டாது அவளேயே பார்த்துக்கொண்டிருந்த அவ்வாலிபன் பெருமூச்சு விட்டுக்கொண்டு, 'பெண்ணே! நான் ஒரு அனுதை. இக்காட்டுக்குச் சமீபத்துள்ள, அதோ தெரிகிறதே, கிருஷ்ணபுரமென்ற அக்கிராமவாசி,' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது சந்திரசேகர முதலியார் வெகுவேகமாயோடிவருவதைப் பார்த்து, 'அதோ, உன் தகப்பனுரும் வந்து விட்டார்' என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டான்.

'ஐயா, தயவுசெய்து நில்லுங்கள். நீங்கள் எனக்குச் செய்த நன்றியை நான் என்றும் மறக்கமுடியாது. உங்களை என் தகப்பனுருக்கு அறிமுகப் படுத்திவைக்க விரும்புகிறேன். நில்லுங்கள்' என்று சொல்லி முடிப்பதற்குள் சந்திரசேகர முதலியாரும் அவ்விடம் வந்து 'கண்ணே! நீலா! என்ன சப்தம் செய்தாய்? உனக்கு ஏற்பட்ட ஆபத்தென்ன? இவன் யார்? இவனிடத்திலுனக்கென்ன பேச்சு!' என்று தன்மகளைக் கேட்டுக்கொண்டே அவ்வாலிபனைக் கோபத்துடன் பார்த்தார்.

'அப்பா! அவரை ஏன் கோபத்துடன் பார்க்கிறீர்கள்? அவர் தான் எனக்கு உயிர்ப்பிச்சை தந்த உத்தமர். அவரில்லாதிருந்திருந்தால் நான் இதற்குள் காலன் கைப்பாசத்தால் கவரப்பட்டிருப்பேன்' என்று விஷயத்தை விவரமாக எடுத்துச் சொன்னுள் நீலாவதி. 'சரி, வா, வீட்டுக்குப் போவோம்' என்று சொல்லித் தன்மகளைக் கூட்டிக்கொண்டு நடக்கலானுர் முதலியார்.

'என்ன ஆச்சரியம்! புலிவாய்க் கிரையாகவிருந்த என்னைக் காப்பாற்றிய அவ்வுத்தமருக்கு நன்றியான வார்த்தை ஒன்ருவது சொல்லாது வருகிருரே, இதன் மர்மம் ஒன்றும் விளங்கவில்லையே. ஒருவேளை அவருக்கும் நம்தந்தைக்கும் ஏதாவது விரோத மிருக்குமோ? எப்படி இருப்பினும் அவர் செய்த உதவி ஒப்பற்றதல்லவா? என்றும் மறக்கமுடியாத தல்லவா!' என்று தனக்குள் பலவாறு சிந்தித்துக் கொண்டும் அடிக்கடி அவ்வாலிபனைத் திரும்பிப் பார்த்துக் கொண்டும் வந்தாள் நீலா. அவ்வாலிபனும் அவர்கள் மறையும்வரை பார்த்திருந்து தன் வீடேகினன்.

சந்திரசேகர முதலியார் சித்தோடு ஜில்லா தத்தமங்கல கிராம ஜமீன்தார். இவர் சகலகலா வல்லுனராய் சகல சம்பத்தும் பெற்று

விளங்கினபோதிலும் வைதீகத்தில் தீவிரப்பற்றும் பிடிவாதகுணமு முடையவர். இவருடைய மனைவி சந்திரமதி பழைய கர்னடகம். 'குல மகளிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்' என்ற சொல்லையும், 'புல்லானு லும் புருஷன், கல்லானுலும் கணவன்' என்ற மொழியையும் அமிர்த மொழிகளென நம்பி நடப்பவள். இவர்களுக்கு நீலாவதி என்ற பெண் ணும் சுப்புராஜா என்ற 'புத்திரனும்' பிறந்தனர். சுப்புராஜுவுக்கு இப்போதுதான் 7 வயது ஆகிறது. 2-வது வகுப்பில் படிக்கிருன். நீலாவதிக்குப் இப்போது வயது 16. 3-வது பாரம்வரை படித்திருக் கிருள். புஷ்பவதியாய் விட்டதால் இனிப்பள்ளிக்கூடம் போகக் கூடாதென முதலியார் சொன்னதின்பேரில் இவ்வொரு வருஷகால மாக 'சிவில் ஜெயில் கை'திபோல் வீட்டிலேயே இருந்து வருகிருள்.

இவருக்கும் பக்கத்திலுள்ள நாசாபுரம் ஜமீன்தாருக்கும் நெடு நாளாக பகை. அப்படியிருக்க, ஒரு கால் ஏக்கர் பூமி தகாறு விஷய மாக இவர்கள் இருவருக்கும் வாய்ச்சண்டையாய், பிறகு கைச் சண்டையாய், கடைசியாகச் செருப்படிச் சண்டையுமாய் விட்டது. அதனல் கோர்டில் பெருத்த வியாஜ்யம் நடந்து முடிவில் சந்திரசேகர முதலியாரே ஜெயம் பெற்றுர். இதனல் வழக்கில் பெருத்தபொருள் நஷ்டமேற்பட்ட தன்னியில் மான நஷ்டவழக்கிற்காகவும் 50000 ரூபாய் நாசாபுரம் ஜமீன்தார் கொடுக்க நேர்ந்தது. எனவே அதிக கடனேற்பட்டு தன் ஜமீனையும் விற்றுவிட்டார். இதனல் அதிக வியாகூலமுற்ற நாசாபுரம் ஜமீன் மண்ணுலகைவிட்டு விண்ணுல கேகினர். அவருடைய ஏகபுதல்வன் புஷ்பாராஜு என்பவன் இப் போது கூலிவேலை செய்துகொண்டு கிருஷ்ணபுரத்தில் தனது பழைய வீடொன்றில் வசித்து வருகிருன். அவ்வாலிபன்தான் நமது நீலா வைக் காப்பாற்றிய உத்தமன்.

* * *

நிற்க, இச்சம்பவம் நடந்த மூன்றும்நாள் நீலாவதி தன்தாயி டம் சென்று, 'அம்மா! என்னை அன்று காப்பாற்றிய அவ்வுத்தம ருக்குத் தந்தை எந்தவித நன்றியும் செலுத்தாது வந்தது நன்றி கெட்ட தனமாகும். அனைதைக்கு அவ்வளவு பரோபகாரமிருக்கும் போது, ஜமீன்தாராகிய நமக்கு செய்நன்றி மறத்தல் என்றும் அழி யாப்பழிச் சொல்லாகும். ஆதலால் அவரை அழைத்து ஒருநாள் விருந் திட்டு அனுப்புதல் காலச்சிறந்ததாகும். இதைத் தாங்கள் தந்தையிடம் தெரிவிக்க வேண்டுகிறேன்' என்றுள்.

மகளது விருப்பத்திற்கு மாருக நடக்க மனமிசையாத சந்திர மதி தன் கணவனிடம் சொல்ல, அதற்கு முதலியார் சம்மதித்து புஷ்பாராஜுவைக் கூட்டிவா ஒரு சேவகனை அனுப்பினர்.

நிற்க புஷ்பராஜ் சென்ற இரண்டு தினங்களாக எத்தொழிலுக்கும் போவதில்லை. ஊக்கம் குன்றித் தூக்கம் இன்றி ஏக்கம் கொண்டு படுக்கையிலேயே புரண்டுகொண்டு பலவாறு சிந்திக்கலானான்.

'ஆஹா! என்னே அவ்வணங்கின் அழகு. மானிடப் பெண்ணுக்கும் இவ்வளவு காந்தியமையுமா! என்ன உருவம்! என்ன அன்பு! என்ன சாயல்! ஆ! அக்காரிகை என் கண்வழி புகுந்து எனது கருத்தைக் கவர்ந்து மனத்தைக் கலக்கிய தொருகள்ளியோ! அன்றிக் கள்ளமற்ற வொருகன்னியோ! அறியேனே. என்ன ஆச்சரியம்! திருமாள் எழுந்தருளியிருக்கும் திருப்பாற் கடல்போலப் பிரகாசிக்கும் கண்களையுடைய அவள் கற்பகத்தின் பூங்கொம்போ! அலைகடலளித்ததொரு பவளக்கொடியோ! ஓடாத இளமானோ! வாடாத பூவோ! மறையாத மின்னோ! உறையாத பொன்னோ! காயாத கனியோ! கரையாத கற்கண்டோ!' எனப் பலவாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஒரு சேவகன் வந்து ஜமீன்தார் கூட்டிவரச் சொன்னதாகத் தெரிவித்தான். இவ்வெதிர்பாராத செய்தியைக் கேட்ட புஷ்பராஜு மீண்டுமொரு முறை அவ்வனிதையைக் காணச் சந்தர்ப்ப மளித்த சர்வேசுவரனை மனதார துதித்துக் கொண்டே சென்றான்.

புஷ்பராஜுவை வரவழைக்க சந்திரசேகர முதலியாருக்கு உண்மையில் மனதார சந்தோஷம் கிடையாது. பழைய விரோதியின் மகனை அழைத்து உபசரிக்க வைதீகப்பிடிவாத குணமுடைய அவர் மனம் எப்படி இடங் கொடுக்கும்! ஆதலால் சந்திரவிலாஸ் மாளிகையில் புஷ்பராஜுவைச் சந்தோஷத்துடன் வரவேற்றது நமது நீலாவதியே.

* * *

அன்று மாலை மாளிகையின் பின்புறமிருந்த புஷ்பவனத்தில் போய் உட்கார்ந்து கொண்டிருந்த புஷ்பராஜ் சிந்தனையி லாழ்ந்திருந்தான். அப்போது பின்புறமிருந்து ஒரு ரோஜாபுஷ்பம் அவன்மடிமீது வந்து விழுந்தது. ஆச்சரியமுற்றுத் திரும்பிப்பார்க்க, தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காரிகையாகிய நீலாவதி சிரித்துக் கொண்டே, 'அன்பரே! ஏன் நான் போட்ட புஷ்பத்தைக் கோபத்துடன் பார்க்கின்றீர்கள்' என்று கூறியவண்ணம் வந்து புஷ்பராஜுவின் சமீபத்திலமர்ந்தாள்.

'ஒன்றுமில்லை, அப்புஷ்பம் தன் பெயரைமட்டும் எனக்கிந்து அதன் 'மணத்தை' எனக்குக் கொடுக்காது துரோகம் செய்ததல்லவா! அதற்காகத்தான்'

'அன்பரே! கவலைப்படாதீர்கள். கூடிய சீக்கிரம் உங்களுக்கு மணம் உண்டாகும்'

'அது முடியாதகாரிய மெனத்தோன்றுகிறது'

'அவ்விதம் நினைக்கும்படி உங்களைத் தூண்டியதெது?'

'என்! நீ எவ்வளவு வஞ்சகியோ, அவ்வளவு வஞ்சக நெஞ்ச முடையதல்லவா அப்புஷ்பம்'

'பிரியரே! நானும் அப்புஷ்பமும் அப்பேர்பட்டவர்களல்ல. ஆனால் உங்கள் தகப்பனரோ வஞ்சகர்'

'நீ சொல்வது எனக்கொன்றும் புரியவில்லையே'

'தான் பெற்ற பிள்ளையாகிய உங்களுக்கு ஒரு பொருளின் பெயரைத்தந்து அப்பொருளின் பயனை அனுபவிக்கும் மார்க்கம் தேடாது போய் விட்டார். அதாவது புஷ்பத்தின் பெயரை உங்களுக்குத்தந்து (அதன்) 'மணத்தை' உங்களுக்குத் தராது போய் விட்டார். ஆனல் நன்றியுள்ள நான் அம் 'மணத்தை' தந்தேன்,' என்று சொலிப் புஷ்பாராஜுவின் முகத்தை உற்றுநோக்கிப் புன்னகை புரிந்தாள். நீலாவதியின் கருத்தைக் கண்டு கொண்ட புஷ்பராஜ் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவளைக் கட்டிக்கொண்டு முத்தமாரி பொழிந்தான். பிறகு இருவரும் உரையாடிவிட்டு, இனி எக்காரணம் பற்றியும் ஒருவருடைய அனுமதியன்றி மற்றொருவர் வேறொருவரை மணம்புரிவதில்லை யென்று முடிவுசெய்து அதற்கு அறிகுறியாக அவர்களது கணையாளியை மாற்றிக்கொண்டு வீட்டுக்கு வந்தனர்.

* * *

மறுநாட்காலை புஷ்பராஜ் தன்னூருக்குச் சென்றான். அங்கு அவனுடைய நண்பன் வந்து மேட்டூரில் ஒரு பெரிய அணை கட்டுவதாகவும் அங்கு சென்றால் நல்ல தொழில் கிடைக்குமென்றும், ஆதலால் இருவரும் அங்கு போகலாமெனவும் தெரிவித்தான். தன் எதிர்கால வாழ்க்கைக்கு நல்லதோர் தொழில் தேடிக்கொள்ள வேண்டு மென்றிருந்த புஷ்பராஜாவுக்கு இச்செய்தி மகிழ்ச்சியைத் தந்தது. ஆதலால் புஷ்பராஜ் தன் நண்பனுடன் மேட்டூருக்குப் புறப்பட்டுச் சென்றான்.

ஆறு மாதம்வரை புஷ்பராஜுவுக்கும் நீலாவதிக்கும் எத்தகைய இடையூறுமின்றிக் கடிதப் போக்குவரவு நடைபெற்றது. இப்படி இருக்கையில் ஒருநாள் புஷ்பராஜு எழுதிய கடிதம் முதலியார் கையில் கிடைத்து விட்டது. மேலும் அக்கடிதத்தில் இன்னும் மூன்று மாதத்திற்குள் விவாகம் செய்து கொள்ளலாமெனவும் புஷ்பராஜ் எழுதி யிருந்தான். முதலியாருக்கு வந்த கோபத்திற்கு ஓர் எல்லை இல்லை. தன் மகளைக் கண்டபடி திட்டலானார். இவர்களிருவருடைய கடிதப் போக்குவரத்தைத் தடுக்கத்தக்க ஆட்களை நியமித்தார். நாதிகளைக்கொண்டும் மாந்திரீகர்களைக்கொண்டும் நீலாவதிக்கு

புஷ்பராஜுவின்மேல் கெட்ட எண்ணம் உண்டாகும்படியான தந்திரங்களைச் செய்தார். தன் தங்கையின் புதல்வனும் ராமநாதபுரம் ஜமீனுமாகிய பாலகிருஷ்னுக்குத் தன் மகளைக் கன்னிகாதானம்! செய்து தருவதாக ஒப்புக்கொண்டு அதற்கு வேண்டிய காரியங்களை வெகு துரிதமாய் நடத்திக்கொண்டு வந்தார்.

இவளுடைய தாதிகள் புஷ்பராஜு மிகவும் ஏழையென்றும், அவளது தகப்பனாரின் விரோதி என்றும் கூறுவர் ஒருசமயம். புஷ்பராஜு வேறொரு பெண்ணை மணந்துகொண்டு சிங்கப்பூருக்குப் போய்விட்டான் என்பர் இன்னொருசமயம். அவன் ரயிலில் சிக்குண்டு மாண்டுவிட்டான், அதனால்தான் அவனிடமிருந்து ஒரு கடிதமும் வருவதில்லை என்பர் மற்றுமொரு சமயம். இவ்விதமாகத் தாதிகள் அவளுடைய மனதைத் திருப்புவதற்குப் பலவிதத்திலும் முயன்றும் பலனில்லை. 'இல்லற இன்பத்தை அடையும் பாக்கியம் இருந்தால் புஷ்பராஜு மூலம்தான் அடைவேனே ஒழிய வேறு யாரையும் கனவிலும் கருதேன்' என பிடிவாதம் செய்தாள் நீலாவதி. மாந்திரீகர்களுடைய தந்திரமும் பலிக்கவில்லை.

முதலியாருக்கு ரௌத்திராகாரம் பொங்கிற்று. 'குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக்காம்பே! எக்காரணம் கொண்டும் நீ புஷ்பராஜுவை மணந்துகொள்ள முடியாது. அவன் என் விரோதி. ஆதலால் நீ கண்டிப்பாக பாலகிருஷ்ணனையேதான் மணந்தாக வேண்டும். இல்லையேல்....' என்று பயமுறுத்திப்போனார் முதலியார்.

பாவம் நீலாவதியோ இந்த மதத்தில் பிறக்கும் துர்ப்பாக்கியம் பெற்றவள். மேலும் ஜமீன்தாராகிய தன் தந்தையின் கட்டளையை மீறி நடக்கவு முடியாது. ஆனால் புஷ்பராஜுவைத் தவிர வேறு யாரையும் மணந்துகொள்ளவும் அவள் மனம் ஒவ்வாது. என் செய்வாள்? படுத்துக்கொண்டே சிறிதுநேரம் யோசித்தாள். திடீரென எழுந்தாள். ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டவள்போல் அவள் முகக்குறி காட்டிற்று. தன் தகப்பனாரிடம் சென்று 'தந்தையே புஷ்பராஜுவுக்கும் எனக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் நான் வேறொருவரை மணக்க விரும்பினால் அவருடைய அனுமதியை நான் பெறவேண்டும். ஆதலால் ஒரு கடிதம் எழுதி அவரைத் தருவித்து அவருக்கு நான் செய்திருந்த சத்தியத்தை 'வாபீஸ்' வாங்கின பிறகு உங்கள் இஷ்டம்போல் யாரை வேண்டுமானாலும் மணந்து கொள்கிறேன்' என்றாள்.

'ஆமாம், கடிதம் எழுதியும் வராவிட்டாலோ'

'நாம் ஒரு தவணை குறிப்பிட்டெழுதுவோம். அதற்குள் வாராவிடில் உங்கள் வேலையை நீங்கள் துவக்கலாம்'

'சரி, முகூர்த்தம் இன்னும் 25 நாட்கள் இருக்கின்றன. அதற்குள் வந்து ஒப்பந்தத்தை ரத்துசெய்து கொள்ளாவிடில்

திருமணம் நடந்து விட்டதாகக் கருதிக்கொள் என்று எழுது' என்றார் முதலியார். அவ்விதமே நீலாவதி கடிதம் எழுதிக் கைகாட்டிட்டாள். முதலியார் படித்துப் பார்த்துவிட்டுக் கடிதத்தைத் தபாலுக்கு அனுப்பினர்.

* * *

கடிதம் எழுதிய மறுநாள் முதல் நீலாவதிக்கு ஜுரம் அடிக்கத் தொடங்கிற்று. பத்துநாள் கடினமான ஜுரமாயிருந்து 11-வது நாள் முதல் சிறிது மூளைக்கோளாறும் ஏற்பட ஆரம்பித்தன. 'புஷ்பராஜ், புஷ்பராஜ்' என்று தானாகப் பேச ஆரம்பித்தாள். மாந்திரீகம், ஜோதிடம், வைத்தியம் ஒன்றும் பலிக்கவில்லை. நாளுக்கு நாள் ஜுரம் அதிகரித்துப் பித்தம் தலைக்கேறின. திருமணம் சடிதியில் முடித்துவிட்டால் எல்லாம் சரியாய் விடுமென்று வைத்தியர்கள் சொன்னார்கள்.

இதற்குள்ளாக தேதியும் 21, 22, தீர்ந்து, 23 ம் ஆய்விட்டது. ஆனால் புஷ்பராஜு வந்தபாடில்லை. 24 ந் தேதி காலையிலிருந்து நீலாவதி திடீரெனத் தன் நிலையை அடைந்தாள். பித்தம் தணிந்து ஜுரம் நின்றுவிட்டது. அன்றைய தினமெல்லாம் அவள் சந்தோஷமாகவே காணப்பட்டாள். புஷ்பராஜு வராவிடில் பாதகமில்லையென்றும் தன் கடமை தீர்ந்து விட்டதென்றும், ஆதலால் விவாகம் நடத்துவதைப்பற்றித் தனக்கொன்றும் ஆக்ஷேபணையில்லையென்றும் சொன்னாள் நீலாவதி

நீலாவதியின் குணம் இவ்விதம் மாறுபடுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லையாதலால் எல்லோருக்கும் இது ஆச்சரியமாகவே யிருந்தது. அதிலும் முதலியாருக்கும் பாலகிருஷ்ணனுக்கும் உண்டான ஆனந்தத்திற்கோரளவேயில்லை. மாந்திரீகர்கள், வைத்தியர்கள் தாதிகள் முதலியோர் கைநிறையப் பொன் பெற்றுச் சென்றனர்.

* * *

முகூர்த்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் வெகு பொருட்செலவில் அதிவிமரிசையாய் நடந்தன. எங்கு பார்த்தாலும் பந்தல் போட்டு மகரதோரணங்கள் கட்டப்பட்டன. கலியாணப் பந்தல் பலவித வர்ணக் காகிதங்களைக்கொண்டு அலங்கரிக்கப் பட்டது. நாதஸ்வரக் கோஷ்டிகளும், பாண்டு வாத்திய கோஷ்டிகளும் வந்து சேர்ந்தன. சுருங்கக் கூறின், தத்தமங்கலம் ஓர் சொர்க்கலோகம்போல் விளங்கிற்று.

25-ம் நாட்காலை நவீன நாகரிக முறையில் பலவித உயர்ந்த ஆடையாபரணங்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டான் பாலகிருஷ்ணன். நீலாவதி தன்னை எந்த விதமாகவும் அலங்கரித்துக் கொள்ள முயற்சிக்கவில்லை. தாதிமார்களே அவர்களுடைய இஷ்டம் போல் அலங்கரித்தனர். ஸ்ரீரங்கத்தில் ஐயங்கார் கையில் பள்ளி

கொண்ட பெருமாள் எப்படியோ அப்படியே தாதிகளிடத்தில் நமது நீலாவதி விளங்கினள். அவளுடைய முகத்தில் இருளே குடி கொண்டிருந்தது.

கடைசியாக நீலாவதி—பாலகிருஷ்ணன் தம்பதிகள் இரண்டு குதிரைகள் பூட்டப்பெற்ற ஒரு அழகிய சாரட்டில் வந்தேறினர். பிள்ளையார் கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கிவிட்டு வந்து கலியாணமண்டபத்தி லமர்ந்தனர். குருக்களும் 'தர்ப்பைப் புல்' லுடன் வந்து 'ஓமம்' வளர்த்தினர். கூடியிருந்த ஜனங்கள் எல்லோ ரும் அங்கு நடக்கும் சடங்குகளைச் சந்தோஷமாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஆனல் தன் முழுக்கவனத்தையும் வெளிக் கதவண்டையே செலுத்தியிருந்த நீலாவதி திடீரென 'வந்துவிட்டார் வந்துவிட்டார்' எனச் சப்தம் செய்தாள். அடுத்த நிமிஷத்தில் புஷ்பராஜ் உள்ளே நுழைந்தான்.

'சபையோர்களே! நீங்கள் எல்லோரும் சாந்தமடைந்து உங்கள் ஆசனத்தமருங்கள். எனக்கும் நீலாவதிக்கும் ஏற்பட்டுள்ள விவாக ஒப்பந்தத்தை ரத்துசெய்யவே நான் இங்கு வந்திருக்கிறேனே தவிர வேறு எந்தவிதமான கலகத்துக்காகவும் வரவில்லை. ஆதலால் நான் நீலாவதியிடம் இரண்டொரு வார்த்தை பேச அனுமதிக்க வேண்டும்' என்ருன் புஷ்பராஜ். சபையோர் அதற்குச் சம்மதிக்க, புஷ்பராஜ் நீலாவதியிடம் சென்று 'இக்கடிதம் நீ சுயேச்சையாய் எழுதியதுதானு?' என்ருன்.

'ஆம்'

'இதில் கண்ட பிரகாரம் நமக்குள் ஏற்பட்டுள்ள விவாக ஒப்பந் தத்தை ரத்து செய்துவிட விரும்புகிருயா?'

நீலாவதி தன் தந்தையை ஓர் பார்வை பார்த்துவிட்டு, கம்மிய குரலில் 'ஆம்' என பதிலுரைத்தாள்.

அடுத்த நிமிஷம் புஷ்பராஜ் தன் கையிலணிந்திருந்த நீலாவதி யின் மோதிரத்தைக் கழற்றி அங்கு வளர்க்கப்பட்டிருந்த ஓமகுண் டத்தில் எறிந்துவிட்டு வெளியே சென்ருன். எல்லோரும் வெளியில் சென்று பார்த்தனர். ஆனல் புஷ்பராஜ் எங்கும் காணப்படவில்லை.

எல்லோரும் வந்து முன்போல் மண்டபத்தில் கூடினர். முகூர்த் தமும் நடைபெற்றது. அங்கு வந்திருந்த பிராமண தம்பதிகளுக்கு முதலியாரால் தட்சணை முதலியன தாராளமாய் அளிக்கப்பட்டன. எல்லோரும், 'தீர்க்கமாங்கல்ய சுபஸ்து' என்று வாழ்த்திச் சென் றனர். அவ்வூரிலுள்ள ஆதிதிராவிடர்கள் எல்லோரும் வந்து கூடினர். ஆனல் அன்றையதினம் கார்த்திகை சோமவாரமாகையால் 'நீச்சர்களாகிய' அவர்களுக்கு எத்தகைய தர்மமும் கொடுக்க மறுக் கப்பட்டது. என் செய்வர் பாவம்! ஜமீன்தார் வீட்டுக் கலியாண

மெனவர்து ஒரு சாண்வயிற்றுக்கு ஒரு பிடி அன்னம்கூடக் கிடைக்க வில்லையே என ஏங்கிச் சென்றனர். மத்தியானம் ஜமீன்தாருடைய பந்துமித்திரர்களுக்குச் சிறப்பாக விருந்து நடந்தது.

அன்றிரவு தம்பதிகளைப் பள்ளியறைக்குள் அனுப்பினர். பாலகிருஷ்ணன் போஜனம் முடித்துக்கொண்டு தாம்பூலம் தரித்துக் கொண்டு வாசனை திரவியம் பூசிக்கொண்டு மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு வெகு குதூகலத்துடன் நீலாவதியின் அறைக்குட் சென்றான். கதவும் தாழிடப்பட்டது.

பந்துக்கள் எல்லோரும் அன்ன மருந்திவிட்டு கொலம்பியா ரிகார்டுகளில் பாடப்பட்ட சீதாகல்யாணம் என்னும் சரித்திரத்தை கிராமபோன் பெட்டியின் மூலமாக வெகு உற்சாகத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென ஏதோவொரு சப்தம் உண்டாயிற்று. எல்லோரும் எழுந்து ஓடினர். நீலாவதியின் அறையில் 'ஐயையோ!'வென்ற சப்தம் கேட்டது. கதவைத் தட்டினர். பதிலுமில்லை கதவும் திறக்கப்படவில்லை. பயங்கரமான சப்தம் மேலும் மேலுமுண்டாயின. கதவை உடைத்து உள்ளே நுழைந்தனர். தரையில் பாலகிருஷ்ணன் மூர்ச்சையாய்க் கிடக்கக் கண்டனர். அவனது மார்பில் கத்திக்குத்து விழுந்து இரத்த வெள்ளம் பெருகிக் கொண்டிருந்தது. உடனே அவனை வேறொரு அறையில் கொண்டு போய் படுக்க வைத்துவிட்டு டாக்டருக்கு ஆள் அனுப்பிவிட்டு நீலாவதியைத் தேடினர். அவள் காணப்படவில்லை. 'நீலா! நீலா!' வென்று கூவிக்கொண்டே வீடு முழுதும் தேடினர். அவள் காணவில்லை. கடைசியாக, 'அப்பா, அக்காள் இதோ இருக்கிறாள்' என்று சுப்புராஜ் சொல்ல, எல்லோரும் அவளது அறைக்குள் போய்ப் பார்க்கும்போது, அங்கிருந்த ஒரு உயரமான அலமாரியின் பின்புறம் நீலாவதி கையில் ஏந்திய கத்தியுடன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டனர்.

இதற்குள்ளாக டாக்டரும் வந்து சேர்ந்தார். பாலகிருஷ்ணனுக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளைச் செய்துவிட்டு, நீலாவதியிடம் வந்து அவளையும் பரிசீலனை செய்து பார்த்து அவளுடைய மூளை கலங்கிவிட்டதென்றும், அவளுடைய நிலைமை அபாயமானதென்றும் தெரிவித்துவிட்டுச் சென்றார்.

அன்றிரவு முழுதும் நீலாவதி கண்மூடவேயில்லை. ஏதேதோ உளறிக்கொண்டேயிருந்தாள். அடிக்கடி 'புஷ்பராஜ்,புஷ்பராஜ்'என்று கத்துவாள். தாழிடப்பட்டிருக்கும் கதவை வந்திடிப்பாள். இவ்விதமாகப் பல சேஷ்டைகள் செய்துகொண்டிருந்து மறுநாட்காலை நீலாவதி மண்ணுலகத்தை விட்டு விண்ணுலகேகினள்.

இஃதிங்ஙனமிருக்க, மணப்பந்தலை விட்டேகிய புஷ்பராஜ் அன்று முழுதும் அவ்வூரிலேயே 'நீலா! நீலா!' என்று சொல்லித் திரிந்து

கொண்டிருந்து மறுநாட்காலை ஓர் சத்திரத்தில் பிணமாகப் படுத்துக் கொண்டிருந்தான். காதலர் இருவரையும் மயானத்திற்குக் கொண்டு வரப்பட்டு ஒன்றாக தகனம் செய்யப்பட்டன. அங்கு வந்திருந்த எல்லோரும் காதலின்சக்தி எத்தன்மைய தென்பதைப் பற்றியும், எப்படி மனக்கோலம் பிணக்கோலமாக மாறினதென்றும், பலவாறு கப் பேசிக்கொண்டு அவரவர்கள் வீடுகளுக்கேகினர்.


டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

லெக்ஷ்மணஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

லங்கா குரோஸரீ ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

எம். வி. ராமச்சந்திரன்,
162, அம்மாபேட்டை மெயின் ரோட், சேலம்.

N. A. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி. வலையபட்டி
பொன்னமாவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# ‘விஜயராம் அல்லது போலிச்சாமியார்’

[எம். எஸ். ஜெய்லானி]

[ஓர் துப்பறியும் நாவல்]

(சென்றமாதத் தொடர்ச்சி)

நாகரத்தினம் தனது இல்லத்தை நெருங்கியதும், தோழர்கள் இருவரையும் நோக்கி, நண்பர்காள்! நாம் சென்ற ஈராண்டுகளாய்த் தோழர்களா யிருந்தும், இதுவரைத் தாங்கள் என்னுடைய அறைக்கு விஜயம் செய்யா திருப்பதை எண்ணி என் மனம் வருந்துகிறது. ஆகலான் தாங்கள் இச்சமயம் அவசியம் என்னுடைய அறைக்குவந்து அடியேனைக் களிப்பிக்கவேண்டுகிறேன்’ என்று அன்புடன் கூறினான். நண்பர்கள் இருவரும் பள்ளித்தோழனின் வேண்டுகோளை மறுக்க முடியாதவர்களாய் அறையை நோக்கி நடந்தனர். அம்மூவரும் அறையை நெருங்கியகாலத்து, அறையினின்றும், வள்ளிக்கொடிபோன்று வளைகின்ற இடையினை வாய்ந்தமங்கையிற் சிறந்த ஓர் ஆரணங்கு வெளிப்பட்டுமயிலைப்போல் அடிகள் பெயர்த்து வைத்து அன்னம்போன்று நடந்து தன் இல்லத்தை நாடி நடந்தனள். வீட்டின் கதவை நெருங்கியதும் வந்தவர்கள் யார் என்று அறியத் திரும்பியக் காலத்து, மானின்விழியை யொத்த அவள் கண்கள் அங்குநின்ற ஜெயாரமன் மேல் பாய்ந்தது. அவ்விருவர்களுடைய விழிகளும், ஒன்றுடன் ஒன்று உரையாடுவதுபோன்று சந்தித்தன. அப்பூங்கொடியாள் அங்குநின்ற ஜெயாரமனை உற்றுநோக்கி ‘அன்றுதபாலாபீஸிற்கு அருகில் நான்கண்ட வாலிபரையும், எனது மனதைக் கொள்ளைகொண்ட செல்வனையும் மறுமுறை பார்க்கச் சந்தர்ப்பம் வாய்ந்ததே’ என்று எண்ணி அளவிலா உவகையுடன், புன்முறுவல் ததும்பிய வதனத்துடன், பெண்களுக்கு இன்றியமையாத நாணத்தால் தூண்டப்பட்டு இல்லத்தினுள் நுழைந்தனள்.

நமது ஜெயாரமனும், அம்மதிமுகத்து மங்கையினை கண்ணுற்றதும், அன்று தான் மாலையில் கண்ட தன் காதல்கருங்குயில் அன்னவளே என அறிந்து பஞ்சகாலத்தில் மழையைக்கண்ட பூமியைப்போல் போனந்தம் கொண்டவனாய் அறையை அடைந்தான்.

அங்கு நண்பர்கள் மூவரும் குளிர்ந்த, இனிய, சுவைமிகுந்த பானத்தைப்பருகித் தாம்பூலம் தரித்துக்கொண்டு உரையாடிக்

கொண்டிருந்தார்கள். நமது விஜயாளும் இல்லத்தின் வாயலில்வந்து நின்று ஜெயராமனை எட்டிப்பார்ப்பதும் உள்ளே செல்வதுமாக அவனுக்குக் காக்ஷிகொடுத்துக் கொண்டிருந்தனள். சிறிதுநேரத்தில் நண்பர்கள் இருவரும் நேரமாகி விட்டதென்று சொல்லி, நாகரத்தினத்திடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடத்தை அடைந்தார்கள்.

அன்றுமுதல் நாகரத்தினம் கிளேவ்ஸ் ஹாஸ்டலுக்கு வந்து பந்து விளையாடிக் கொண்டிருந்தான். விளையாட்டு முடிந்ததும் ஜெயராமன் நாகரத்தினத்துடன் அவனுடைய அறைக்குச்சென்று சிறிதுநேரம் இருந்து விட்டு வருவான். சிலசமயங்களில் விஜயாள் தனக்குத் தெரியாத கணக்குகளைத் தன்சகோதரனிடம் கூறி ஜெயராமனைப் போட்டுக் கொடுக்கும்படி செய்வாள். நாகரத்தினம் கணக்கு எடுத்துக் கொள்ளாமல், சரித்திரம் எடுத்துவாசித்து வந்தமையால் அவனுக்குக் கணக்குத் தெரியாது. ஆனால் விஜயாள் 5-வது பாரத்திலேயே கணக்கு எடுத்து வாசித்துவருகின்றனள்.

ஜெயராமன் விஜயாளைக் கண்களால் கண்டு களிப்படைந்து வந்தானன்றி அவளுடன் உரையாடும் பாக்கியம் பெறாதவனாய் வருந்திவந்தான். இரவெல்லாம் அவன் அவளை நினைத்தே மனக்கோட்டை கட்டிவந்தமையால், நித்திரையும் சரியாக வருவதில்லை. உடம்பு நாளுக்குநாள் மெலிந்துகொண்டே வந்தது. விஜயாளும் ஜெயராமனைக் கண்டால், தன்சகோதரன் இருப்பதால் நாணமடைந்து, காதலனுடன் உரையாடச் சந்தர்ப்பம் கிடைக்காமல் வருந்தினாள்.

## அத்தியாயம் 3

### சிவ:பூஜையில் கரடி நுழைந்தது

இரவு சுமார் 9 மணி யிருக்கும், முனிசிபல் தியேட்டரின் முன் மின்சார விளக்குகள் கதிரவன்போன்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. முன் வாயலில் 'வள்ளிதிருமணம்' என்று வரைந்த அட்டைகள் எங்கும் காணப்பட்டன். ஏராளமான ஜனத்திரள் முன் வாயலில் கூடியிருந்தது. சிறிது நேரத்தில் ஆட்டம் ஆரம்பிக்கப் போவதற்கு அறிகுறியாக முதல்மணி அடிக்கப்பட்டது. வெளியில் நின்ற ஜனங்கள் எல்லோரும் உள்ளே சென்று காலியாய் இருந்த இடங்களை நிரப்பினார்கள். அத்தருணத்தில் 2 இளம் வாலிபர்கள் முதல் வகுப்பில் தங்கள் ஆசனங்களில் அமரும்தருவாயில் அருகில் வீற்றிருந்த ஒருவர் 'ஜெயா! என் இன்றையதினம் இவ்வளவு தாமதம்' என வினவினர்.

ஜெயராமன்:—'ரத்தினம்' இன்று ஒருவரும் டிராமாவிற்குச் செல்லலாகாது. சென்றால் அபராதம் விதிக்கப்படும் 'பெற்றோர்கள்

அனுப்பும் பணத்தைச் செலவழிக்கும் வழி இதுவல்ல' என்று வார்டன் நோட்டீஸ் போர்டில் அறிக்கை செய்திருந்தார். அதனால் நாங்கள் திருட்டுத்தனமாய் வார்டன் எங்கள் அறைக்கு வந்து விட்டுப் போனபின்னர் சுவர் ஏறிவெளியே வந்தோம். அதனால்தான் நேரமாயிற்று' என மொழிந்தவண்ணம் ஆசனத்தில் அமர்ந்தான். நாகரத்தினம் தன் அருகில் வீற்றிருக்கும் தன்தங்கை விஜயாளை தற்கால நாகரிகப்படி நண்பர்கள் இருவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தான். முதலிலேயே இவ்விரு இளங்காதலர்களின் விழிகள் சந்தித்ததற்கேற்ப, கைகுலுக்கியகாலத்து, கரங்கள் இரண்டும் சந்தித்ததை எண்ணி காதலர்கள் இருவரும் அளவில்லா மகிழ்வெய்தினர்.

ஆட்டமும் ஆரம்பமாயிற்று எல்லோரும் மேடையை நோக்கிக் கொண்டிருந்தார்கள். சுப்பிரமணியக் கடவுள் கிழவேடத்துடன் வள்ளியைக் கல்யாணம்செய்து கொள்ளும்படி வேண்டிக் கொள்ளும் அக்காக்ஷி நடைபெறுகையில், மழை அதிகமாக வருஷித்தது. தகரகொட்டகையாய் இருந்தமையால், மழை பெய்ததால் ஏற்பட்ட சப்தத்தில் நடிகர்கள் பாடும் பாட்டு ஒருவருக்கும் கேட்கவில்லை. ஆகலான் நடிகர்களும் பாடாது வாளா இருந்தனர். காதலர்கள் இருவரும் ஒருவருடன் ஒருவர் உரையாடும் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தமையால், சகோதரனால் அறிமுகப்படுத்தப்பட்ட காதலியும் காதலனும் உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் இவ்வாறு உல்லாசமாய் உரையாடிக் கொண்டிருப்பதை இவர்களுக்கும் பின்புறம் வீற்றிருந்த ஒருவன் ஊன்றி கவனித்துக் கொண்டிருந்தான். மழையும் ஓய்ந்தது, ஆட்டமும் முடிவடைந்தது. எல்லோரும் தங்கள் தங்கள் இல்லங்களுக்கேகினர்.

ஜெயராமன் சிலநாட்களில் பந்துவிளையாடுவதும், மற்றநாட்களில் மாலை வேளைகளில் நாகரத்தினம், கபீர், விஜயாள் இவர்களுடன் வெளியில் உலாவச் செல்வதுமாக இருந்தான். விஜயாள் தனக்குத் தெரியாத கணக்குகளை ஜெயராமனிடத்தில்தானே நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வாள். ஜெயராமனும் மிகுந்த சந்தோஷத்துடன் அவளுக்குச் சொல்லிக் கொடுப்பான். இதையறிந்த விஜயாவின் பெற்றோர்கள் மிகவும் களிப்படைந்து, ஜெயராமனை தினம் மாலையில் சிறிதுநேரம் விஜயாவிற்குக் கணக்குச் சொல்லிக் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். ஜெயராமனும் மகிழ்வுடன் ஒத்துக் கொண்டான்.

ஹா! என்ன ஆச்சரியம்! ஒருவருடன் ஒருவர் உரையாடுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டு, சோர்வு என்னும் சாகரத்தின் நடுவே தத்தளித்துக்கொண்டிருந்த காதலர்கள் ஓர் இமைப் பொழுதிற் அதை கடந்து கரையேறி அக்கரையிலுள்ள ஆனந்த

மான மதுவையுண்டு, குதூகல மடைந்தார்கள். கேவலம் இளமை நிலையாத உடம்போடு கலந்தபாசமாக இல்லாது உயிரோடு கலந்த உண்மை அன்பு என்னும் உயரிய காதலாக இருப்பின் அதையுடைய காதலர்களது குலைக்கமுடியா அன்புக்கும் பங்கம் விளைவதும் உண்டோ! அவ்வாறே நமது காதலர்களும் மனமொத்த அன்புடையவர்களாய் இருந்தார்கள். ஆனால் இதை ஒருவரும் அறிய முடியவில்லை. எல்லோரும் விஜயாவும், ஜெயாவும், 'நட்பு' என்னும் பாசக்கயிற்றால் தான் கட்டுப்பட்டுள்ளார்கள் என்று எண்ணி வாளாயிருந்தனர்.

ஒருநாள் மாலை தென்றல்காற்று மிகவும் ரம்மியமாக வீசிக்கொண்டிருந்தது அப்பொழுது கிளைவ்ஸ் ஹாஸ்டலிருந்து ஓர் இளம் வாலிபன் தூய்யவெண்மையான ஆடை அணிந்து, விசிறிமடிப்பு மடித்த சரிகை வேஷ்டி ஒன்று கழுத்தில் விளங்க தலையை ஒழுங்காக வாரிக்கொண்டு, ஆழ்ந்த யோசனையுடன், வடதிசையை நோக்கி நடக்கலானான். சிறிது நேரத்தில் அவன் ஆண்டார் தெரு முதலியார் சந்தில் முதல்மாடி வீட்டை அடைந்து, 'ரத்தினம்' எனக் கூறிய வண்ணம் திண்ணையிலுள்ள அறையினுள் பிரவேசித்தான். அறையில் தமிழரசுப் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்த பாவையொருத்தி வந்தது ஜெயராமன் என அறிந்து, ஆசனத்திலிருந்து எழுந்து கதவினருகில் நின்றுகொண்டு ஜெயராமனை வரவேற்றாள். ஜெயராமனும் அன்புகனிந்த பார்வையுடன் விஜயாளை நோக்கிய வண்ணம் அருகிலுள்ள நாற்காலியில் அமர்ந்தனன். ஜெயராமனும் விஜயாளை அமரும்படி வேண்டினான். விஜயாளும் காதலனின் வேண்டுகோளை மறுக்கமனமில்லாமல் கதவருகிலுள்ள நாற்காலியில் அமர்ந்தனள்.

ஜெயராமன்:—விஜயா! உன்னுடைய சகோதரன் ஏன் இன்றையதினம் கல்லூரிக்கு வரவில்லை? என்னுடைய அறைக்கும் வரவில்லையே! எங்குச் சென்றிருக்கின்றான் ?

அந்த அன்புகனிந்த மொழியினைச் செவியுற்ற பெண்மணியானவள் அன்று மலர்ந்த மல்லிகை மலர்போன்று பிரகாசிக்கும் வதனத்தில் புன்முறுவல் தாண்டவமாட ஜெயராமனை நோக்கி, 'இன்றையதினம் என் சகோதரர் அவசரகாரியமாய் லால்குடி சென்றிருக்கிறார். இன்று இரவுவந்து விடுவார். தாங்கள் ஏன் இன்றையதினம் தனியாக வந்திருக்கின்றீர்கள்? தங்கள் நண்பர் கபீர் எங்கே?' என வினவினள்.

ஜெயராமன்:—'தந்தை வியாதியாய் இருப்பதால் உடனே புறப்படவும்' என்று தந்திவந்தமையால் கபீர் காலையில் தஞ்சாவூர் சென்று விட்டான். அதனால்தான் நான் தனியாக வந்தேன். நாகரத்தினமும் இல்லை. அதனால் நாம் இன்றையதினம் எங்கும் வெளியில்

உலாவச் செல்வதற்கில்லை. நான் ஹாஸ்டலுக்குச் சென்று பந்து விளையாடப் போகிறேன்.

விஜயாள்:—'அன்பரே! வேண்டாம். சிறிது நேரம் வெளியில் உலாவச் சென்றுவிட்டு விரைவில் வீட்டிற்கு வந்து விடுவோம். இன்றையதினம் அதிக கணக்குகள் போடவேண்டி யிருக்கின்றது. இங்கேயே இருங்கள். நான் என் தாயாரிடத்தில் கூறி உத்திரவு பெற்றுக்கொண்டு வருகின்றேன்' என்று மொழிந்துவிட்டு தாயாரிடத்தில் விரைவில் வந்துவிடுவதாக உரைத்து உத்திரவு பெற்றுக்கொண்டு இருவரும் வெளியே புறப்பட்டனர். வழியிலுள்ள காக்ஷிகளைப் பார்த்துக்கொண்டே இப்ராஹீம் பார்க்கை அடைந்தார்கள்.

அச்சிங்காரத் தோட்டத்தின் மேற்குப் புறத்தில் அன்னத்தின் வாயிலிருந்து வெளிப்படும் தண்ணீர் தங்குவதற்காக காரையில் தொட்டிகட்டி யிருந்தது. அந்தக்காரைச் சுவற்றின் பேரில் இருவரும் வீற்றனர். அன்றையதினம் ரேடியோவில் சங்கீதம் இல்லாமையால் ஜனத்திரள் அதிகமாக இல்லை. ஆகலான் இவர்கள் வீற்றிருந்த இடத்திற்கு ஒருவரும் வரவில்லை. காதலர்கள் இருவரும் மிகவும்



அன்புடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். 'மனநட்புப் பொருந்திவிடில் பரஸ்பர அந்தரங்கம்யாவும் தானே வெளியில் கொட்டிவிடும்' என்பது போன்றும்,

'அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்'

என்ற குறளின் கருத்தை யொட்டியும் ஜெயராமன் கன்னியிற் சிறந்த மின்னிடுகாந்தியும், கண்ணினுள் மணியுமாகிய, விஜயாளிடம்

தான் அம்மடமயிலாள்மேல் கொண்ட காதலைத் தெரியப்படுத்தினன்.

விஜயாள்:—மதிமுகத்து மாமணியே! கட்டிக் கரும்பே! மணம் கமழும் மல்லிகையரும்பே! என் மேல் தாங்கள் ஆசைகொண்டிருப்பது இலவம் காத்தகிளி போலவும், கானல் நீரைக் கண்டு ஓடும் மான்போலவும், தண்ணீரில் பிரதிபிம்பிக்கும் சந்திரனைக்கண்டு அதனை பிடிக்க ஓடும் சிறிய குழந்தைகள் போலவும், விளக்கைக் கண்டு பதமென்றெண்ணி அதன்மீது பறந்து விழுந்து வருந்தும் வீட்டில் பூச்சியைப் போலவும், கேவலமான பொம்மையைக் கண்டு ஆசைப்படுவது போலவும் இருக்கின்றதேயன்றி வேறல்லவே!

ஜெயராமன்:—என் இதயத்துள் அமர்ந்து என்துக்க விருளை நீக்கும் திருவவதாரமே! கல்வியில் சிறந்தகண்ணே! நீயும் இவ்வாறு கூறுதல்தகுமோ! ஜாதிவித்தியாசம் என்ற பாகுபாடு இக்காலத்திலும் உண்டோ! உன் தந்தை ஓர் உத்தியோகஸ்தராயிருந்தும் சிறந்த தேச ஊழியராய் விளங்குகிறார். பால்யவிவாகம் செய்வதால் பலதீங்குகள் ஏற்படுகின்ற தென்றெண்ணியே அவர் உனக்கு இது வரை விவாகம் செய்யாமல் இருக்கிறார். என்னிடத்திலும் அவர் பல முறை 'நம்நாடு முன்னேற்றமடைய ஜாதி வித்தியாசத்தை அறவே ஒழிக்கவேண்டும். பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்கவேண்டும்' என்று கூறியிருக்கிறார். நானோ நாயுடுகுலத்தில் பிறந்தவன். நீயோ பிராமண குலத்தில் பிறந்தவள். அப்படி யிருந்தபோதிலும் நமது இரண்டு மனங்களும் ஒன்றாய்ப் பொருந்தி யிருக்கும்பொழுது யாது குற்றம் ஏற்படப் போகின்றது. நாமெல்லோரும் எல்லாம்வல்ல இறைவனால் படைக்கப் பட்டவர்களேயாம். அவருடைய கண்முன் நாம் எல்லோரும் சமமே. அவரவர்கள் செய்யும் தொழிலுக்கு ஏற்றபடி தான் உலகத்தில் ஜாதிகள் ஏற்பட்டனவே யல்லாமல், கடவுள் படைப்பால் இவன் உயர்ந்தவன் இவன் தாழ்ந்தவன், இவன் தீண்டப்படாதவன் என்ற வித்தியாசமே கிடையாது. அப்படியிருக்க, என் அன்பிலுறு இன்பமே, நீயும் அவ்வாறு கூறுதல் முறையாமோ!

விஜயாள்:—என் கண்ணினுள்மணியே! என் இனிய நிலாவே! தாங்கள் கூறும் வாக்கியங்கள்யாவும் உண்மையே. அதை ஒருவரும் மறுக்கமுடியாது. என் இன்பமே! தங்களுடைய மனதைச் சோதிக்கவே முதலில் அவ்வாறு கூறினேன். அவ்வாறெல்லாம் நான் எண்ணியிருப்பின் தங்களை முதல்முதல் கண்ட உடனேயே தங்கள் மேல் என் அன்பு செல்லுமோ! என்மனதில் அக்கொடிய ஜாதி வித்தியாசம் என்பதே தோன்றவில்லை. இனிமேலும் என் இருதயத்தில் அக்கொடியபாகுபாடு உதியாதென்றே எண்ணுகின்றேன். நான் என்மனதில் தங்களையே காதலனாகக் கொண்டுவிட்டேனாகையால், இனிமேல்பட தங்களைத்தவிர, வேறு ஒருவருக்கும் என் காத்தால்

மாலையிடேன். இதைத் தங்களிடம் முன்பே கூற விரும்பினேன். ஆனல் வெட்கத்தால் கூறமுடியவில்லை. தாங்கள் என்மேல் கொண்டுள்ள உள்ளன்பை தெள்ளென விளக்கிக் காட்டினமையால் கூறினேன். ஆனல் என்னை அன்புடனீன்றளித்த என் அன்னையும் பிதாவும் யாது கூறுவார்களோ. ஒருக்கால் என் தந்தை சம்மதித்தபோதிலும், என் மாதா முன் காலத்துக் கொள்கைகளை குருட்டுத் தனமாய்ப் பின்பற்றிக் கொண்டிருப்பதால் சம்மதியாள் என்றே எண்ணுகின்றேன். அன்றியும் எனக்கு வயதாகிவிட்டதென்றும், விரைவில் நல்லவரனைத் தேடிக் கல்யாணம் செய்துகொடுக்கும்படியும் என் தாய் என் தந்தையை தொந்தரவு செய்கிறுள். நான் என் செய்வேன்! என் சந்திரோதயமே!

ஜெயராமன்:—பொன்னியே இவளெனப்புகன்றிடுமாறு தன்னிகரில்லா மின்னிடு காந்தியும், நன்னியவசனம் நவின்றிடு மொழியுமுடைய என் காதல் கருங்குயிலே! நீயோ இதற்கெல்லாம் அஞ்சுவது. அன்பு உண்டானல் ஆகாததும் ஆகும். மனமில்லா விட்டால் ஒன்றும் முடியாது. அன்றியும், 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினனே' என்ற சான்றோர் வாக்கை ஆய்ந்தறிந்த உனக்கும் நான் அதிகம் எடுத்துக் கூறவேண்டுமோ! அறிவிற்சிறந்த நீதான் உன் தாயாரின் மனதைப் பண்டைகாலக் கொள்கையினின்றும் விலக்கவேண்டும். உன்னையன்றி வேறோர் பெண்ணை என் கனவிலும் ஏறெடுத்தும்பாரேன். இதுசத்தியம்.

விஜயா:—'அன்பே உருக்கொண்ட என் அண்ணலே! நான் முன்பே கூறிவிட்டேன். உங்களையன்றி வேறொருவரை நான் மணம் செய்யசம்மதியேன். அப்படி மணம்செய்ய நேரிடின் தற்கொலை செய்து கொள்வேனேயல்லாது ஒருபோதும் மனம் கொடேன். நமது அன்புமிக்க காதலுக்கு அறிகுறியாக என்னுடைய கணையாழியைத் தருகின்றேன்' என்று கூறியவண்ணம் தன் மோதிரத்தைக் கழற்றிக் காதலனிடம் அன்புடன் ஈந்தனள். ஜெயராமனும், மோதிரத்தை வாங்கிக்கொண்டு, தன்மோதிரத்தைக் கழற்றி தன் காதலியின்விரலில் பூட்டியபின்னர் தானும் அணிந்து கொண்டான்.

இரவு நெருங்குவதைக்கண்ட இரு இளங்காதலர்களும், ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டு, இருவர்களுடைய இதழ்களும் முதல் முதல் சந்தித்து முத்தமாரி பெய்துகொண்டு இன்பசாகரத்தில் இருக்கும்பொழுது, 'சிவபூஜையில் கரடி நுழைந்தது' போன்று 'ஆ! விஜயா!!' என்ற குரல் அவர்கள் செவியில் ஊடுருவிப் பாய்ந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிந்து சப்தம் வந்த திசையை நோக்கினர். (தொடரும்)

# காவேரிப் புராணம்

[தி. கே. வை. நாதன்]



துலா மாதத்திலே ஒரு தினம். விடியற்காலம். வீதியிற் போய்க்கொண்டிருந்த பஜனை கோஷ்டிகளின் ஆரவாரமும், பாட்டிமார்களின் வீதியுலாப் பேச்சும் என்னைத் தூங்கவொட்டாமற் செய்துவிட்டன. இரவு வெகு நேரம் வரை கொசுக்களுடன் போராடி விட்டுத் தூங்க எத்தனித்தேனோ என்னவோ இந்தத் துலாமாதப் பிராத காலவைபவங்கள் என்னை விழிக்கச் செய்துவிட்டன.

படுத்தபடியே 'இப்போது என்ன செய்வது?' என்று ஒரு வினாவை என் நெஞ்சிற்கு விடுத்தேன். அதனுள்ளிருந்து ஒரு விநோத கட்டளை பிறந்தது. அதாவது 'ஆற்றிற்குச் சென்று நீராடிவா' என்று. அதற்கு வேண்டிய காரணங்களை என் அவயவங்களிற் சில விவாதித்தன. காதுகள் கேட்ட இசைப்பாட்டும், கண்கள் பார்த்த மக்களின் கூட்டமும் என்னையும் என் உள்ளத்தையும் ஒரு புதுமாதிரியாய் செய்துவிட்டன.

விடியற்காலம். அதுவும் பனிகலந்த சாரல். 'ஜில்' என்ற குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்துவிட்டு வெடவெடென்று நடுங்கிக்கொண்டு நிற்க யாரால் முடியும்? ஆனால் இன்று அந்தத் தள்ளாத பாட்டி—தாத்தாக்களின் காட்சியும் பாட்டும் என் பயத்தை எப்படியோ நீக்கிவிட்டன.

எழுந்து பாயைச் சுருட்டினேன். தெருவிலிறங்கிச் சற்று விசையாய் நடந்தேன். என்ன ஆச்சரியம்? நடந்த வேகத்தில் குளிருக்குப் பதிலாகச் சிறிது வேர்வைகூட என் மார்பில் தோன்றியது. ஆற்றங்கரையை அணுகினேன். காலைக்கடன்களை முடித்துக்கொண்டு நீரில் இறங்கினேன்.

படித்துறையில் கூட்டம் அதிகமாய்த்தானிருந்தது. 'அரகரா' என்ற ஒலியும் 'சம்போ மகாதேவா' என்ற சப்தமும் வானைப்போய்த்தாக்கின என்று கூடச் சொல்லலாம். பெண்பாலர்கள் மத்தியிலே அதிலும் பாலிய பாட்டிமார்களின் கூட்டத்திலே 'காவேரியம்மா! கங்காதேவீ! பாகீரதி!' என்ற பலத்த அழைப்பு. இவற்றினிடையே நானும் நுழைந்து நீரில் இடுப்பளவு இறங்கி நின்றேன்.

அப்போதுதான் கொஞ்சங் கொஞ்சமாகக் குளிரின் கைகள் என்னை அணைக்கத் தொடங்கின. உடம்பும் சிறிது ஆடத்தொடங்கியது. சில வினாடிகளில் பற்களும் படபடவென்றடித்துக் கொண்டன.

ஆனால் மறுகணமே நீரலையொன்று என் மார்பளவு உயர்ந்து என்னை நனைத்தது. அதோடு கூட்டத்தால் தள்ளப்பட்ட மாதொருத்தி என்மீது மோதப்படுவாள்போல் காணப்பட்டதால் நான் இன்னுங் கொஞ்சம் ஆழத்தில் இறங்கினேன். அப்புறம் கேட்பானேன், மூழ்கி யெழுந்தேன். குளிரெல்லாம் போன இடம் தெரியவில்லை. பற்களின் நாட்டியமும் நின்றுபோய்விட்டது.

கரையேறி உடைகளைப் பிழிந்து உடுத்திக்கொண்டு வீடுநோக்கி நான் நடையைக் கட்டியபோதுதான் கிழக்கு அடிவானத்தில் சிறிது வெளிச்சம் கண்டது.

எங்களூர் படித்துறைக்கு அருகே ஒரு கல்மண்டபம். அதன் மத்தியிலே ஒரு சிறுபீடம். அதில் வெளுத்த உச்சிக்குடுமியுடன் விபூதி ருத்திராட்சங்களை யணிந்துகொண்டு சைவப்பழமாய் அமர்ந்திருந்தார் ஒரு அந்தணர்.

அவருக்குப் பக்கத்தில் 5 முகங்களும் பிரகாசத்துடன் எரியும் குத்து விளக்கு ஒன்றும் காணப்பட்டது. அவருக்கு எதிரில் புத்தகத்தை விரித்து வைத்துக் கொள்வதற்கான விரிபலகை யொன்றிருந்தது. அதில் ஒரு பெரிய புத்தகம் திறந்தவாறு வைக்கப்பட்டிருந்தது.

அவரைச் சுற்றி பாட்டிமார்களும் தாத்தாக்களுந்தான். என்றாலும் தாத்தாக்களது எண்ணிக்கை மிகக் குறைவு. பாட்டிமார்களுக்கு மத்தியிலே ஆங்காங்கு சில சுமங்கலிகள் குத்துக்காலிட்டு அமர்ந்திருந்தனர். பீடத்தி லுள்ள அந்தணர் பெருமான் தம் எதிரேயுள்ள காவேரிப் புராணத்தைப் படிக்கிறார். வடமொழிச் சுலோகங்கள், அதன்பின் தென்மொழி வியாக்கி யானங்கள். இந்த முறையில்தான் அவரது புராணப் பிரசங்கம்.

சிறிதுநேரம் கால் கடுக்க நின்றேன். அவர் சொல்வதன் கருத்து எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆனால் பாட்டிமார்களின் தலையசைப்புமட்டும் குறையவில்லை.

வீணாக ஏன் நிற்க வேண்டும்?' என்ற கேள்வியை என் மனம் எழுப் பியது. உடனே என் கால்கள் திரும்பப் போகும் சமயம். 'இரு! இதோ நானும் வருகிறேன்!' என்ற கைசடைப் பேச்சு கூட்டத்தின் ஒரு மூலையி லிருந்து என் கண்களிற்பட்டது.

'ஆம் நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் அது ஒரு பெண்தான். ஆனால் பாவம்! துர்ப்பாக்கியவதி! உலகமேடையில் சமயக்கொள்கையின்படி அவளது நாடகம் முடிந்துவிட்டது. இளமையிலேயே அவள் இத்தகைய கோலத்தை அடைந்தது ஆறாக் கொடுமைதான்.

அவள் எழுந்தாள். தன் பித்தளைத் தூக்குத் தட்டிலிருந்த அரிசி, பருப்பு தேங்காய், பழம் முதலானவற்றை யெல்லாம் அவ்வந்தணருக்கு அருகாமையில் விரிக்கப்பட்டிருந்த ஒரு துணியின்மேல் கொட்டிவிட்டு அவரைக் கும்பிட் டாள்.

யாரோ ஒரு பக்தர் 'நான் கும்பிடுவது அரைக்கும்பிடு......' எனப் பாடினாராம். அதுபோல அவள் கும்பிடும் அரைக் கும்பிடாகத்தான் இருந் திருக்க வேண்டும் என எண்ணுகிறேன். ஏனெனில் அவள் தன் இருகை களையும் குவித்தபோது அவளது கண்கள் என்னை நோக்கின. எனது கேலிச் சிரிப்பு அவளது உள்ளத்தைச் சுருக்கென்று தைத்துகூட இருக்கும்.

மெல்ல நடந்து என்னருகில் வந்தாள். என்னுடன் சண்டைபிடிக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. ஆனால் நேரமும், இடமும் ஏற்றதாயில்லை. வழிநெடுக என்னென்னவோ பேசிக்கொண்டு போனோம். அந்தப் பேச்சின் முடிவில் 'உன்னோடு கொஞ்சம் சண்டையிட்டுப் பார்க்க வேண்டும். சாயங்காலம் 5-மணிக்கு வீட்டுக்கு வருகிறாயா?' என்றாள். 'ஆகா!' எனத் தலையசைத்துவிட்டு என் வீட்டிற்குள் நுழைந்தேன்.

அவள் சொன்ன நேரத்திற்குக் கொஞ்சம் முன்பாகவே அவள் வீட்டிற்குச் சென்றேன். திண்ணையிலிருந்த அவளது பிதாவுடன் கொஞ்சநேரம் வம்பளந்தேன். அதன்பின் அவர் கோவிலுக்குப் போக வேண்டுமென்று எழுந்து போய் விட்டார்.

வீட்டினுள்ளிருந்த அந்நங்கை 'உள்ளே வாயேன்!' என்று என்னை அழைத்தாள். வீட்டிற்குள் அவளைத் தவிர வேறு யாருமில்லை என்று எனக்குத் தெரியும். அவளது தாய் மண்ணுலகை நீத்து இரண்டு ஆண்டுகளாகின. அச்சுந்தரி பங்கஜமும் தன் கணவனைப் பறிகொடுத்துச் சற்றேறக்குறைய அவ்வளவு காலந்தானுயிற்று. அவளுக்குத் தம்பி ஒருவன் உண்டு. ஆனால் 5, 6 வயதுள்ள அவனுக்குத் தெருதானே வீடு.

என்னிடத்தில் பங்கஜத்தின் தந்தைக்குக் கொஞ்சம் விசுவாசம் உண்டு. அது காரணமாத அவளுடன் சிறுபிராயம் முதல் பழகும் உரிமையைப் பெற்றிருந்தேன். ஆனுல் அவளுக்கு மணமான பிறகு அந்த உரிமையை இழந்து விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் எங்களுக்குள் அதிகமாகப் பேச்சு வார்த்தைகள் எவையும் கிடையா.

கூடத்தில் முற்றத்தின் ஓரமாகக் காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன். சற்று தூரத்தில் ஒருகாலை உயரத்தில் மடக்கியும், மற்ருென்றைப் படுக்கையில் மடக்கியும் அமர்ந்திருந்தாள் பங்கஜம்.

'என்ன சமாச்சாரம்? என்னை நீ வரச் சொன்னது எதற்காக?'

'இரு, வந்துட்டேன்' என்று கூறிவிட்டுத் தெருக்கதவைக் கொஞ்சம் மூடிய மாதிரியில் வைத்துவிட்டு வந்து மீண்டும் முன்போல் உட்கார்ந்து கொண்டாள்.

'ஆமாம்! நான் அந்தப் புராணம் படிப்பவருக்கு என் கையில் கிடைத்ததைக் கொடுத்துவிட்டுக் கும்பிடும்போது நீ எதற்காக நகைத்தாய்?'

'அப்படியானுல் நான் என்ன அழவேண்டுமோ?' என்று குறும்பாய்க் கேட்டேன்.

'இந்த மாதிரியான வீண் வாதத்திற்கு உன்னை நான் வரச்சொல்லவில்லை. உன் சிரிப்பின் அர்த்தமென்ன என்பதை உடனே நீ கூற வேண்டும்'

'ஓகோ! இந்தச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளத்தானு இந்தக் கதவு அடைப்பு எல்லாம்!' என்றேன் மீண்டும் குறும்புத்தனமாக.

'மறுபடியும் விளையாட ஆரம்பித்து விட்டாய்......' என்ருள் அவள் சுளித்த முகத்துடன்.

'இல்லை, இல்லை இனி விளையாடவில்லை. அந்தப் புராணம் படிப்பவருக்கு அரிசி முதலான பதார்த்தங்களெல்லாம் எதற்கு?'

'அவருடைய ஜீவனத்திற்குத்தான்'

'கேவலம் வயிற்றுப் பாட்டிற்காகத்தானே அந்தப் புராணத்தைப் படிக்கிருர்?'

'அது எப்படிச் சொல்ல முடியும்? அவற்றையெல்லாம் கொடுக்கும்படி அவர் நம்மைத் தொந்தரவு செய்கிருரா? அது இல்லையே?'

'பின் எதற்காக நீ அவைகளை யெல்லாம் கொடுத்தாய்?'

'புராணத்தைச் சும்மா கேட்கக் கூடாது. அதனுல்......'

'அப்படி யார் உனக்குச் சொன்னது?'

'அந்தப் புராணத்தில் சொல்லி யிருப்பதாக அவர்தான் சொன்னாரே!'

'பேஷ்! புராணமே பொய்யா, மெய்யா என்று சந்தேகப்படுகிற இந்தக் காலத்தில் அதைப் படிப்பவருக்கு வரும்படிமேல் வரும்படியாம்! அரிசி, தானிய வகைகள் போதாதென்று தட்சிணை வேறும்! இவற்றைக் கொடுக்காது போனால்......'

'பாபம் சம்பவிக்கும்'

'என் அந்தப் புராணத்தையே கேட்காதிருந்துவிட்டால்...........'

'புண்ணியம் எப்படி வரும்?'

'ஆகா! தன் வீட்டிலுள்ள பண்டங்களையும் அவற்றுடன் கைப்பொருளை யுங் கொடுத்து ஒரு சில நிமிஷங்களுக்குள் சம்பாதிக்கும் புண்ணியத்தின் மகிமைதானென்னே! போகட்டும். இந்தப் புண்ணியம் இப்போது உனக் கெதற்கு?'

'முன் ஜென்மத்தில் செய்த பாபத்தால்தானே நான் இந்த நிலைக்கு ஆளானேன். இனியாவது.........' அவள் குரல் கம்மியது. அதற்குமேல் அவளாற் பேச முடியவில்லை.

'நீ இந்த நிலைக்கு வந்தது உனது பாபத்தின் பயனாலா? கொஞ்சம் நன்றாக யோசித்துப்பார். ஆனால் பாபம்! காவேரிப் புராணத்தைக் கேட்கக் கைப்பொருளைக் கொடுத்துக் கும்பிடுபோடும் உனக்கு என்ன விளங்கப் போகிறது?'

நீ சொல்வது ஒன்றும் உண்மையில் எனக்குப் புரியவில்லைதான். ஆனால் நீ அந்தப் புராணத்தைமட்டும் இகழ்வதாக எனக்குத் தெரிகிறது.'

'அந்தப் புராணத்தை மட்டுமல்ல நான் இகழ்வது! அதுபோன்ற மற்றப் புராணங்களையுந்தான். ஆனால் ஒன்றுமட்டும் சொல்லிவிடுகிறேன். அவை களில் எனக்கும் ஓரளவு நம்பிக்கையுண்டு. அந்நம்பிக்கை அவற்றின் கருத்து உண்மைத் தத்துவம் எனக்குப் புலப்பட்ட அளவுதான். 'அதில் எழுதப்பட் டிருக்கிறது. அந்த முனிவர் அப்படிச் சொல்லிப் போனார்' என்ற காரணங் களுக்காகவெல்லாம் நான் அதை நம்பமாட்டேன். என்னால் நம்பமுடியாததை, எனது நியாயமான உணர்ச்சியைக் கொல்லத்தக்க வகையில் எழுதியுள்ளதை நான் நம்பவேமாட்டேன். வேத சம்மதமானது என்றதால்மட்டும் அதில் நீ கருதுகிறபடி புண்ணியம் என்ற அந்த மனப்பிராந்தி என்னைப் பீடிக்காது...'

என்னவோ ஒருவித ஆவேசத்தோடு பேசினேன். அவளும் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தாள். சிறிதுநேரம் என்னை நோக்கியபடி மௌனமா யிருந்தாள். பின் அவள் என்னைப் பார்த்து,

'அப்படியானால் புராணங்களையே நம்பலாகாதா?' என்றாள்.

'நீ கேட்கும் இந்த நேர்முகமான கேள்விக்கு என்னால் விடையளிக்க முடியாது. இதே கேள்வியைச் சமயம் நேரும்போது உனது உள்ளத்திற்குப் போட்டுப் பார். அதுவே விடையளிக்கும். வேண்டுமானால் எனது நம்பிக் கையின்மையைச் சிறிது விளக்குகிறேன். நல்லது, நீ அந்தப் புராணத்தை இலவசமாகக் கேட்டால் பாபம் நேரும் என்கிறாயல்லவா?'

'ஆமாம்'

'சரி. அந்தப் பாபத்தைப் போக்கத்தானே நீ உன் வீட்டிலுள்ள பொருள்களை அவரிடம் கொடுக்கிறாய்?

'ஆமாம்'

'அப்போது அவருக்குப் பாபந்தானே சம்பவிக்கும். நீ உன்னிடத்திலுள்ள பொருள்களை வழங்கி விடுவதால் உனது பாபம் நீங்குகிறது. ஆனால் பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் அவர் பாபத்திற்கு ஆளாகிறார்'

'பங்கஜம் விழித்தாள்.

'உன்னைப்போல அங்கிருந்த எல்லோரும் தங்கள் தங்களிடத்திலுள்ள பொருள்களை வழங்குகிறார்கள். அவர்கள் எல்லாரும் தாங்கள் இலவசமாகக் கேட்ட பாபத்தைப் போக்கிக் கொள்ள'

பங்கஜம் என்னையே விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'அப்படிச் சேர்ந்த பாப மூட்டையை அவர் சுமந்துதானே தீர வேண்டும்?'

'அப்பா போதும் போதும்! உன்னோடு என்னால் பேச முடியாது'

'இல்லை. பங்கஜம்! நீ எதையும் நன்றாய் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். கண்ணில்லாத பிச்சைக்காரன் வந்தால் நாம் தடிகொண்டு அவனை அடித்துத் துரத்தி விடுகிறோம். ஆனால் மேடையில் அமர்ந்துகொண்டு 'எல்லோரும் நான் சொல்லுவதைக் கேளுங்கள். என் வயிற்றை நிரப்புங்கள்!' என்று கூறி அகப்பட்டவைகளை மூட்டைகட்டும் இத்தகைய பேர்வழிகளுக்குத் தானே நம் கை நீளுகிறது?'

'என்னவோ போ!' என்று கூறி பெருமூச்செறிந்தாள் பங்கஜம்.

நேரமாச்சு. பங்கஜம்! போகட்டுமா?' என்றேன் நான்.

'என்னதான் செய்யப்போறே? இன்னுங் கொஞ்ச நேரந்தான் இரேன்'

'இருட்டி விட்டதே! இனிநான் இருப்பது மரியாதையல்ல'

பங்கஜம் நிமிர்ந்து பார்த்தாள். அப்பால் நான் எழவில்லை. அப்போது அவள் 'ஆமாம். மறந்து போனேனே! உனது கலியாண விஷயம் என்ன ஆச்சு?'

'அதைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை. எனக்கு முன்பு மணஞ்செய்து கொண்ட நீ அடைந்த சுகம் என்ன?'

'என்னைப் போலத்தானா நீயும்?'

'எதற்கும் கொஞ்சம் துணிவுவேண்டும். பாழுஞ் சமுகத்தைச் சபித்து விட்டு எழு. அப்போது நீயும் என் ஒரு ஆண் பிள்ளையின் சுதந்தரத்தை அடைய முடியாது?'

பங்கஜத்தின் கருவிழிகளிரண்டும் என்னைக் கூர்ந்து நோக்கின. அதில் நான் எதிர்பார்த்த துணிவின் ஜோதி சுடர்விட்டு எழுந்தது. என்னை மறந்தேன். அவளருகில் தாவியமர்ந்து அவளை என் மடிமீதிருத்திக்கொண்டேன். பங்கஜம் வாய்திறவாது என்மீது சாய்ந்து கொண்டாள்.

நேரஞ்சென்றது. ஆனால் அது எங்களுக்குத் தெரியவில்லை. ஆலயத்திலிருந்து அவள் தந்தை வந்தபோதுதான் நாங்கள் பிரிந்தோம்.

# புனர் ஜென்மம் அல்லது
# பைத்தியத்தின் மர்மம்

[திருப்பூர் கே. ஆர். எஸ்]



அந்தி மயங்கும் வேளை. ஆயர்குழலூதி வீடு திரும்பும் நேரம். ஆதவன் அழகுர மலையில் புகும் அற்புதத் தோற்றம்! இளந் தென்றல் மெல்லென வீசுகின்றது. மெல்லென அசையும் தென்றலுடன் கலந்த நறுமணமலர்களின் கந்தம் நாற்புறமும் வீசுகின்றது. ராக்ஷச கர்ஜனை செய்யும் யந்திர சாலைகளெல்லாம் மௌனம் சாதித்தன!

ஓர் சாண் வயிற்றைப்பேண சங்குல்பகலற உழைக்கும் நம் நன்னாட்டுச் சகோதர சகோதரிகள் பூதத்தின் வாயினின்று தப்பிய உயிர்போன்று யந்திர சாலையை விட்டுவிட்டுத் தங்கள் இல்லம் நோக்கிச் சென்றனர். சாலையின் ஓர் புறம் ஆடவரும் மற்றோர்புறம் பெண்களுமாகச் சென்றனர். ஆடவர் கூட்டத்திடையே சற்றுப் பாட்டு வெளிக்கிளம்ப லாயிற்று.

புள்ளிமான்கள் வனத்திடையே கும்பல் கும்பலாகச் சஞ்சரிப்பதுபோல நம் கோதையர் நாலைந்துபேர் ஒன்றுகூடிச் சிறு சிறு கும்பலாகச் செல்கின்றனர். சிலர் பசியால் வருந்தி வருத்தம் பாராமல் உழைத்து, பசியால் வாடி வதங்கும் தங்கள் சிறுவர்களைப் பேணச் சில தின்பண்டங்களை வாங்கித் தத்தம் கந்தைத் துணியில் கட்டிக்கொண்டு சென்றனர். சிலர் நாள் முழுவதும் உழைத்த களைப்பின் மிகுதியால் நடக்கவும் சக்தியற்றுத் தள்ளாடித் தள்ளாடிச் சென்றனர். பருவமங்கையர் பலர் ஒன்றுகூடி ஊர் வம்பு பல பேசிக் களித்துக் கொண்டே சென்றனர். ஓர்புறம் சில வயோதிகப் பெண்கள் தங்கள் வறுமையால் மிக கஷ்டப்பட்டு வேலை செய்துவிட்டு நடக்கவும் முடியாமல் சென்றார்கள்.

'அதோ யாவர்க்கும் பின்னால் அன்னமென மென்நடை நடந்து தலை குனிந்து மின்னற் கொடியென அவள் இடை துவள வருகின்றாள் ஓர் ஆரணங்கு'

அவள் கையிலே ஓர் சோற்றுப்பானை தொங்குகின்றது. சூல் கொண்ட மேகம்போன்ற குழலும் வெண்ரோஜாப்போன்ற முகமும் கோவைக் கனிக்கு

---

அதன்பின் அதிக காலம் செல்லவில்லை. அவளது பிதாவின் உள்ளத்தையும் மெல்லத் திருப்பிவிட்டேன். எனவே எனது பங்கஜத்தின் இன்பவாழ்வு கடந்த ஆனிமாத ஆரம்பத்தில்தான் தொடங்கியது. தான் செய்ததாக எண்ணியிருந்த பாபமெல்லாம் பறந்தோடி விட்டதாக இப்போது அவளே கூறி வருகிறாள்.

---

கிதரான உதடும் முத்துக் கோர்வைபோன்ற பல் வரிசைகளும் கொண்டு முகத்தில் பெருங் கவலையும் சற்றே புன்னகையும் கொண்ட முகத்தினளாய்த் தோன்றினள். இத்தகைய மடந்தை தூய வெள்ளாடை அணிந்து பார்ப் போர் மனதைப் பரவசப்படுத்தும் சாயலுடன் நடந்து வந்தாள். இத்தகைய ஓர் மடந்தையும் தொழிற்சாலைக்குச் சென்று தன்னுடல்நலம் குன்ற வருந்தி உழைக்கவும் வேண்டுமோ! ஆம். ஆம். அவ்விதம் உழைத்தால்தான் தன்னிரு கண்போன்ற இருமுது குரவர்களையும் தன்னையும் காக்கமுடியும். இல்லை யேல் பட்டினிகிடந்து சாகவேண்டியதுதான். இதையன்றிப் பிழைக்க ஓர் மார்க்கமில்லை. இவ்வழகிக்கு இன்னும் மணகாகவில்லையா?

அந்தோ! எல்லாம்வல்ல இறைவனின் செயலாற் தனக்கு அரும் மருந் தாய்க் கிடைத்த நன்நாயகனைத் தன் பதினோராமாண்டில் கொலையில் எமனுக் குப் பலி கொடுத்துவிட்டு இப்போது கொம்பற்ற பூங்கொடி எனத் தவிக்கி றாள் நம்கோதை. இப்போது இவள் உள்ளத்தில் இந்தத் துக்கமான விஷ யங்கள் ஊடுருவிப் பாய்கிறது. இவள் மனம் சோர்வடைந்தது. நடை தளர்ந்து கண்களில் நீர்த்துளிகள் நிரம்பின. இன்னும் சில விநாடியில் ஆதவன் அஸ்தமித்து விடுவான். இவ்ள் குடிசையோ இன்னும் இரண்டு மைலுக்கப்பாலிருக்கிறது.

கூலிகளெல்லாம் வெகு தூரம் சென்றுவிட்டார்கள். நம்காரிகையோ கண்ணீர் வடித்துக்கொண்டே தீ மேல் நடப்பதுபோல் நடந்து சென்றாள். இப்போதவள் பஞ்சாலையை விட்டுவிட்டு ஒரு மைல் தூரம் சென்றுவிட்டாள். இனிச் செல்லும் வழி காட்டு வழிதான். அவ்வழியோ, குடியர்கள் கள்ளுண்டு களித்து தில்லை நடன சிகாமணியுடன் போட்டிபோடுவோர் போல ஆனந்த தாண்டவம் புரியுமிடம். இவ்வழியாகப் போகும்போதே நம் மங்கை நல்லா ளின் உள்ளம் படபடவெனப் பயத்தால் அடித்துக்கொண்டது. அந்தக் காட்டை யதிக துரிதமாகக் கடக்க எண்ணினள். இவள் கண்கள் நாற்புறமும் சுற்றிச் சுற்றி பயந்த பார்வையைச் செலுத்தி ஊன்றிப் பார்த்துக்கொண்டே சென்றன. இக்கொடுங் காட்டுவழியேதான், இவள் கணவன் கொலை செய்யப் பட்டு அடையாளங்கூடத் தெரியாமல் சித்திரவதை செய்யப்பட்ட விடம்.

அவள் காதில் யாரோ அதி விரைவாக நடந்துவரும் பூட்ஸ் சப்தம் கேட்கவே சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். சற்று அச்சம் கொண்டாள். அவளுக்குப் பின்னால் அவள் வேலை செய்யும் ஆபீஸ் முதலாளியின் மகன் மார்த்தாண்டன் அதிவிரைவாக வருவதைக் கண்டாள்.

அவன் அவளருகாமையிற் சென்றவுடன் நம் கோதை நாணிக் கோணி ஓர் ஓரமாகப் போனாள்.

மார்த்தாண்டன்:—'ஜெயா! ஏன் இன்று இவ்வளவு தாமதமாகச் செல்கிறாய்? இக்காட்டின் வழியே செல்வதென்றால் எனக்கே பயமாயிருக் கிறது. நீயோ சின்னஞ் சிறுபெண். எப்படிக் காட்டின் வழியாகப் போகப் போகிறாய்?'

ஜெயா:—ஐயா! இப்போதுதான் என்னுடன் வந்தவர்களெல்லாம் சற்று முன் செல்கின்றனர். ஏதோ கடவுள் கிருபையினால் இதுவரை ஓர்வித அபாயமுமில்லாமல் இக்காட்டின் வழியாகவேதான் சென்றுகொண்டிருக் கிறேன்.'

மா:—'நானும் உங்கள் ஊருக்கு அருகாமையில் ஓர் சிறிய வேலையி னிமித்தம் வருகிறேன். அன்றியும் உன்னுடன் சில வார்த்தைகள் பேச வேண்டுமென்று அதிக நாட்களாக ஆவல்'

ஜெயா:—'ஐயா, இந்த ஏழையிடம் தாங்கள் என்னபேச வேண்டி யிருக்கிறது. அவ்விதம் பேசச் சற்றும் பிரமேயமே யில்லையென எண்ணு கிறேன்'

மா:—இல்லை இல்லை. உன்னை நான் எங்கள் ஆபீசிவில் அன்று கண்டது முதல் உ...ன்...மே...'

ஜெயா:—'என்ன என்ன, என்னை உங்கள் ஆபீசில் கண்டது முதல்'

மா:—'உ...ன்...மே...லே...தா...ன் என்......உ......யி'

பதினயிரக்கணக்கான தொழிலாளர்
பழய காங்கிரஸ்வாதிகள்
பல பிரபலஸ்தர்கள் கூடிய
(தாராளக் கொள்கை)
தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாடு
கூடும் தேதியை எதிர்பாருங்கள்.
கூடிய சீக்கிரம் கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

ஜெயா:—'ஐயா, போதும் போதும் இனி திருவாயைத் திறக்க வேண்டாம். என்னைக்கண்டு தாங்கள் சொக்கிவிட்டீர்களா! பேஷ்! தாங்கள் படித்தபடிப்பிற்கும் தங்கள் தந்தையாரின் உதாரகுணத்திற்கும் ரொம்ப அழகு! உப்புத்தியின் திறனே திறன்.'

மா:—'சரி சரி நான் சென்னதை தெரிந்து கொண்டாயல்லவா! அதுவே எனக்கு பரமதிருப்தி

ஜெ:—'ஐயா! என்னை அவ்விதம் ஓர் பகுத்தறி வற்றவள் என எண்ண வேண்டாம். கடவுள் துணை எனக்குண்டு. உம் உதவி எனக்கு வேண்டுவ தில்லை. தாங்கள் என்னுடன் வரவேண்டுவதில்லை. முன்னே செல்லுங்கள்'

மா:—'நீ மகாப்பதிவிரதா சிரோன்மணியாகவே யிருக்கலாம். அதனால் நீ என்ன சுகமடைவாய்? என்னை நீ யன்புடன் நேசித்தால் உன்னைத் தெய்வப் பெண்ணென ஆடையாபரணங்களால் திவ்யமாயலங்கரித்து அறுசுவையுடன் அமுது ஊட்டி என்குல தெய்வமாய் உன் திருவடிகளை வணங்குவேன். நீ ராஜாத்திமாதிரி ஜோராயிருக்கலாம். இது சத்தியம்'

ஜெயலக்ஷ்மி என்ற அப்பெண் உண்மையில் துர்க்காதேவிபோல் ஆவேசம் கொண்டாள். கண்களில் அனற்பொறிகள் பறந்தன. மூச்சுவிடும் காற்று அனற்காற்றாய் வெளிப்பட்டது. பெண்மைக் குணத்தை அறவே விட்டாள். அவள் மருண்டவிழி அப்பாதகன் உயிரைமாய்க்கும் விழியாக மாறிற்று

ஹா! அக்காதகன்—அப்பாதகன்—அக்காமுகன் அவள் கையைப் பிடித்துக் கொண்டான். ஜெயா துள்ளிக்குதித்து தன் கையைப் பிடுங்க முயற்சித்தாள். ஆயினும் முடியவில்லை. அவள் கோபத்திற்கும் சீற்றத்திற்கும் ஓர் எல்லையில்லை. தன் வலது கரத்தில் இருந்த டிபன்பாத்திரத்தால் தன் முழுப் பலத்தையும் கொண்டு ஓங்கியடித்தாள்.

ஆ! என்னும் சப்தம். மார்த்தாண்டன் அவள் கையைவிட்டு விட்டுத் தன் தலையைப் பிடித்தபடியே பல்லை நற நற என்று கடித்துக் கொண்டே கீழே உட்கார்ந்தான். உடனே தன் அங்கவஸ்திரத்தால் தலையில் உள்ள பெருங் காயத்தைக் கட்டினான்.

மறுவினாடி மார்த்தாண்டன் ஜெயாமீது பாய்ந்தான். ஜெயாவோ அதிவேகமாக ஓடத்தொடங்கினாள். அவளைப்பின்பற்றி மார்த்தாண்டனும் ஓடலானான். மார்த்தாண்டன் அடுத்தநிமிஷம் ஜெயாவின் கூந்தலைப் பிடித்துக் கொண்டான். இதற்குள் அவன் தலையிலிருந்து வடிந்த ரத்தம் அவன் அங்கவஸ்திரத்தை நனைத்து அவன் கண்விழிக்கமுடியாதபடி அவன் முகமெங்கும் பரவியது. இக்கோரக் காட்சியைக் கண்டவுடன் ஜெயா திகிலடைந்து அப்படியே மூர்ச்சையடைந்து விட்டாள். மார்த்தாண்டன் தன் தலையில் உள்ள ரத்தைத் துடைக்க அவள் கூந்தலை விட்டான். அப்போதே ஜெயா அடியற்ற மரம்போல் சாய்ந்து விட்டாள். இரக்கம் என்பதே இன்னதென அறியாத மார்த்தாண்டன் தன் சிரசிலுள்ள காயத்தைக் கட்டிக்கொண்டு மறுபடியும் ஜெயாவை அணுகினான். தன்காலால் அவளை வேண்டியவரை உதைத்துத் தள்ளினான். அவன் கோபமும் ஆத்திரமும் ஜெயாவை அப்போதே பொடிப் பொடியாக்க முயன்றன.

'ஹா ஹா, ஆண்பிள்ளையாகிய நான் ஓர் பெண்ணால், அன்றியும் ஓர் கைம்பெண்ணால் இவ்விதக் கோலம் அடைவதா' எனக் கர்ஜித்தான்.

அந்தோ! அந்தோ! ஜெயாவின் களங்கமற்ற கற்பிற்குக் களங்கம் உண்டாகும் நாளாயிற்றே! இக்கொடுங் காட்டில் அப்பெண்ணிற்கு யார் உதவி செய்யப் போகின்றனர். வெட்கம் வெட்கம், உலகில் மார்த்தாண்டனைப் போன்ற எவ்வளவு கயவர்கள்--மடையர்கள்--விவேக சூன்யர்கள்--இம்மாதிரி கொடுஞ் செய்கைகளைத் தங்கள் பொழுது போக்காகக் கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்குப்பின் இரண்டு மணிநேரம் சென்றுவிட்டது. அதே காட்டின் வழியாக ஆயுதபாணிகளான நான்கு போலீஸ் வீரர்கள் போனார்கள். அப்போது இரவுமணி எட்டு இருக்கலாம். எங்கும் ஒரே யிருட்டு. ஆகாயத்தில்

ஓர் நட்சத்திரம் கூடக்காணப்படவில்லை. சிற்சில மின்னல்களேதான் அக் காட்டைச் சிறிது அலங்கரித்தது. நெடுந் தூரத்திற்கப்பால் கள்ளுண்டு களிக்கும் கள்வர்களின் தேகானங்கள் கணீர் கணீரென ஒலித்தன.

போலீஸ் வீரர்களில் ஒருவன் தன் சாகக்களைப் பதுங்கிப் பதுங்கி வரச் செய்து தான் மட்டும் திடீரென ஓர் மரத்தடியிலிருந்த உருவத்தின் மேல் பாய்ந்தான். அடுத்தவிநாடி போலீஸ் வீரர்கள் நால்வரும் அவ்வுருவத்தை கைப்புடைத்தனர். இதற்குள்ளாக ஓர் சேவகன் தன் மின்சார விளக்கால் ஒளி உண்டாக்கி அவ்வுருவத்தின் முகத்தை உற்று நோக்கினான். அங்கே கண்டதென்ன? ரத்த களத்திடையே ஓர் பிணம் போன்ற உருவம். தலைவிரி கோலமாய்க் கிடந்தது. அதன் மண்டையில் மிகப்பெரிய காயம்பட்டு முகமெங்கும் ரத்தம் வடிந்திருந்தது. அவ்வுருவத்தின் இரண்டு கைகளும் கால்களும் நன்றாகக் கட்டப்பட்டிருந்தது. அவ்வுருவத்தின் முகத்தை நன்றாகக் கவனித்த வீரன் 'அடடா இதென்ன அநியாயம்! நம் தெய்வ சிகாமணிக் கவுண்டர் மகன் மார்த்தாண்டனல்லவோ' எனச் சொன்னான். எல்லோரும் கூர்ந்து கவனித்தனர். அவன் மார்த்தாண்டனே!

அவனது கட்டுக்கள் நீக்கப்பட்டு அவன்மீது ஜலம் தெளிக்கப்பட்டது. பத்து நிமிடங்களுக்குப் பின் அவன் கண்விழித்தான். அவன் வாயில் ஐயோ! ஐயோ! என்ற பரிதாபக்குரல் கிளம்பிற்று. சிறிது நேரத்தில் மார்த்தாண்டன் சுயநினைவு அடைந்தான். போலீசார் விஷயத்தை விசாரித்தனர். மார்த்தாண்டன் தான் அவ்வழியாக வந்தபோது யாரோ தன்னைக் கல்லாலடித்து மண்டையை உடைத்துக் கை கால்களைக் கட்டி அவ்விடம் போட்டு விட்டுச் சென்றதாகச் சொன்னான். ஹா என்ன சமயோசித புத்தி! பின் மார்த்தாண்டன் போலீசாரால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

ஜெயா மயக்கத்திலிருந்து மீண்டும் கண்விழித்தாள். தன் தலை ஓர் வாலிபன் துடையிலிருப்பதைக் கவனித்தவுடன் அவள் உள்ளம் திடுக்கிட்டது. இதைச் சகியாத அவள் அவ்வாலிபன் மார்த்தாண்டனே என எண்ணி 'அடா பாதகா, என்னை என்ன செய்தாய்?'

ஐயோ! தெய்வமே! என்று துடிதுடித்தாள். தான் ஓர் அழகிய அறையிலிருப்பதாக கண்டாள். பின அவ்வாலிபனை உற்று நோக்கினாள். அப்பார்வையில் உயிரையே வதைக்கும் நஞ்சு கலந்ததாகக் காணப்பட்டது. ஆனால் அவள் உடனே திடுக்கிட்டாள். அவள் தன் கண்களையே நம்பவில்லை. தான் இறந்து வேறு ஏதோ ஓர் புதிய உலகத்திலிருப்பதாகவே அவளுக்குப்பட்டது.

அவ்வாலிபன்:—'ஜெயா உண்மையில் நீ ஜெயலக்ஷ்மியே! நீ சற்றும் அஞ்சாதே. அம்மார்த்தாண்டன் இப்போது மாண்டிருந்தாலுமிருக்கலாம். உன் கற்பிற்குச் சற்றுப் பங்கமில்லையென நானறிவேன்? என்றான்.

ஜெயா மீண்டும் அவ்வாலிபனை உற்றுநோக்கினாள். அவள் உள்ளத்தில் அதுவரை எங்கோ மாய்ந்து மயங்கி ஓர் மூலையிலிருந்த ஆனந்த சாகரம் கட்டிற்கடங்காமல் பொங்க அதை அவளால் சமாளிக்கவியலாமல் அவ்வாலிபனைச் சரேலெனப் பாய்ந்து கட்டித் தழுவிக்கொண்டு கோவெனக் கதறினாள். அவ்வாலிபன் யார்? அவனே ஜெயாவின் மாண்ட கணவன். ஓர் தரம் இறந்தவர்கள் மறுபடியும் உயிர்பெறல் என்ன புதுமை!

ஜெயா:—'நாதா, தாங்கள் என்னை இம்மூன்று வருடங்களாய் மறந்து எங்கு சென்றீர்கள்? தாங்கள் இறந்து கிடந்த அக்காட்டில் உங்களை என் கண்க

னால் கண்டேனே! தாங்கள் என்மேல்கொண்ட அன்பால் கண்டிப்பாக சுவர்க்கத்திலிருந்துதான் வந்திருக்க வேண்டும்'

'ஜெயசந்திரன்:—'ஜெயா, நான் கொலையுண்டதாக நினைக்கும் அந்த நாள் அதே காட்டின் வழியாக நான் கடைக்குப் போய்க்கொண்டிருந்த போது பம்பாயிலுள்ள என்னுயிர்த்தோழர் சதாசிவநேசரைக் கண்டேன். அவர் என் பள்ளித் தோழர். லக்ஷாதிபதி. என் பொருட்டுத் தம்முயிரையும் விடத் தயங்காதவர். அவர் இப்போது பம்பாயில் ஓர் சினிமாப்படம் பிடிக்கும் பெரிய ஸ்டுடியோவைக் கட்டியிருக்கிறார். அவர் தன் சொந்தப் பணத்தில் ஓர் படம் தயாரிக்க எண்ணியதால் என்னை ஓர் நடிகனாகக் கூப்பிடவே இங்கு வந்தார் நானும் அவர் எண்ணத்திற்கு உடன்பட்டு விட்டேன். உன்னிடம் இதைச் சொன்னால் நீ சம்மதிக்கமாட்டாயென எனக்குத் தெரியும்.

உன்னைச் சிலநாள் பிரிந்தாலும் பின் பலநாள் ஆனந்தப்படலாம் என எண்ணினேன்.

அப்போதுதான் ஓர் வாலிபன் கொலை செய்யப்பட்டு சற்றுத் தூரத்தில் கிடந்தான். என் நண்பருக்கே நான் யாரெனச் சந்தேகமுண்டாயிற்று. உண்மையில் நானும் இறந்து கிடந்த அந்த வாலிபனும் ஒரே மாதிரியிருந்தோம். நான் அன்றே பம்பாய் சென்றுவிட்டதால் 'என்னை யாவரும் இறந்துவிட்டதாக எண்ணுவர். நீ எப்படியும் உன் புத்தியால் சுகமாயிருப்பா'யென எண்ணி அன்றே பம்பாய் சென்றேன். அங்கே என் நண்பரால் நான் உயர்தர நடிகனாகப் பழக்கப்பட்டு இதுவரை எட்டு பிலிம்களில் கதாநாயகனாக நடித்து இரண்டரை லட்சரூபாய் சம்பாதித்து விட்டேன். நான் நடித்த 'இந்திய வீரன்' என்ற பேசும் படம் நாளை நம் ஊர்வரும். இதோ நாமிருக்கும் இந்த பங்களாவை நான் பம்பாயிலிருந்தபடியே ரூ. 5000க்கு வாங்கிவிட்டேன்' நான் உன்னை இம்மாளிகைக்கு அழைத்துவர அக்காட்டு வழியாக வந்தபோதுதான் உன்மேல் மார்த்தாண்டன் பாய்ந்தான். நான் அவனை நன்றாக உதைத்துக் கைகால்களைக் கட்டிப்போட்டுவிட்டு உன்னையிங்கே கொண்டு வந்தேன்' என்று சொல்லி முடிக்குமுன் ஓர் வண்டியில் ஜெயாவின் மாதாபிதாக்கள் அம்மாளிகைக்குள் வந்தனர்.

யாவரும் பேராச்சரியம் கொண்டார்கள். அப்பங்களாவிற்கு இப்போது 'ஆனந்த நிலயம்' என்று பெயர். யூனிவர்சல் தியேட்டரில் ஏராளமான கூட்டம். அன்றுமட்டும் 1200 வசூல் என்றால் கூட்டத்தைக் கேட்பானேன். அக்கூட்டத்தினிடையே யிரண்டு தம்பதிகள் ஆனந்தமாய் முதல் வகுப்பில் உட்கார்ந்துகொண்டு 'இந்தியவீரனின்' அபாரமான வேலையைக் கண்டு களித்துக்கொண்டிருந்தனர். அப்போது இந்தியவீரன் ஓர் கட்டத்தில் மிகக் கம்பீரமாய்ப் பாடியதைக் கேட்ட ஜனத்திரள் கரகோஷம் செய்தது. 'இந்தியவீரனாக' நடிக்கும் ஆள் யார்?

நான் நேற்று சாயந்திரம் உலாவிக் கொண்டிருந்தபோது ஓர் வாலிபனைத் தலைவிரி கோலமாய்க் கட்டி ஓர் வண்டியில் போட்டுக்கொண்டு சென்றனர். நான் விசாரித்ததில் அவ்வாலிபன் மார்த்தாண்டனென்றும், அப் பிரபு ஓர்நாள் காட்டுவழியாகப் போனபோது யாரோ திருடர்கள் மண்டையை உடைத்துவிட்டதால் பைத்தியம் பிடித்துவிட்டதாகவும் தெரிந்தது. தோழர்காள்! பைத்தியத்தின் மர்மத்தை நீங்கள் நன்கு அறிவீர்களன்றோ.

அடாது செய்தால் படாதபாடு படவேண்டியதுதானே.

# உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சலா

[காரை S. K. சாமி.]

நீங்கள் ரயில் பிரயாணம் செய்துகொண் டிருக்கிறீர்கள். வண்டி கோவைஸ்டேஷன் வந்து நின்றதும் ஒருவர் கீழே இறங்கிச் செல்கிறார். அவர் சிறிது தூரம் சென்றதும் நீங்கள் அவரை, 'யோ, யோ!' என்று கூப்பிடுகிறீர்கள். அவருக்குக் காது கேட்ப தில்லை. 'அடஎழவே அவருடைய பெயரும் தெரிய வில்லையே' என்று நினைத்துக்கொண்டே, 'ஐயா, நொண்டி! உங் கள் குடையை வைத்துவிட்டுப் போகிறீர்களே!' என்று சொல்லிக் கூப்பிடுகிறீர்கள். 'என்ன ஓய், நொண்டி கிண்டி என்கிறீர்' என்று கோபித்துக் கொள்கிறார். உண்மையிலேயே நொண்டியாயிருக்கும் போது கோபம் உண்டாவானேன்? உலக சுபாவம் தானே!

தெருவில் ஒருவன் 'ஒண்ணுக்கு' உட்கார்கிறான். போலீஸ் காரன் வந்து ஒரு 'கல்தா' கொடுத்து 'நட போலீஸ் ஸ்டேஷனுக்கு' என்று தள்ளுகிறான். 'ஏய்யா! போலீஸ் ஸ்டேஷனுக்கு வாச்சொன் னால் வருகிறேன். எதற்காக அடிக்கவேண்டும்? உங்களுக்கு அடிக் கும்படி சட்டம் இருக்கிறதா?' என்கிறான். 'சட்டவட்டம் பேசு கிறாயே?' என்று சொல்லி இன்னொரு 'கல்தா' கிடைக்கிறது. உண் மையைச் சொல்லத்தானே இன்னுமொரு கல்தா கிடைத்தது.

வாதரோகத்தால் பீடிக்கப்பட்ட ஒருவர் ஒரு வைத்தியரைக் கூப்பிட்டுத் தன்னுடைய வியாதியைத் தீர்க்கமுடியுமா என்று கேட் கிறார். வைத்தியர் 'ஒரு நொடிப்பொழுதில் குணப்படுத்தி விடுவேன்' என்று சொல்லி தன் 'சாலை' எல்லாம் அவிழ்க்கிறார். அப்போது நோயாளியின் தமையன் அவ்விடம்வந்து, 'பக்கத்து வீட்டுப் பத்ம நாபனுக்கு வந்த சாதாரண காய்ச்சலையே உங்களால் போக்க முடிய வில்லையே? இதை எங்கேயா சௌக்கியம் செய்யப் போகிறீர்?' என்கிறார். உடனே வைத்தியர் கோபமேலீட்டால் நோயாளிமேல் தன் கோபத்தை விடுகிறார். இது நியாயமா?

காரைவன பஞ்சாயத்து போர்டால் அவ்வூர் வாசிகளுக்கு எந்த விதமான நன்மையும் உண்டாவதில்லை. அதற்குக் காரணம் வரி கொடுப்போர் சங்கக் காரியதரிசியாகிய (தனக்கு எந்தவித வரியும் இல்லாத) அப்புக்குட்டி முதலியின் ஆட்சியால் ஏற்பட்ட கட்சிப்பிரதி கட்சிதான் என்றும், ஆதலால் அவருடைய கொட்டம் அடக்கப்பட வேண்டும் என்றும் ஒருவர் சொல்கிறார். உடனே அப்புக்குட்டிக்கு கின்மேல் ரோஷம் வருகிறது. வீண்வம்பிற்கு வருகிறார். உடம்பு புண்ணாய்விடுமே என்று யோஜிக்க வேண்டாமா? ஆழம் தெரிந்து காலைநீட்டுவதல்லவா அறிவுடையோர் செய்கை.

'பிராமணர்களெல்லாம் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர் களே' அவர்களுக்கு நமது நாட்டில் வேலை இல்லை' என்கிறார் ஒரு சீர்திருத்தவாதி. உடனே பிராமணர்களுக்கு ரௌத்திராகாரம் பொங்கு கிறது. 'பிராமணதுவேஷி' என்றும் 'நாஸ்திகன்' என்றும் திட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சலா?

தாசிவீட்டிற்குச் சென்று விட்டுவரும் தன் நாயகனைப் பார்த்து 'நாதா! இனியும் இத்துர்ப்பழக்கத்தை விடமாட்டேனென்கிறீர்களே! இதனால் பணம் விரயமாவதும்தவிர, கெட்ட பெயரும் பிணியு மன்றோ சம்பாதித்துக் கொள்கிறீர்கள்' என்று சொல்லிக் கண்ணீர் வடிக்கிறாள் கல்யாணியம்மாள். அவளைச் சந்தோஷப் படுத்தும் பொருட்டு, 'இல்லையடி, இனிமேல் அங்கு செல்வதில்லை. அப்படிச் சென்றால் என்னை கழுதை என்று கூப்பிடு' என்கிறான் கணவன். ஆனால் மறுநாளும் தாசிவீடு சென்று விட்டு வருகிறான். அப்போது, 'வாங்கோ, கழுதாய்' என்கிறாள் மனைவி. உடனே மிக்ககோபங் கொண்டவனாய் நையப்புடைக்கின்றான் அவள் புருஷன். இது என்ன நீதி?

கைலாயத்தின் அந்தப் புறத்தில் பார்வதியும் லக்ஷிமியும் உட் கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருக்கின்றனர். அப்போது பார்வதி லக்ஷிமியைப் பார்த்து, 'பிச்சைக்காரனுடைய தங்கையாகிய உனக்கு இவ்வளவு கௌரவம் எதற்கு?' என்கிறாள். உடனே லக்ஷிமி, 'கள வாடியின் சகோதரியாகிய உனக்கும் இவ்வளவு துடுக்கா?' என் கிறாள். இவ்வாறாக இருவரும் வெகுநேரம் தர்க்கம் செய்கின்றனர். காரணம் 'உண்மை' தானே.

'ஏது! இவனுக்கு அமாவாசை சமீபித்து விட்டது போலிருக் கிறது' என்று எண்ணி விடாதீர்கள். அப்படி ஒன்றும் எனக்குப் பைத்தியம் இல்லை. உங்களுக்கு வெறுப்பாயிருந்தால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

---

# இணையற்ற

## அயத்தங்க திராவகம்



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாதுவிருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி யதிகரிக்கும். இம்மருந்தை சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண இருபாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப் படுகிறது.

உபயோகிக்கும் விதம்:—ஒரு அவுன்சு ஜலத்தில் பெரியவர்களுக்கு 2 துளி முதல் 5 துளி வரையிலும், சிறுவர்களுக்கு 1 முதல் 3 துளி வரையிலும் காலை மாலை கொடுக்கலாம். யாதொரு பத்தியமும் இதற்கு வேண்டுவதில்லை.

## சில அபிப்பிராயங்கள்

---

அன்புள்ள மாசிலா திலக !

தாங்கள் முந்தி யனுப்பிய வி. பி. வந்து பெற்றுக்கொண்டேன். சாமான் திருப்தியாக யிருக்கிறது. நானும் ஒரு அனுபவ வைத்தியனுதலால் விலை குறைவு செய்து அனுப்பினுல் தங்கள் மருந்தை அதிகம் செலவு செய்வேன். பின்பு தங்களுதவி கண்டு தங்களுக்கு சிலோன் ஏஜண்டுமானுலு மாவேனுதலால் அதை யனுசரித்த அரைடஜன் அயத்தங்க திராவகம் (ஆறு போத்தல்) வி. பி. பார்சலில் அனுப்ப வேண்டுகிறேன்.

S. V. அக்னீஸ்வரன்.

---

ஐயா!

தாங்கள் எனக்கு ஒன்றரை மாதங்கட்கு முன் அனுப்பிய அய்த்தங்க திராவகத்தை உபயோகித்ததில் மிகவும் குணமடைந்தேன். ஆதலின் நான் அதனைத் தொடர்ச்சியாகக் கையாட விரும்புகிறேன். எனவே தொடர்ச்சியாய்ச் சாப்பிடுவதினுல் குணக்கேடு உண்டாகாதென்று தாங்கள் கருதுவீர்களாயின், உடனே வி. பி. மூலமாய் இன்னும் இரண்டு மருந்து புட்டிகளை அனுப்பக் கோருகிறேன். ஏனைய மருந்துகட்கும் அட்டவணை சாபிதா இருந்தால் அனுப்பவும்.

இங்ஙனம்

20—6—30, கண்ணுபுரம். திரு. பி. எஸ். கணேஸ்வரன்.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணு 12.**

**வியாபாரிகள் விவரம் எழுதித் தெரிந்துக்கொள்ளலாம்.**

# தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலாண உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் திட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நாம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

## அயக்காந்த செந்தூரம்

இந்தச் செந்தூரத்தில் ஒரு அரிசி எடை காலை மாலைகளில் தேனில் சாப்பிட சுரம் நீங்கும். இரத்த விருத்திக்கு இது நல்ல மருந்து. பித்தப்பாண்டு, பித்தசோகை இவைகளுக்கு வெள்ளாட்டுப் பாலில் அரிசி எடை கலந்து சாப்பிட 3 நாளில் விக்கம் நீங்கும். இரத்த விருத்திக்காகக் குளிர்ச்சியுள்ள கூழ்ப்பாண்ட லேகியத்திலாவது வேறு எந்த லேகியத்திலாவது வைத்துச் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைப்போல் இது மலம் கட்டாது என்பதே இதன் முக்கிய குணம். வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிட்டால் பசும் பாலில் சாப்பிடலாம். பாரிச வாயுவுக்கு இது நல்ல மருந்து.

இந்தச் செந்தூரம் அயம், காந்தம் இரண்டும் சேர்த்து 100 புடம் போட்டது. இதை இருமலுக்குத் தேனில் கொள்ள நீங்கி விடும். ஈளை, இருமல், காச இருமல் இவ்விரண்டையும் (பிரான்கைடிஸ் ஆஸ்தமா) மூன்று நாளில் நிறுத்தி விடும். புட்டி 1-க்கு . ரூ3.

# காங்க்ரீன்

என்னும்

# இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரி களிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தாராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்ளு தாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும் எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆறாத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

---

பிரம்மஸ்ரீ கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்கள் திவ்ய சமூகம். கனம் தங்கிய ஐயா, சுமார் $1\frac{1}{2}$ வருஷத்திற்கு முன் என்னுடைய வியாதியின் பொருட்டு தாங்களனுப்பிவித்த சகல மேக

சித்தாதி எண்ணெயும், இரணசஞ்சீவியும் எனக்குற்ற சில அசந்தர்ப்பங்களில் உபயோகிக்கமுடியாமல், இரண சஞ்சீவியை மட்டும் உபயோகித்ததில் யான் அடைந்த பலன் இச்சிறு லெட்டரில் எழுத முடியாமைக்கு வருந்துகிறேன். இது ஒரு வரப்பிரசாதமென்றே அடியேன் நினைக்கிறேன். டிசம்பரில் ஷை எண்ணெய்யும் உபயோகித்து பூரண சௌக்கியம் அடைய கடவுளை தியானிக்கிறேன். இரண சஞ்சீவியால் $\frac{3}{4}$ வாசி குணமடைந்திருக்கிறேன். ஆதலால் தயவு செய்து இன்னும் 1 புட்டி இரணசஞ்சீவியை மட்டும் V. P. P. யில் அனுப்பிவைக்கக் கோருகிறேன். அதனுடன் கியாட்லாக் ஒன்றும் சேர்த்து அனுப்பவும். மற்ற விபரம் தங்கள் வி. பி. பி. யைப் பார்த்து எழுதுகிறேன். நமஸ்காரம். தங்கள் உண்மையுள்ள,

V. Mani. V. இராதா கிருஷ்ணையர்,
12-11-1935. முனிசிபல் ஸ்கூல் உபாத்தியாயர்
கான்பாளையம் 2வது தெரு, மதுரை.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது:—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் கொஞ்சம் வலி குறைவாயிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானால் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானமிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக்கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எச்சோமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

**வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.**

**கைகண்ட பலன்** திருமயம்

**கனம்பொருந்திய டாக்டர் அவர்களுக்கு,** 13-1-24.

தாங்கள் 28-11-33ல் அனுப்பிய 'காஸ்டோலின்' என்னும் உயரிய படை மருந்தில் கொஞ்சம் எடுத்து எனது தேகத்தில் படையுள்ள பாகமெங்கணும் பூசி 1 மணி நேரத்திற்குப்பிறகு சோப்புத் தேய்த்து வெந்நீரால் கழுவிவிட்டேன். உபயோகித்த 3 நாட்களிலேயே நான் ஆச்சரியப்படும்படி படை முற்றும் நிவாரணமாயிற்று. தற்சமயம் எனது தேகத்தில் படைகளிருந்த சுவடுகள் கூடக்கிடையாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போலி வைத்தியர்கள் பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்தி பாமர மக்களை ஏமாற்றி வருகிற இக்காலத்தில் ஒரு கற்பகம் போன்று உயர்தர மருந்துகளை சகாய விலைக்குக் கொடுத்துதவும் தங்கட்கு இவ்வுலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. மேலும் தங்கள்மேலான மருந்துகளை ஒரு முறை உபயோகித்தவர்கட்கு யாம் எடுத்துக்கூற வேண்டுவதொன்றுமில்லை. தங்களின் அரிய மருந்துகளை இதுநாள்வரை அனுபவித்தறி

யாத எனது நண்பர்கள் யாவரும் தங்கள் உயர்ந்த மருந்துகளையே உபயோகிக்கும்படி சிபார்சு செய்கிறேன். தங்களன்புள்ள,

கே. ஆர். குப்புசாமிதாஸ்.

---

திருநெல்வேலி, 23—12—33.

சென்னை கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு

திருநெல்வேலி, டி. எஸ். சங்கய்ய பிள்ளை எழுதிக்கொள்வது உபயக்ஷேமம்: எனக்கு துடையின் இடுக்கிலும் சாமான்கூட்டின் மேலுமிருந்த படையானது 6 மாத காலமாக கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. தங்களுடைய (Castoline) போட்டதில் மிகவும் குணம் உண்டு. 'குணமது கைவிடேல்' என்கிற பழமொழிக்கிணங்கி என்னுடைய மற்ற சீக்குகளுக்கும் தங்களுடைய மருந்தை உபயோகித்து குணமடையலாமென்கற முழு நம்பிக்கையுடன் இந்த லட்டர் யெழுதி யிருக்கிறேன். தங்கள் அன்புள்ள,

டி. எஸ். சங்கய்ய பிள்ளை.

---

திருவாளர் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்.

அன்பு மிகுந்த ஐயா,

தாங்கள் முன் அனுப்பிய காஸ்டோலின் மருந்துகள் மிகுந்த பலனளித்தன. என் மனைவியின் முதுகிலிருந்த கருத்த தடித்த பருக்கள் பல இம்மருந்தைத் தடவித் தேய்த்து வந்ததில் தடிப்புகள் உதிர்ந்து கருத்த புள்ளிகள் மட்டும் காணப்பட்டன. இதுவும் நிறம் மாறி வருகின்றன. புடவைகட்டும் பாகமாகிய இடுப்பில் ஏற்பட்டு வெகு நாளாய்த் தொந்தரவு உண்டாகிப் புண்ணாகவும் சீழ் வந்து கொண்டுமிருந்தது இம்மருந்தைத் தடவி வந்ததால் புண் ஆறி அரிப்பும் நீங்கி அந்தத் தொந்திரவே இல்லாமல் சௌக்கியமடைந்து விட்டது என் கன்னங்களில் ஏற்பட்டிருந்த மேக நீர் தடிப்புகளுக்கும் தடவி வந்ததில் அவ்வியாதியும் அநேகமாய் நீங்கிவிட்டது. மற்றும் என் நண்பர்களுக்கும் இவைகளைப்பற்றிச் சொன்னதில் அவர்களுக்கும் வரவழைத்துக் கொடுத்ததில் அவர்களுக்கும் நல்ல பலனளித்ததாகச் சொன்னார்கள். மூலைக்காம்புகளின் அரிப்பையும் வெடிப்பையும், புண்ணையும் சொஸ்தம்பண்ணி யிருக்கிறது. பரோபகாரமும் உத்தமமானதுமான தங்கள் மருந்துகளைச் சமயம் வந்தபோது மற்றவர்களுக்கும் சொல்லிக்கொண் டிருப்பதுடன் 'தமிழரசு' பத்திரிகை மூலம் நிவர்த்தி விவரங்களைச் சொல்லி சிபார்சு செய்தும் வருகிறேன்.

அன்றியும், சமீபத்தில் தங்களிடமிருந்து வரவழைத்த 'சகல மேக சித்தாதி எண்ணெய்' நானும் என் மனைவியுமாய் மூன்று மூன்று வேளை சாப்பிட்டதில் எனக்கு தேகமெங்குமிருந்த கிரந்தி

போல் உடைந்தால் இரத்தம் முளை, சீழ் ஆகியவை வந்த சிரங்குக் கட்டிகளும் அரிப்பும் நீங்கி அவை உதிர்ந்து தோலோடு தோலாய் கருப்புத் தழும்புகளாகி, அத்தழும்புகளும் வரவர மறைந்துவிட்டன என் மனைவிக்கிருந்த அதிக உஷ்ண சம்பந்தமான வெட்டை வியாதி யும் அநேகமாய் நீங்கினதென்றே சொல்ல வேண்டும். மேலும் சாப்பிடச் செய்யலாமென்றால் இடம், பொருள் சௌகரியம் இடங் கொடுக்கவில்லை.

எனவே தங்களது அதியற்புத எண்ணெயைப்பற்றி அதிகம் சொல்ல இச்சிறிய கடிதம் போதாது.

மற்றும் இத்துடன் ஆறணு ஸ்டாம்பு அனுப்பி யிருக்கிறேன். ஒரு பாட்டில் காஸ்டோலின் அன்ரிஜிஸ்டர் பார்சலில் அனுப்பி வைக்க வேண்டுகின்றேன். இங்ஙனம்தங்களன்பு மறவாத,

பி. பரிமணப் பல்லவராயர்,

ஹெட்மாஸ்டர், போர்டு ஆண்பாடசாலை,

மேலக்கல் கண்டார்கோட்டை போஸ்டு, பொன்மலை திருச்சி.

Rangoon,

Dated 24th August 1933

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases as the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours faithfully

E. K. Panchanatham,

c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd.

Merchant Street, Rangoon.

## தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப் படும். இம்மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ் சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

நமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.

# ஆக்ஸ்பர்ட் தமிழ்ப் புத்தகங்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| சந்திராபாயும், ரத்தினாபாயும், ஈசாப் எழுதிய சில கதைகளும் | படி-ஒன்று | 0 | 2 | 6 |
| முக்தாப்பாள், கங்காபாய் | படி-இரண்டு | 0 | 3 | 6 |
| சகுந்தலா | படி-மூன்று | 0 | 2 | 6 |
| பரீட்சித்து மகாராஜன் | படி-நான்கு | 0 | 3 | 6 |
| தயாளுவன ஆமத் | படி-நான்கு | 0 | 3 | 6 |

இக்கதைகள் எளிய நடையில் குழந்தைகளின் மனதைக் கவருமாறு எழுதப்பட்டு பொருள் விளக்கும் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

நூதனமுறை தமிழ் அப்பியாஸங்கள் சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலேஜ் கிண்டர்கார்டன் சூபரிண்டெண்டெண்டு C. காடன் பீரான் இயற்றியவை.

| | | | |
|---|---|---|---|
| முதற்புத்தகம் (மூன்றாவது வகுப்பிற்கு) | 0 | 3 | 0 |
| இரண்டாம் புத்தகம் (நான்காவது வகுப்பிற்கு) | 0 | 4 | 0 |
| மூன்றாம் புத்தகம் (ஐந்தாவது வகுப்பிற்கு) | 0 | 4 | 0 |

இயற்கைப்பாட புத்தகங்கள்.

பில்லீஸ் டார்லிங் அவர்களால் எழுதப்பட்டவை.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாவது வருஷத்து பிள்ளைகளுக்கு | 0 | 4 | 0 |

மூன்றாவது, நான்காவது வருஷத்துப் பிள்ளைகளுக்கு ஆயத்தமாய் கொண்டிருக்கின்றன.

இயற்கைப்பாட வாசகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| உபாத்தியாயர் அநுபந்தம் | 0 | 8 | 0 |
| மனை இயலும் தாய் இயலும் லி இ. பார்ஸன்ஸ் அவர்களால் எழுதப்பட்டு, பி. அமிர்தம்மாள் பி. ஏ., எல். டி., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. | 1 | 0 | 0 |
| ஆக்ஸ்பர்ட் பள்ளிக்கூட தேசப்பட புத்தகம் ஜான் பார்த்தலோமியா இயற்றியது. | 0 | 12 | 0 |

ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி ப்ரெஸ்,
பாரத் பில்டிங்ஸ்,
மவுண்டரோட், மதராஸ்.




## சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைச் சாப்பிட்டால் மேக வாய்வு. கை கால் பிடிப்பு, உடம்பு வலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக் குண்டாகும் சூதகவாய்வு, சூதகவலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத் திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்து விடும். விலை ரூபா 5.

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.